இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 194 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 12 – சனிக்கிழமை 24 பிப்ரவரி 2024 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 194 : Thiruvalluvar Year - 2055 - Maasi 12 - Saturday 24 February 2024 - Kovai ★★ 16 Pages ₹ 5.00

## புதுப்பிக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா நினைவகம் -

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம் - பிப்.26 அன்று திறப்பு!

## சட்டப் பேரவையில் அனைத்து உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு !

**சென்னை, பிப். 24-**

**“சென்னை மெரினா கடற்கரையில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவிடம் மற்றும் புதுப்பிக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடம் ஆகியவற்றின் திறப்பு விழா வருகிற 26ஆம் தேதி - திங்கட்கிழமை அன்று நடைபெறும்” என சட்டமன்றப் பேரவையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள்.**

அறிவாசான், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் இதயத்தை இரவலாகப் பெற்ற ஒப்பாரும் மிக்காருமிலாத் தலைவர், “உடன் பிறப்பே” என்ற ஒற்றைச் சொல்லால் அழைத்து, அனைத்து தமிழ் மக்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் நீங்கா இடம் பெற்ற தன்னிகரில்லாத் தலைவர்; ஐந்து முறை முதல்வராக இருந்து நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 2018 ஆகஸ்ட் 7 அன்று நம்மை விட்டுப் பிரிந்தார்கள்.

சென்னை, மெரினா கடற்கரையில் அணையாச் சுடராக துயில் கொள்ளும் பேரறிஞர் அண்ணா அவர்களின் அருகிலேயே உறங்கச் சென்ற நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவிடம் அமைக்கும் பணி, தலைவர் கலைஞர் அவர்களால், “உழைப்பு, உழைப்பு” எனப் போற்றப்பட்ட திராவிட மாடல் அரசின் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் முதல்வராகப் பொறுப்பேற்றபிறகு தொடங்கப் பட்டது.

கலைஞர் நினைவகம் அமைக்கும் பணியை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு முன்னின்று முனைப்புடன் மேற்கொண்டார்.

அத்துடன் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவகத்தைப் புதுப்பிக்கும்



பணியும் சீரும், சிறப்புமாக நடைபெற்று நிறைவடைந்துள்ளது.

கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் வரலாற்றுச் சிறப்பு மிக்க இந் நினைவகம் திறப்பு நிகழ்ச்சி நடைபெறுவது, மேலும் சிறப்புச் சேர்ப்பதாக அமைந்துள்ளது.

### டாக்டர் எழிலன் கேள்வி!

இந்நிலையில் சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின் போது கழக உறுப்பினர் டாக்டர் நா. எழிலன்,

“போராட்டமே தன் வாழ்க்கை; வாழ்க்கையே தன் போராட்டம் என வாழ்ந்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர். அவருடைய இறுதிப் பயணம் ஒரு போராட்டக் களம். அந்தப் போராட்டக் களத்தில் நிதானத்தைக் கடைப்பிடித்து, சட்டப் போராட்டம்மூலம் வென்றெடுத்து, கழகத்தினரை வழி நடத்தி, தன் ஆசிரியரான அறிஞர் அண்ணா அருகில் இடத்தை வாங்கிக் கொடுத்தவர் நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள். கலைஞருடைய நினைவுச் சின்னம், சமூக நீதி சின்னம்; கலைஞருடைய நினைவுச் சின்னம், மாநில உரிமைகள் சின்னம்; கலைஞருடைய நினைவுச் சின்னம், மதச்சார்பின்மைச் சின்னம். அந்த நினைவிடம் எப்போது திறக்கப்படும்?”

- என்று கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு வருமாறு:-

**நின்ற தேர்தல்களில் எல்லாம் வென்ற தலைவர்; (மேசையைத் தட்டும் ஒலி) நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய தலைவர்; முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய நினைவிடம் அமைக்கும் பணி முழுமையடைந்திருக்கிறது.**

**தலைவர் கலைஞர் அவர்களுடைய நினைவிடம் மட்டுமல்ல; தலைவர் கலைஞர் அவர்களை உருவாக்கிய, நம் தாய்த் தமிழ்நாட்டிற்கு “தமிழ்நாடு” என்று பெயர் சூட்டிய பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) நினைவிடமும் புனரமைக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டிருக்கிறது;**

**அப்படிப் புதுப்பிக்கப்பட்டிருக்கக்கூடிய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நினைவிடமும், தலைவர் கலைஞர் அவர்களுடைய புதிய நினைவிடமும் வருகிற 26ஆம் தேதி (மேசையைத் தட்டும் ஒலி) மாலை 7.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளன என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.**

**எதற்காக இதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்றால், அந்த நிகழ்ச்சிக்கு அழைப்பிதழ் எதையும் நாங்கள் அச்சிடவில்லை. அதனை ஒரு விழாவாக இல்லாமல், நிகழ்ச்சியாக நடத்திடவே நாங்கள் விரும்பியிருக்கிறோம்; முடிவெடுத்திருக்கிறோம். ஆகவே, அந்த நிகழ்ச்சியிலே இந்த அவையில் இருக்கக்கூடிய ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, கூட்டணிக் கட்சிகள், தோழமைக் கட்சிகள் என எல்லாக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும் பங்கேற்க வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன்.**

**தமிழ்நாட்டு மக்களுக்கும் தங்கள் (பேரவைத் தலைவர்) மூலமாக அழைப்பு விடுத்து, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுத்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.2.2024) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சென்னை மெரினா கடற்கரையில், புதுப்பிக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா நினைவிடமும், புதிதாக கட்டப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடமும் 26.2.2024 அன்று மாலை திறந்து வைக்கப்படும் என்று அறிவித்து, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும், பொதுமக்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டுமென்று அழைப்பு விடுத்தார்.

## காவிரி விவகாரத்தில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பே இறுதியானது!

# தமிழ்நாட்டின் ஒப்புதலின்றி மேகதாது அணை கட்ட முடியாது !

## சட்டப்பேரவையில் அமைச்சர் துரைமுருகன் திட்டவட்ட அறிவிப்பு !

**சென்னை, பிப்.24-**

**சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் கேள்வி நேரம் முடிவுற்றதும் காவிரியில் மேகதாது அணை பிரச்சினை தொடர்பாக சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் எடுத்துக் கொள்ளப் பட்டது. இதில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, மார்க்சிஸ்ட் டி.ராமச்சந்திரன், மனித நேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா, பா.ம.க. ஜி.கே.மணி, பா.ஜ.க. வானதி சீனிவாசன் ஆகியோர் பேசினர்.**

விவாதத்திற்கு பதிலளித்து நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் உரை வருமாறு:–

ஏற்கெனவே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இதுகுறித்து ஒரு நாள் பேசுகிறபோது, இதற்கான விளக்கத்தை நான் அன்றைக்கே தெரிவித்தேன். இருந்தாலும் இன்றைக்கு கொஞ்சம் கோபத்தோடு இந்தப் பிரச்சினையை இங்கே வைத்திருக்கிறார். அவர் இன்றைக்கு சொன்ன கருத்து என்னவென்றால், Cauvery Water Management Authority என்று ஒன்றிருக்கிறது. அதில் நடந்த ஒரு விஷயத்தைத்தான் இங்கே கோபப்பட்டு சொன்னார். நீர்வளத்துறை Tribunal அமைத்தபோது, அது ஒரு தீர்ப்பு கொடுத்தது. அந்தத் தீர்ப்பை எதிர்த்து, எல்லோரும் Supreme Courtக்கு சென்றோம். Supreme Court அதன்



மீது ஒரு தீர்ப்பு கொடுத்தது. அந்தத் தீர்ப்புத்தான் இறுதியானது. அந்தத் தீர்ப்பு என்ன சொன்னது என்றால், இரண்டு மாநிலங்களுக்கும் இடையில், இந்தத் தீர்ப்பையொட்டி, நீர் பங்கிடுவதிலே பிரச்சினை ஏற்படுமானால், அதைப் பற்றி விவாதித்து, அதற்கு பரிகாரம் காணுவதற்காகத்தான் Cauvery Water Management Authority மற்றும் Cauvery Water Regulation Committeeயும் அமைத்தார்கள். ஆனால் Supreme Court சொன்னதே தவிர, நெடுநாட்களாக அந்த ஆணையத்திற்கு Cauvery Water Management Authorityக்கு தலைவரே போடவில்லை. நீண்ட நாட்களாக நியமிக்கப்படவில்லை. இப்போது நாங்கள் வலியுறுத்திய பிறகு தலைவரை நியமித்தார்கள்.

அதன்பின், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார் நாங்க போட்டோம். அப்போது எங்கள் காலத்தில் வரவில்லையென்று, உங்கள் காலத்தில் அந்தப் பிரச்சினையே வரவில்லை. ஏனென்று கேட்டால், ஆணையத்திற்கு தலைவரே இல்லை. அப்போது கூட்டமே நடக்கவில்லை. எங்களுடைய காலத்திலே கூட்டங்கள் வந்திருக்கிறது.

பிப்ரவரி மாதம் ஒன்றாம் தேதி ஓர் ஆணையத்தின் கூட்டம் நடைபெற்றது. இதற்கு முன்னால் ஒவ்வொரு முறையும் என்ன செய்வார்கள் என்றால், மேகதாது அணைப் பிரச்சினையினை கொண்டு வருவார்கள். நாம் எதிர்ப்போம், பிறகு அதை விட்டுவிடுவார்கள்.

ஒரு முறை என்ன செய்தார்கள் என்று சொன்னால், இதை மற்ற இடங்களுக்குக்கூட Central Water Commission, Forest Department, Environment Departmentற்கு அனுப்பினார்கள். DPR சரியில்லையென்று எல்லோரும் திருப்பி அனுப்பிவிட்டார்கள். ஒவ்வொரு முறையும் கொண்டு வருவார்கள், நாங்கள் சொன்னால் ஏற்றுக் கொண்டு போய்விடுவார்கள். கடைசியில் ஒரு முறை நானே Ministerகளிடம் இவர்கள் ரொம்ப தவறு செய்கிறார்கள் என்ற சொன்னபோது, இனிமேல் மேகதாது பிரச்சினையை எடுக்கக் கூடாது என்று ஒரு முடிவு செய்தார்கள்.

ஆனாலும், அவர்கள் விடுவதில்லை. அது மாதிரி, பிப்ரவரி மாதம் ஒன்றாம் தேதி நடந்த கூட்டத்திலும், இந்தப் பிரச்சினை வந்தது.

பிரச்சினை வந்தவுடன், நம்முடைய நீர்வளத் துறை Secretary அங்கு இருக்கிறார். அவர் சொன்னார் ஆரம்ப நிலையிலே இதை நாங்கள் எதிர்த்து இருக்கிறோம். இதுகுறித்து வழக்கு தொடுத்திருக்கிறோம். 2018–2019, 2022 ஆகிய நான்கு வழக்குகள் நாங்கள் ஏற்கெனவே தொடுத்திருக்கிறோம். இது பேசக் கூடாது, எடுக்கக்கூடாது என்றெல்லாம் சொல்லியிருக்கிறோம்.

தொடர்ச்சி 2-ஆம் பக்கம்

### மாபெரும் தமிழ்க்கனவுகளை முன்வைத்துச் செதுக்கப்பட்ட ‘திராவிட மாடல்’ அரசின் நிதிநிலை அறிக்கை

# தமிழர்களுடைய வாழ்வை நிச்சயம் வளம் பெறச் செய்யும்!

## பேரவையில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரை!

**சென்னை, பிப்.24-**

**“மாபெரும் தமிழ்க் கனவுகளை முன்வைத்துச் செதுக்கப்பட்ட நிதி நிலை அறிக்கை தமிழர்களுடைய வாழ்வை நிச்சயம் வளம் பெறச் செய்யும்” என்று பேரவையில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு நிதிநிலை அறிக்கைக்கான பதிலுரையில் உரையாற்றும்போது உறுதிபடக் கூறினார்.**

சட்டப்பேரவையில் அமைச்சர் தங்கம் தென்னரசு அளித்த பதிலுரை வருமாறு :-

2024-2025 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு 16 உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் அரசிற்கு வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அவர்கள் அத்தனைப் பேருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நம் மாநிலத்தில் திராவிட மாடல் அரசைத் தலைமையேற்று வழி நடத்திவரும் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வகுத்துத் தந்தப் பாதையில் பயணித்து இந்த நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றுள்ள முக்கியமான அம்சங்களை மீண்டும் நான் நினைவுகூர விரும்புகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், நாங்கள் கோட்டையிலே அமர்ந்திருந்தாலும், தமிழ்நாட்டின் கடைக்கோடியில் உள்ள குடிசைகளில் வாழும் மக்களின் நலனில்தான் நாங்கள் அக்கறைக் கொண்டிருக்கிறோம், அதுகுறித்தே நாங்கள் எண்ணிக் கொண்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டதைப் போல, இந்த அரசிற்கென்று ஒரு மாபெரும் தமிழ்க்கனவு ஒன்று உள்ளது. அதன் அம்சங்களை முன்வைத்துத் தான் நாங்கள் இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்திருக்கிறோம்.

### இந்த அரசிற்கென்று உள்ள ஒரு மாபெரும் தமிழ்க் கனவு!

நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டுச் சொன்னதைப்போல சமூக நீதி, கடைக்கோடி தமிழர் நலன், உலகை வெல்லும் இளைய தமிழகம், அறிவுசார் பொருளாதாரம், மகளிர் நலன் காக்கும் சமத்துவப் பாதை, பசுமைவழிப் பயணம், தாய் தமிழும், தமிழர் பண்பாடும் என்கின்ற இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு, நூற்றாண்டு கண்ட திராவிட இயக்கத்தின் அடிப்படைதான் சமூகநீதி என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள். அந்தச் சமூகநீதி தத்துவம் தான் இந்த நிதிநிலை அறிக்கையினுடைய ஒவ்வொரு பக்கத்திலும் பிரதிபலித்திருக்கிறது.

கடந்த ஒரு நூற்றாண்டு காலமாகத் தமிழ்நாடு செயல்படுத்திவரும் மகளிர் நலன் காக்கும் முன்னோடித் திட்டங்களின் முத்தாய்ப்பாக ஒரு கோடியே பதினைந்து இலட்சம் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்கு (மேசையைத் தட்டும் ஒலி) 13,720 கோடி ரூபாய் நிதி இந்த ஆண்டிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. நமது முதலமைச்சர் அவர்கள் பதவி யேற்றவுடன் முதல் கையெழுத்திட்ட 5 கோப்புகளில் ஒன்று விடியல் பயணத் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலமாக இதுவரை 440 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

### மாதம் ரூ.900 சேமிக்கும் பெண்கள்!

இந்தத் திட்டத்திற்காக, அரசு இந்த வருடத்திற்கு 3 ஆயிரத்து 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறது. 3 ஆயிரத்து 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறோம் என்று நாங்கள் சொல்வதைவிட, இந்தத் திட்டத்தினால் பயன்பெறும் பெண்கள் ஒவ்வொருவரும் மாதம் 900 ரூபாய் சேமிக்கிறார்கள் என்பதுதான் நமக்கெல்லாம் இருக்கக்கூடிய பெருமை. (மேசையைத் தட்டும் ஒலி) விலை மதிப்பில்லாத இந்த 900 ரூபாயின் மதிப்பை நாங்கள் நன்றாக உணர்கிறோம். அதைப் பெறக்கூடிய, பயன் பெறக்கூடிய பெண்களும் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள்; இந்த நாடே அதை உணர்ந்திருக்கிறது என்று நான் இங்கே தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியினைப் பெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பெண்கள் உயர் கல்வி பெறுவதற்கான மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டத்திற்காக 370 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் பயன்பெறுவோர் எண்ணிக்கையோ 2 இலட்சத்து 73 ஆயிரம். இதன் மூலமாக புதிய கல்லூரியிலே சேர்ந்திருக்கக்கூடிய மாணவிகளுடைய எண்ணிக்கை 34,460.

பெண்கள் உயர் கல்வி பெற வேண்டுமென்ற இந்தத் திட்டம் மட்டும் இல்லையென்றால், இத்தனை மாணவிகளுடைய எதிர்காலம் என்னவாகியிருக்கும் என்பதை கேள்விக் குறியாக நான் உங்கள் முன்னால் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### எதிர்காலத்தை வென்றெடுக்க கல்வி என்ற அறிவாயுதம் தேவை!

கல்வி என்ற அறிவாயுதத்தை வைத்துத்தான் எதிர்காலத்தை நாம் வென்றெடுக்க முடியும். அந்த அடிப்படையில்தான் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கக்கூடிய அளவில், பள்ளிகளுக்கு புதிய வகுப்பறைகள் கட்டிட 1,000 கோடி ரூபாய் இந்த அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 15 ஆயிரம் திறன் மிகுந்த வகுப்பறைகள் கட்ட, 300 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கையை அதிகமாக்கும் வகையில், 7.5 சதவிகிதம் உள் ஒதுக்கீட்டின்மூலம் 28 ஆயிரத்து 749 மாணவர்களுடைய முழு கல்வி செலவையும் அரசே ஏற்றுக்கொள்ள 511 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) புதுமைப் பெண் திட்டத்தைப் போலவே, அரசு மாணவர்கள் பயன் பெறும் வகையில் ‘தமிழ்ப்புதல்வன்’ திட்டத்திற்காக 360 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

அரசுப் பள்ளி மாணவர்கள் வெளிநாட்டிற்குச் சென்று பட்ட மேற்படிப்பை தொடர உதவித் தொகை என, அரசுப் பள்ளி மாணவர்களை சிகரம் தொட வைக்க பல்வேறு முயற்சிகள் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்று, மக்களிடத்திலே பெரும் வரவேற்பை பெற்றிருக்கின்றன.

### புதிய வறுமை ஒழிப்பு திட்டம்!

ஓர் ஆணாதிக்க சமுதாயத்தில் கணவரை இழந்த பெண்கள், தந்தையை இழந்த குழந்தைகள் காப்பற்றப்பட வேண்டியவர்கள் என்ற கருத்துகள் உண்டு. ஆனால், கள நிலவரப்படி, தாயை இழந்த பல குழந்தைகள் கேட்பாரற்று வாழ்ந்து வருவது இப்போது தெரிய வருகிறது. எனவே தான், அவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, இந்த புதிய வறுமை ஒழிப்பு திட்டத்தில், ஆதரவற்றோர், ஒற்றை பெற்றோர் குடும்பங்கள், மன நலம் குன்றியோர், மாற்றுத் திறனாளிகள் கொண்ட குடும்பத்திற்கு முன்னுரிமைக் கொடுத்து, அவர்களுக்கு உரிய உதவிகள் எல்லா வகையிலும் வழங்கப்படும்.

புற உலக சிந்தனையற்ற மதிஇறுக்கம் கொண்டவர்களுக்கு 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர்திறன் மையம் அமைக்கப்படும் என்கிற அறிவிப்பு இன்று நாடு முழுவதும் மிகப் பெரிய பாராட்டைப் பெற்று வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

### நாளிதழிலே வந்த செய்தி கொள்கை முடிவாக மாறும் அதிசயம்!

திருநங்கைகளாக தங்களை அறிவித்துக்கொண்டவர்கள் கல்லூரி படிப்பை, பெற்றோர் மற்றும் உறவினர் ஆதரவின்றி தொடர முடியாத சிக்கல் குறித்து நாளிதழிலே வெளிவந்த செய்தி ஒன்றை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றபோது, அவர்களுக்கென்றே தனியாக திட்டம் ஒன்றை வகுப்பதற்காக அவர்கள் உத்தரவிட்டார்கள். முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனைப்படி தான் திருநங்கையாக இருக்கக்கூடியவர்களின் கல்லூரி படிப்பின் முழு கல்வி செலவையும் அரசே ஏற்கும் என்ற அந்த அறிவிப்பு நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நாளிதழிலே வந்த ஒரு பெட்டி செய்தி, கொள்கை முடிவாக மாறக்கூடிய ஒரு அதிசயம் தமிழ்நாட்டில் மட்டும்தான் நிகழ்ந்திருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டு சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்சமூகத்தின் கடைக்கோடி தேடிச் சென்று உதவுவதுதான் சமூக நீதி தத்துவத்தின் திராவிட மாடல் அரசினுடைய அடிப்படை கொள்கை.

தனித்தமிழ் மாநாடு நடத்தி, புதிய மென்பொருள் தொழில்நுட்பம் உருவாக்க உரிய நிதி இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. அறிவியல் தமிழ் அறிமுகப்படுத்தப்பட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் இந்த அரசு பயணித்து வருகிறது என்பதற்கு இது மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது.

### தமிழ்நாடெங்கும் கூட்டமைப்பு திட்டங்கள்!

தமிழ்நாட்டினுடைய பசுமை வழி பயணத்தை செம்மைப்படுத்திடவும், பசுமையாற்றல் உருவாக்கிடவும், கடற்கரைகளை பாதுகாத்து நெய்தல் மீட்சி இயக்கம், கான்கிரீட் கட்டடங்களுக்கிடையே பசுமை பரப்பை உயர்த்திட நகர்ப்புற பசுமை இயக்கம், அடையாறு நதியை சீரமைப்பதற்கு மட்டுமின்றி, தமிழ்நாடு முழுவதும் நதிக்கரை மேம்பாடு, நீலக்கொடி கடற்கரைகள், மின் பேருந்துகள் என பசுமை முயற்சிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

தமிழ்நாடு எங்கும் கட்டமைப்பு திட்டங்கள் குறித்தான அறிவிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றிருக்கின்றன. சென்னை மட்டுமின்றி, தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் சாலைகள், உயர்மட்ட பாலங்கள், புதிய குடிநீர் திட்டங்கள், வட சென்னை வளர்ச்சிக்கான சிறப்பு நிதி, 3 ஆயிரம் புதிய பேருந்துகள் என தொலைநோக்கு திட்டங்கள் பலவும் இதில் இடம் பெற்றிருக்கின்றன. புதிய தொழில் வளர்ச்சியை உருவாக்கிட SIPCOT, SIDCO நிறுவனங்களின் மூலம் புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஜவுளி தொழிலை நவீனமாக்க ஒரு திட்டம். அந்தத் தொழிலை அடுத்தக் கட்டத்திற்கு கொண்டுசெல்ல தொழில்நுட்ப ஜவுளி குறித்த ஒரு புதிய திட்டமும், கொள்கையும் இந்த மாமன்றத்திலே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், பழங்குடியினர் மொழிகளைப் பாதுகாக்க ஒரு திட்டம் மிகச் சிறப்பான வகையிலே உருவாக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு மாபெரும் தமிழ்க் கனவுகளை முன்வைத்து செதுக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றிருக்கும் அறிவிப்புகள் தமிழர்களின் வாழ்வை வளம் பெறச் செய்யுமென்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

### கலைஞரின் கனவு இல்லம்!

தமிழ்நாடு அரசினுடைய நிதியிலிருந்து செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களுடைய நிலை குறித்து நான் இந்தப் பேரவையினுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். பொதுவாக ஒன்றிய அரசு சொல்கிறது. இப்போதுகூட சொல்கிறார்கள். என்ன சொல்கிறார்கள் என்று கேட்டால், ஒன்றிய அரசினுடைய திட்டங்களினுடைய பெயர்களில்தான் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை சொல்கிறது என்று ஒரு திட்டமிட்ட பிரச்சாரத்தை இப்போது அண்மைக்காலமாக ஒரு பரப்புரையாக செய்துகொண்டிருக்கிறார்கள். ஒன்றிய அரசு தங்களுடைய திட்டங்கள் என்று பெருமைகூறும் திட்டங்களிலே நம்முடைய தமிழ்நாடு அரசுதான் அதிலே பெருமளவிலே பங்கு வகிக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த மாமன்றத்திற்கு விளக்குவது என்னுடைய கடமை.



**தமிழ்நாட்டு மக்களுடைய உயிராக இருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர், அவருடைய கடனாகக் கருதுவது, வள்ளல் பெருமான் சொன்னதைப்போல, “என் கடன் பணி செய்து கிடப்பதே” (மேசையைத் தட்டும் ஒலி) என்று பணி செய்வதையே தன்னுடைய கடனாகக் கொண்டிருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்களை நான் இந்த நேரத்தில் வணங்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவர்களுடைய நல்லாட்சியில், அந்த ஆட்சி நடக்கக்கூடிய திராவிட மாடல் ஆட்சியை நாம் அனைவரும் போற்றிப் பாராட்டுகிறோம்.**

உதாரணத்திற்கு பிரதம மந்திரி வீடு வழங்கும் திட்டம். ஊரகப் பகுதிகளை நீங்கள் எடுத்துக் கொண்டால் ஒரு அலகில், ஒரு unit, ஒரு வீடு கட்டுவதற்கு அதிலே இருக்கக்கூடிய மொத்த மதிப்பீடு 1.2 இலட்சம் ரூபாய். இதிலே 72 ஆயிரம் ரூபாய் ஒன்றிய அரசினுடைய பங்காக வருகிறது. மாநில அரசினுடைய பங்கு 48 ஆயிரம் ரூபாய் நம்மிலே கொடுக்கிறோம். ஆனால், இதில் நீங்கள் குறிப்பாக கவனிக்க வேண்டியது, கிராமங்களிலே இந்த வீடுகளைக் கட்டுவதற்கு இந்தத் தொகை போதவில்லை. நாம் அங்கிருந்து பெருமளவிலே வந்திருக்கிறோம். கிராமத்தில் இந்த 1.2 இலட்சத்தில் வீடு கட்ட முடிவதில்லை. எனவே தான், கிராமப்புறங்களிலே இந்தத் தொகை போதவில்லை என்று தமிழ்நாடு அரசு additional roofing cost என்று கூடுதலாக 1.2 இலட்சம் ரூபாய் இப்போது, அதற்கு சேர்த்து வழங்குகிறோம். ஆக மொத்தம் நீங்கள் பார்த்தீர்களென்றால், ஒரு வீட்டிற்கு 2.4 இலட்சம் ரூபாய் அதற்கு மதிப்பீடாக இருக்கிறது என்றால் ஒன்றிய அரசினுடைய பங்கு வெறும் 72 ஆயிரம் ரூபாய் மட்டும்தான். ஆனால், மாநில அரசினுடைய பங்களிப்பாக கொடுக்கப்படுகிற பங்கு எவ்வளவு தெரியுமா? 1 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் நம்முடைய தமிழ்நாடு அரசு அளிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இதற்கு கொடுப்பதற்கு நாம்தான் அவர்களிடம் கெஞ்சிக் கேட்க வேண்டியிருக்கிறது. ஆனால், இந்தத் திட்டத்திற்கான நிதியில் 30 சதவிகிதம் மட்டுமே ஒன்றிய அரசிடமிருந்து வருகிறது. ஆனால், பெயர் என்ன தெரியுமா? Pradhan Mantri Awas Yojana அப்படி என்று பெயர். பெயர் பெத்த பெயராகதான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், பாகு லேது. அதற்கான, அடிப்படையான பணம் எங்கே இருந்து வருகிறது என்று கேட்டால் நாங்கள்தான் கொடுத்திருக்கிறோம். அங்கிருந்து ஒரு பணமும் வரவில்லை.

அதேபோல், நான் ஒரு வரலாற்றுச் செய்தியைச் சொல்கிறேன். நாட்டிலேயே முதன்முறையாக ஆதி திராவிட பெருமக்களுக்கு concrete வழங்கியது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தான் வழங்கினார். (மேசையைத் தட்டும் ஒலி) 1970-லே முதன்முறையாக குடிசை மாற்று வாரியத்தை அவர் வழங்கினார். அதேபோல், 2010-லே கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தை அவர் அமல்படுத்தினார். 2010-லே ‘கலைஞர் வீடு வழங்கும் திட்டம்’ வந்தது. 14 வருடங்கள் கழித்து அந்த தந்தையின் கனவை இன்றைக்கு மகன் நிறைவேற்றுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய முதலமைச்சர் அவர்கள், குடிசை இல்லாத தமிழ்நாட்டை உருவாக்குவதற்கு கலைஞருடைய ‘கனவு இல்லம்’ திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறார். எனவே, ஒன்றிய அரசினுடைய சார்பிலே வழங்கப்படும் தொகை போதாது என்றுதான் இப்போது கலைஞருடைய கனவு இல்லம் என்ற ஒரு புதிய திட்டத்தை நம்முடைய அரசு அறிமுகப்படுத்தி, இந்த வீடுகளை 3.5 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டுவதற்கு நாங்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறோம். அந்தவகையிலே, ஏற்கெனவே கட்டித் தந்திருக்கக்கூடிய 2.5 இலட்சம் பழைய வீடுகளை பராமரிப்பதற்கு 2,000 கோடி ரூபாய் இந்த நிதிநிலை அறிக்கையிலே நாம் இன்றைக்கு நிதியை அறிவித்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

### முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

கிராமப்புறங்களுடைய நிலைமை தான் இப்படி என்றால், நகர்ப்புறங்களிலே கட்டக்கூடிய பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தை எடுத்து பார்த்தால் ஒன்றிய அரசினுடைய பங்கு வெறும் 1.5 இலட்சம் ரூபாய் மட்டும்தான். ஆனால், மாநில அரசினுடைய பங்கு 7 இலட்சம் ரூபாயாக அது இருக்கிறது. அதேபோல் முதல்வருடைய கிராமச் சாலைகள் திட்டம் என்பது, பிரதம மந்திரியுடைய கிராமச் சாலைகள் திட்டத்தினுடைய இன்னொரு மறுஉருவாக்கம் என்பதாக ஒரு பிரச்சாரத்தை சொல்கிறார்கள். முதலமைச்சருடைய கிராமச் சாலைகள் திட்டத்தினுடைய முழு பணமும், முழு செலவும், முழு நிதியும் மாநில அரசு தன்னுடைய சொந்த நிதியிலிருந்துதான் செயல்படுத்தி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், மறுபுறம் நீங்கள் பார்த்தீர்களென்றால், பிரதம மந்திரியுடைய கிராமச் சாலைகள் திட்டம் PMGSY பார்த்தீர்களென்றால் 1,945 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கக்கூடிய முன்மொழிவுகளுக்கு ஒன்றிய அரசு இதுவரை எந்தவிதமான ஒப்புதலையும் தரவில்லை. அதேபோல் ஊட்டச்சத்தை உறுதிசெய்யும் மாதிரிப் பள்ளிகளுக்கு அறிவிக்கக்கூடிய திட்டங்களுக்கும் மாநில அரசு தன்னுடைய சொந்த நிதியிலிருந்து சொல்லியிருக்கிறது. நீங்கள் தேசியக் கல்விக் கொள்கையை மிகவும் உயர்வாக சொல்லிக் கொண்டு வருகிறீர்கள். அதிலும், என்ன சொல்லியிருக்கிறீர்கள்? காலை உணவு வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், எங்குமே செயல்படுத்தவில்லை. ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் மாணவர்களின் நலனைக் கொண்டுநாட்டிற்கே முன்னோடித் திட்டமாக இந்த காலை உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி வரலாற்றிலே முத்திரை பதித்திருக்கிறார். எனவே, தமிழ்நாட்டிலே அறிமுகப்படுத்தப்பட்ட திட்டங்கள்தான்

தொடர்ச்சி 4ஆம் பக்கம்



# தமிழ்நாட்டை பாரபட்சமாக நடத்துகிறது ஒன்றிய அரசு!

## தமிழ்நாட்டு மக்களை உயிராகக் கருதுகிறார் நம் முதல்வர்!

## “என் கடன் பணி செய்து கிடப்பதே!” எனப் பணியாற்றும் முதல்வர்!

## பேரவையில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரை....

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

நாடு முழுமைக்கும், முழுமையாக பின்பற்றக்கூடிய அளவிலே மாதிரி திட்டங்க ளாக இன்றைக்கு உருவாக்கி நாட்டையும் பிற மாநிலங்களையும் வழிநடத்திச் செல்லக்கூடிய நல்ல திட்டங்களாக இவை வந்திருக்கிறது.

**பேரிடர் நிவாரணமாக ஒரு சல்லிக்காசு கூட கொடுக்கவில்லை!**

பேரிடர் மேலாண்மை. மிக்ஜாம் புயல், நமது சென்னை மாநகரத்தை ஒட்டியும், அருகாமை மாவட்டங்களிலும் மிகப் பெரிய பேரழிவை ஏற்படுத்தியதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். இப்பாதிப்புகளை சீரமைப்பதற்காக, ஒன்றிய அரசிடமிருந்து 19,650 கோடி ரூபாய் மாநில அரசுக்கு நிவாரண நிதியாக வழங்க வேண்டுமென்று தொடர்ந்து கேட்டுவருகிறோம். தென்மாவட்டங்களில் வரலாறு காணாத மழையால் ஏற்பட்ட வெள்ளத்தினால், பெரும் பாதிப்பினை தூத்துக்குடி, நெல்லை, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் எதிர்கொண்டன. அதற்காக ஒன்றிய அரசிடமிருந்து தற்காலிக மற்றும் நிரந்தர சீரமைப்புப் பணிகளுக்காக 18,214 கோடி ரூபாய் நிதி வழங்குமாறு கேட்டிருக்கிறோம்.

ஒவ்வோராண்டும் பேரிடர் நிகழ்கிறதோ, இல்லையோ நான் குறிப்பிட்டுள்ள இந்தத் தொகை, மிக்ஜாம் புயலுக்காகவும், தென்மாவட்ட புயல் நிவாரண நிதியாகவும் இரண்டு கட்டங்களாக கேட்கப்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் நமக்கு என்ன வழங்கியிருக்கிறார்கள்? பேரிடர் வருகிறதோ, இல்லையோ, 15-வது நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், ஆண்டுதோறும் regular ஆக விடுவிக்கக்கூடிய மாநில பேரிடர் நிவாரண நிதியின் இரண்டாம் தவணையை மட்டும்தான் நம்மிடம் கொடுத்திருக்கிறார்கள்.

ஒன்றிய அரசு, அவ்வாறு இரண்டாவது தவணையை மட்டும் நமக்கு அளித்து விட்டு, தேர்தல் காரணங்களுக்காக, ஏதோ பெரிய அளவில் நமக்கு நிதி உதவி செய்துவிட்டது போன்று ஒரு பிம்பத்தை இன்றைக்கு தமிழ்நாட்டில் கட்டமைக்கப் பார்க்கிறார்கள். அதனைத் தொடர்ந்து, பல்வேறு குழுக்கள் தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தன. Central Committee வந்தது. அதைத் தொடர்ந்து பல ஒன்றிய அமைச்சர்கள் வருகை புரிந்தனர்.

அனைவரும் வந்தார்களேயொழிய, நான் தற்போது பேசிக்கொண்டிருக்கக்கூடிய இந்த நொடி வரையில், கிராமங்களில் சொல்லும் வார்த்தையான ஒரு அம்மஞ்ஜல்லிகூட நம்மிடம் கொடுக்காமல் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**ஒன்றிய அரசு பாரபட்சம் காட்டுவது ஏன்?**

தமிழ்நாட்டிற்கு மட்டும்தான் இந்த பாரபட்சமா என்ற கேள்வி இயற்கையாக எழுகிறது. காரணம், இது தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, 2023 ஆம் ஆண்டில் குஜராத் மாநிலத்தில் பிபர்ஜாய் புயல் வெள்ளம் ஏற்பட்டபோது, எவ்வளவு நிதி வழங்கப்பட்டதென்றால், ரூ.338 கோடி அளிக்கப்பட்டது. அஸ்ஸாம் மாநிலத்தில், 2022 ஆம் ஆண்டில் வெள்ளம் வந்தபோது, ரூ.250 கோடி நிவாரணத் தொகை அளிக்கப்பட்டது. அதே 2022 ஆம் ஆண்டில் கர்நாடக மாநிலத்தில் வெள்ளம் வந்தபோது, 939 கோடி நிவாரண நிதி வழங்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டில், குஜராத் புயலுக்கு, 1,000 கோடி ரூபாயை அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள். மத்தியப் பிரதேச மாநிலத்தில் 2021 ஆம் ஆண்டில் வெள்ளம் ஏற்பட்ட போது, 600 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டது. பீஹார் மாநிலத்தில் வெள்ளம் ஏற்பட்ட போது, 1038 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டது. கர்நாடக மாநிலத்தில் 2021 ஆம் ஆண்டில் வெள்ளம் ஏற்பட்ட போது, 1,623 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டது. ஆக, இத்தனை மாநிலங்களுக்கும் வெள்ளத்தால் ஏற்பட்ட புயல் பாதிப்புகளுக்கான நிவாரண நிதியை வழங்கியிருக்கக்கூடிய ஒன்றிய அரசு, தமிழ்நாட்டிற்கு மட்டும் இந்தப் பாரபட்சத்தை ஏன் காட்டுகிறது என்பதற்கான கேள்வியை, நான் இப்பேரவையின்முன் வைக்க விரும்புகிறேன்.

**ரூ.540 கோடியில் வெள்ள நிவாரணம்!**

இந்த ஏழை எளிய தமிழ்நாட்டு மக்கள், திராவிட மாடல் ஆட்சிக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்கின்ற ஒரே காரணத்தினால்தான், ஒன்றிய அரசு இந்தப் பாரபட்சத்தைக் காட்டுவதாக இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் 10 பைசா கூட புயல் நிவாரணமாக அளிக்காத இதே சூழ்நிலையில், நம்முடைய அரசு, மிக்ஜாம் புயலால் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களிலுள்ள 24.25 இலட்சம் குடும்பங்களுக்கு தலா 6,000 ரூபாய் என்ற அளவில், 1,486 கோடி ரூபாயை நிவாரண நிதியாக வழங்கியுள்ளது. தென்மாவட்டங்களில் கடுமையாக பாதிக்கப்பட்ட வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு 6,000/- ரூபாய் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூ.1,000/- என்று மொத்தம் 30.94 இலட்சம் குடும்பங்களுக்கு, அரசு 540 கோடி ரூபாய் செலவில் நிவாரணம் வழங்கியிருக்கிறது. சேதமடைந்த வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகள் மற்றும் பழுது பார்த்தல் செய்வதற்கு 385 கோடி ரூபாய், பயிர் சேத நிவாரண நிதியாக 250 கோடி ரூபாய், தற்காலிக மற்றும் நிரந்தர சீரமைப்பிற்காக நெடுஞ்சாலைத் துறைக்கு ரூ.725 கோடி ரூபாய், நீர்வளத் துறையின் சீரமைப்புப் பணிகளுக்காக 430 கோடி ரூபாய், சேதமடைந்த மீன்பிடிப் படகுகளுக்கு நிவாரணமாக 15 கோடி ரூபாயும், கால்நடைகள் வழங்குவதற்கு கடன், உப்பளப் பணியாளர்களுக்கான உதவித் தொகை, பள்ளி மற்றும் கல்லூரி பாடப் புத்தகங்கள் வழங்குவதற்கு போன்ற அனைத்தையும் முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

நம்முடைய பாரதப் பிரதமர் அவர்களும், அண்மையில் தூத்துக்குடி மாவட்டத்திற்கு வருவதாக நான் அறிகிறேன். நிச்சயமாக அவர்கள் வருவதற்கு முன்பாகவோ அல்லது வருவதையொட்டியோ நம்முடைய தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தமிழ்நாட்டிற்கு உரிய நிதியை ஒன்றிய அரசு வழங்கும் என்று நான் நம்புகிறேன். அதேபோன்று, விண்வெளிச் சாதனைக்கு அடிக்கல் நாட்டுவதற்கு வரக்கூடிய நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் சமவெளியில் நிகழ்ந்திருக்கக்கூடிய இந்த துயரத்தையும் கருத்திற்கொண்டு, அதைத் தணிப்பதற்கான முயற்சிகளையும் அவர்கள் மேற்கொள்வார்கள் என்ற நம்பிக்கையையும் இந்த அவையில் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மெட்ரோ இரயில் திட்டம் - 2 ஆம் கட்டம் ஒப்புதல் தராத ஒன்றிய அரசு!**

அதேபோன்று மெட்ரோ இரயில் திட்டம். 63,246 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டம் நமது மாநிலத்திலேயே மிகப் பெரும் திட்டமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அனைத்து மாநிலங்களிலும் மேற்கொள்ளக் கூடிய இதுபோன்ற மெட்ரோ இரயில் திட்டத்திற்கு ஒன்றிய அரசு தனது பங்களிப்பை வழங்குவதுதான் இரு அரசுகளுக்கும் இடையே இருக்கக்கூடிய ஓர் ஒப்பந்தம். 50 சதவிகிதம் ஒன்றிய அரசின் பங்களிப்பு மற்றும் 50 சதவிகிதம் மாநில அரசு பங்களிப்பும் ஆகும். நம்முடைய ஒன்றிய உள் துறை அமைச்சர் அவர்களும் சென்னைக்கு வருகைபுரிந்து, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் கை குலுக்கி, திட்டங்களுக்கான அடிக்கல்லை நாட்டினார்கள்.

இந்த கைகுலுக்கலை நம்பிக் கொண்டு அவர்களும் கண்மூடித்தனமாக இந்தப் பணிகளையெல்லாம் உடனடியாக ஆரம்பித்து, நடத்தலாம் என்று பார்த்தால், அந்தப் பணிகள் கைக்குலுக்குதலோடு முடிந்துவிட்டதைப் பல, கைகுலுக்கினார்களே தவிர கண் திறக்காமல் போய்விட்டார்கள் என்பதை நான் உங்களுக்கு சுட்டிக்காட்டுகிறேன். அதற்கு முன்பாகவே, அவர்கள் கடைக்கண் பார்வை காட்டியிருந்தால், நம் மாநிலம் பல ஆயிரம் கோடி ரூபாய் இன்றைக்கு சேமித்திருக்க முடியும். இந்தத் திட்டத்திற்கு 17-8-2021 அன்று திட்ட முதலீட்டு வாரியம் PIB (Project Implementation Board) ஒப்புதல் கொடுத்தது. ஆனால், சென்னை மெட்ரோ இரண்டாம் கட்டத்திற்கு ஒன்றிய அரசு இதுவரையில், எந்தவிதமான ஒப்பதலையும் தரவில்லை. இதன்காரணமாக மாநில அரசே முழு செலவையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. நமக்கு ஒப்புதல் தராமல் இருக்கும் ஒன்றிய அரசு அதேவேளையில் பார்த்தோம் என்றால், 2022-ல் நாக்பூர் மெட்ரோ இரண்டாம் கட்டம், கொச்சி மெட்ரோ இரண்டாம் கட்டத்திற்கு ஒப்புதல் அளித்திருக்கிறது. 2023-ல் குருகிராம், புனே மெட்ரோ திட்டத்திற்கும் ஒன்றிய அரசு ஒப்புதல் தந்திருக்கிறது. இந்த நியாயமற்ற செயலினால் மாநில அரசுக்கு இந்த வருடம் மட்டும் சுமார் 9,000 கோடி ரூபாயும், அடுத்த வருடம் சுமார் 12,000 கோடி ரூபாயும் கூடுதல் செலவு ஏற்பட்டிருக்கிறது. ஒன்றிய அரசு தன்னுடைய கடமையை நிறைவேற்றாததால் மாநில அரசினுடைய கடனும், பற்றாக்குறையும் மீண்டும் இதிலே அதிகரித்திருக்கிறது. ஒன்றிய அரசு மீண்டும் இந்தத் திட்டத்திற்கு விரைவில் ஒப்புதல் அளிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

இப்போது வெளிநடப்பு செய்திருக்கக்கூடிய, சமீபத்தில் மனம்மாறிய மைந்தனாக மாறியிருக்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், இதற்குக் குரல் கொடுப்பார் என்று நம்புகிறேன். நேற்று உரையாற்றியிருக்கக்கூடிய கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினரும், இதற்கு உரிய அளவிலே ஒத்துழைப்பார் என்று நான் திடமாக நம்புகிறேன்.

**தமிழ்நாட்டிற்கு தொடர்ந்து அநீதி இழைப்பதா?**

கூடுதல் வரி, மேல் வரி, cess and surcharges, நான் இங்கே ஒரு quote சொல்கிறேன். ‘எங்கள் மாநிலம் 60,000 கோடி ரூபாய் ஒன்றியத்திற்கு தருகிறது. ஆனால் எங்களுக்குத் திரும்பக் கிடைப்பது என்ன? எங்கள் மாநிலம் என்ன கையேந்தியிருக்கும் மாநிலமா?’ இப்படிக் கேட்டது யார் தெரியுமா? மாநில உரிமைகளுக்கு பெரிய பெரிய உரத்த குரல் கொடுத்தவர் வேறு யாரும் இல்லை. 2012 ஆம் ஆண்டில் குஜராத் மாநிலத்தின் முதல்வராக இருந்தவர், இன்றைய பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், அந்த மாநிலத்தினுடைய உரிமைக் குரல், குஜராத்திலே மாநில முதலமைச்சராக எழுந்தது. அவர் அன்றைக்கு குஜராத்திலிருந்து கேட்ட அதே குரலைத்தான் இங்கு தமிழ்நாட்டினுடைய உரிமைக் குரலாக இங்கேயிருந்து நாம் எழுப்புகிறோம் என்பதை நான் கவனப்படுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றிய அரசு தனது வரிகளை மாநிலங்களுக்கு எவ்வாறு பகிர்ந்தளிக்க வேண்டும் என்று ஒவ்வொரு ஐந்தாண்டும் நிதிக்குழு ஒரு பரிந்துரை செய்கிறது. 10-வது நிதிக்குழுவில் 6.64 சதவிகிதம் என்று இருந்த தனது பங்கைத் தொடர்ந்து குறைத்து,

15-வது நிதிக் குழுவில் 4.8 சதவிகிதமாக குறைத்திருக்கிறது. நிதிக்குழு தொடர்ந்து நம்முடைய மாநிலத்திற்கு அநீதியை இழைக்கிறது. இதுபோதாது என்று, ஒன்றிய அரசு தனது வரிகள்மீது, மேல் வரி மற்றும் கூடுதல் கட்டணத்தை அதாவது, cess and surcharges விதிக்கிறது.

**மாநிலத்தின் கடன் சுமை குறைந்திருக்கும்!**

நியாயமாகப் பார்த்தால் இந்தத் தொகையும் மாநில அரசோடு சேர்ந்து பகிர்ந்தளிக்க வேண்டும். ஆனால், ஒன்றிய அரசு இந்தத் தொகையைத் தானே வைத்துக்கொண்டு திட்டங்களைத் தீட்டுகிறது. 2021-2022-ல் cess and surcharges மூலம் ஒன்றிய அரசு ரூ.5.8 இலட்சம் கோடி ரூபாயை திரட்டியிருக்கிறது. 2022-2023-ல் ரூ.6.19 இலட்சம் கோடி ரூபாய், 2023-2024-ல் ரூ.6.5 இலட்சம் கோடி ரூபாய், 2024-2025-ல் ரூ.6.95 இலட்சம் கோடி ரூபாய்க்கு இப்போது திட்டமிட்டிருக்கிறது.

ஒரு கற்பனைக்கு நான் ஒன்றைச் சொல்கிறேன். கற்பனையாகத்தான் சொல்கிறேன். ஒன்றிய அரசு ஒருநாளும் கூட்டாட்சித் தத்துவத்தை கடைபிடிக்கப் போவதில்லை. நான் கற்பனையாக வைத்துக்கொண்டாலும் கூட ஒருவேளை அவர்கள் இந்தக் கூட்டாட்சித் தத்துவத்தை கடைபிடித்து, மாநில அரசுகளுக்கு இந்தத் தொகையை பகிர்ந்து கொடுத்திருப்பார்கள் என்று சொன்னால், தமிழ்நாட்டிற்கு மட்டும் 2021-2022-ல் சுமார் 9,000 கோடி ரூபாயும், 2022-2023-ல் சுமார் 10,300 கோடி ரூபாயும்,

2023-2024-ல் சுமார் 10,900 கோடி ரூபாயும், 2024-2025-ல் சுமார் 11,600 கோடி ரூபாயும் கிடைத்திருக்கும். இந்தத் தொகையெல்லாம் நம் மாநிலத்திற்கு கிடைத்திருந்தால் மாநிலத்தினுடைய கடன் சுமையும், பற்றாக்குறையும் நிச்சயமாக குறைந்திருக்கும். இது தமிழ்நாடு சம்பந்தப்பட்ட பிரச்சினை மட்டுமல்ல. ஒட்டுமொத்தமாக தென் மாநிலங்களில் முழுவதும் இந்தமாதிரிப் பிரச்சினை வந்துக் கொண்டிருக்கிறது. எனவே, இதை நான் நாடு சார்ந்த பிரச்சினையாகவே கருதுகிறேன் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மின்பகிர்மான கழக இழப்பீட்டு நிதி!**

அதேபோல மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம் TANGEDCO அதற்கான இழப்பீட்டு நிவாரண நிதியைப் பற்றி எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். அதுகுறித்து, இந்த மன்றத்திலே நான் தெளிவாக்க விரும்புகின்றேன். வரவு-செலவுத் திட்டத்திலே நான் சொன்னதைப் போல ஒன்றிய அரசு நியாயமற்ற கடுமையான நிபந்தனைகளை விதித்து, நமது நிதிநிலைமையைப் பாதிக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது.

அதில் ஒன்றாக, மாநில அரசு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மின் பகிர்மான இழப்பீட்டினை ஒன்றிய அரசு வகுத்துள்ள கணக்கீட்டிற்கு ஏற்றாற்போல், ஒவ்வொரு வருடமும் மாநில அரசுக்கு வழங்க வேண்டும். இதன்விளைவாக இந்த வருடம் 17,117 கோடி ரூபாய் வழங்கியுள்ளோம். வருங்காலத்தில் 14,442 கோடி ரூபாய் வழங்கவிருக்கிறோம். இதனால்தான் அதிகளவு இழப்பீட்டுத் தொகை TANGEDCO-க்கு வழங்க வேண்டிய கட்டாயம் எழுந்திருக்கிறது. எனினும், மாநில அரசு இத்துறையில் பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறது. TANGEDCO நிறுவன அமைப்பை மாற்றியமைத்தல்-Unbundling இதனால் மின் உற்பத்தி மற்றும் பகிர்மானத்தில் தனிக்கவனம் செலுத்த இயலும். அதிக வட்டியுள்ள கடன் குறைந்த வட்டிக் கடனாக மாறும். பசுமையாற்றல் மீது சிறப்பு கவனம் செலுத்துவதற்காக ஒரு புதிய நிறுவனம் தற்போது அமைக்கப்பட்டிருக்கிறது.

**மாநிலத்தின் வளர்ச்சியை கூட்டுவதற்கு ரூ.59,681 கோடி!**

அதைப்போல, நேற்று பேசும்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மூலதன செலவுகளைப்பற்றிக் கூட கேட்டார்கள். கடந்த ஆட்சிக்காலத்தில் பார்த்தீர்களென்றால், மூலதன செலவிற்கு அவர்கள் முக்கியத்துவம் தரவில்லை என்பதைப் பல்வேறு தரவுகள் சொல்கின்றன. மூலதனச் செலவுகளைப் பொறுத்தவரை, 2011-2012 ஆம் ஆண்டில் 16,336 கோடி ரூபாயாக இருந்தது, 2020-2021 ஆம் ஆண்டில் 33,068 கோடி ரூபாயாக இருக்கிறது. பத்து வருடங்கள் அவர்கள்தான் ஆட்சி செய்தார்கள். இந்த பத்து வருட ஆட்சியில் அவர்கள் செய்துள்ள மூலதனச் செலவு 16,732 கோடி ரூபாய் மட்டும்தான் உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால், இந்த ஆட்சியில் கடும் நிதி நெருக்கடியிலும்கூட, நாங்கள் இந்த நேரத்திலே மாநிலத்தினுடைய வளர்ச்சியை ஈட்டுவதற்காக, இந்த மூலதனச் செலவுகள் மாநிலத்தினுடைய வளர்ச்சியைக் கூட்டுவதற்காக, இந்த மூன்று வருடத்தில் 33,068 கோடி ரூபாயாக இருந்ததை 12,000 கோடி ரூபாய் சென்னை மெட்ரோ திட்டத்திற்காக நாம் அளித்தது உட்பட, அதையும் சேர்த்து பார்ப்பீர்களென்றால், 59,681 கோடியாக உயர்த்தி, இப்பணிகளை நாம் செய்து வருகிறோம். மூன்றே ஆண்டுகளில் மூலதனச் செலவை 26,613 கோடி ரூபாய் நாம் உயர்த்தியிருக்கிறோம் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். அவர்கள் மூலதனச் செலவை உயர்த்தாமல் சென்றிருக்கக்கூடிய அந்த வருடத்திற்கும் சேர்த்து, வருங்காலத்தில் நாங்கள் வரவு-செலவுத் திட்டத்தில் மூலதனச் செலவுகளுக்கான அதிக ஒதுக்கீடுகளை செய்து நம்முடைய மாநிலத்தை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்வோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**ரூ.9,535 கோடியில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்!**

மூலதனச் செலவுகளைப் பொறுத்தமட்டில் தற்போது 63,246 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை, அதேபோல், 10,740 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோவை மற்றும் 11,368 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மதுரை போன்ற மாநகராட்சிகளில் மெட்ரோ ரயில் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன. நாமக்கல், பெரம்பலூர், திண்டுக்கல், கிருஷ்ணகிரி, தருமபுரி போன்ற மாவட்டங்களிலுள்ள மக்கள் பயன்பெறும்வகையில் மொத்தமாக 9,535 கோடி ரூபாய் அளவிலே கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன. சாலை மற்றும் பாலங்கள் மேம்பாட்டுப் பணிகளுக்காக 17,890 கோடி ரூபாயும், போக்குவரத்துத் துறைக்கு 2,966 கோடி ரூபாயும் என்று இந்த மூலதனச் செலவுகளிலே தமிழ்நாடு அரசு எந்த அளவிலே நிதி ஒதுக்கியிருக்கிறது என்பதை நான் தொடர்ந்து சொல்லிக்கொண்டே போகலாம்.

**ஐரோப்பாவிற்கு வெளியே அச்சடிக்கப்பட்ட முதல் தமிழ்நூல்!**

**ஒரு வரலாற்றை நான் இந்த மாமன்றத்திலே பதிய வைக்க விரும்புகிறேன். ஐரோப்பாவிற்கு வெளியே அச்சடிக்கப்பட்ட முதல் தமிழ் நூல் தமிழிலே தான் வெளிவந்தது. 1554 ஆம் ஆண்டு பிப்ரவரி 11 ஆம் தேதி போர்ச்சுகல் நாட்டில்** Lisbon **நகரத்தில்** Cartilha **என்ற தலைப்பில் 38 பக்கங்களைக் கொண்ட சிறு தமிழ் நூல் ஒன்று அச்சடிக்கப்பட்டது. வருடம் 1554. அந்த நூல் அச்சடிக்கப்பட்ட காலத்தில் உலகப் புகழ் பெற்ற ஷேக்ஸ்பியர் பிறந்திருக்கவில்லை. இந்தியாவிலே பேரரசர்** Akbar the Great **என்று அழைக்கப்பட்ட மகா அக்பர் அரியணையிலே ஏறியிருக்கவில்லை. கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்து 50 ஆண்டுகள்கூட ஆகியிருக்கவில்லை. உலக வரலாற்றில் மாபெரும் அறிவியல் மேதைகள் கலிலியோ, நியூட்டன் இருவரும் அப்போது பிறந்திருக்கவில்லை. இந்தத் தமிழ்ப் புத்தகம் அச்சடிக்கப்பட்டு நூறு ஆண்டுகள் கழித்துதான் உலக அதிசயமான தாஜ்மஹால் யமுனை ஆற்றங்கரையிலே எழுப்பப்பட்டது. இந்த நூல் வெளிவந்து பல ஆண்டுகளுக்குப் பின்புதான் ரஷ்ய, சீன, ஜப்பான் மொழிகளிலே அச்சு நூல்கள் வெளிவந்தன. இந்த வரலாற்றுக் குறிப்பிலே ஒரு முக்கியமான செய்தி இடம் பெற வேண்டுமென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நூல் வெளிவருவதற்கு உதவியாக இருந்தவர்கள் நம்முடைய தமிழ்நாட்டின் தூத்துக்குடியைச் சார்ந்த மூன்று தமிழர்கள். அவர்களது பெயர்** Vincent D Nazareth, Yodge Kavalco and Thomas De Cruz **இந்த மூன்று தமிழர்களுடைய முயற்சியால்தான் 1554 ஆம் ஆண்டு முதல் தமிழ்நூல் அச்சடிக்கப்பட்டது. எனவேதான், இந்த வரலாற்றுப் பின்புலத்தில்தான் தமிழுக்கான முதல் அச்சு முதற்கொண்டு அரிய ஆவணங்கள் மின்பதிப்பு செய்வதற்காக நிதியினை அரசு ஒதுக்கியிருக்கிறது.**

> **“கோசல நாட்டிலே வள்ளல் தன்மை கிடையாது. காரணம் அங்கே வறுமையில்லை. கோசல நாட்டிலே பெரும் வீரர்கள் கிடையாது. காரணம் எதிர்த்து போராடக்கூடிய எவரும் எதிரே இல்லை. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) உண்மை இல்லை. காரணம் அங்கே ஒரு பொய்யுரை இல்லை. ஒண்மையில்லை பல கேள்வி மேன்மையால். அறியாமை என்பது அங்கில்லை. காரணம் அந்தக் கோசல நாட்டிலே கல்வி வளாகத்திற்கு அள்ளிக் கொடுத்த வள்ளல் இருந்தான் என்ற காரணத்தினாலே. (மேசையைத் தட்டும் ஒலி) ராமராஜ்ஜியம் எப்படி இருந்ததோ இல்லையோ யானொன்றறியேன் பராபரமே. ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய திராவிட மாடல் ஆட்சி எல்லோருக்கும் எல்லாமுமான ராஜ்ஜியமாக இருந்திருக்கிறது என்பதை நான் சொல்லுவேன்.”**

தொடர்ச்சி 5ஆம் பக்கம்





முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, இந்திய ஒன்றியமே திரும்பி பார்க்கிற வகையில், கழக இளைஞரணி 2 ஆவது மாநில மாநாடு சேலத்தில் கடந்த ஜனவரி 21 ஆம் தேதி நடைபெற்றது. இந்த மாநாடு மாபெரும் வெற்றி மாநாடாக அமைவதற்கு வழிகாட்டிய கழக பொதுச் செயலாளர், பொருளாளர், முதன்மைச் செயலாளர், துணை பொதுச் செயலாளர்கள் உள்ளிட்ட தலைமைக் கழக நிர்வாகிகள், மாநாட்டுக்காக உழைத்த மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் செயலாளர்களுக்கு நன்றி தெரிவிக்கின்ற கூட்டம் குறிஞ்சி இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. மாநாடு அறிவித்த நாள் முதல், இளைஞரணி செயல்வீரர் கூட்டம் நீட் விலக்கு, நம் இலக்கு கையெழுத்து இயக்கம் மாநாட்டு நிதி இருசக்கர வாகனப் பேரணி உரிமை மீட்பு சுடர் ஓட்டம் லட்சக்கணக்கான இளைஞர்களின் வருகை என்று மாநாட்டிற்கான ஒவ்வொரு பணிகளையும் ஒருங்கிணைத்த மாவட்டக் கழகச் செயலாளர்கள், பொறுப்பு அமைச்சர்கள் உட்பட அனைவருக்கும் நன்றி தெரிவித்து நினைவுப்பரிசை கழக இளைஞரணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி, "பாசிசம் வீழட்டும் இந்தியா வெல்லட்டும்" என்ற உணர்வோடு ஓரணியில் நின்று, நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்காக உழைப்போமென உரையாற்றினார்.

# பேரவையில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரை....

4 ஆம் பக்கத் தொடர்ச்சி

**நேற்று உலகத் தாய்மொழிகள் தினம் கடைப்பிடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்கள் உறுதி மொழி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். தாய்த்தமிழுக்காக எதையும் செய்யத் துணிந்தவர்கள் நாம். ஆனால் வேறு எந்த மொழியையும் நாம் அழிக்க முற்பட்டதில்லை. எனவேதான் பழங்குடியினர் மொழிகளைப் பாதுகாக்கப்பட ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு மாபெரும் தமிழ்க் கனவுகளை முன்வைத்து செதுக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றிருக்கும் அறிவிப்புகள் தமிழர்களுடைய வாழ்வை வளம் பெறச் செய்யுமென்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்**

**அரசினுடைய கடன் அளவு பற்றிய எதிர்க்கட்சியினரின் தவறான கருத்துகள்!**

நேற்று பேசுகின்றபோது கடன் பற்றியும் மிகப் பெரிய அளவில் இங்கே விவாதங்கள் நடந்திருக்கிறது. பொருளாதாரத்தைப் பற்றியும், நிதி மேலாண்மையைப் பற்றியும் எந்தவொரு அடிப்படை புரிதலும் இல்லாமல் பரபரப்பை உருவாக்கக்கூடிய ஒரே நோக்கத்தோடு எதிர்க்கட்சியினர் அரசினுடைய கடன் அளவைப் பற்றிய தவறான கருத்துகளை முன்வைத்துச் சென்றிருக்கிறார்கள்.

எந்தவொரு புள்ளி விவரத்தைப் பார்க்கும்போதும் அந்த காலகட்டத்திற்கு ஏற்ப அதைப் பார்க்க வேண்டும். நாங்கள் 10 ஆண்டு காலத்தில் குறைவாக கடன் வாங்கினோம். ஆனால் அவர்கள் 3 ஆண்டுகளில் அதிகமாக கடன் வாங்கியுள்ளார்கள் என்று கூறுவது அவர்கள் வாங்கியிருக்கலாம். உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால், 2011-ல் வரவு-செலவுத் திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ.1.02 இலட்சம் கோடி ரூபாய். மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு ரூ.2.51 இலட்சம் கோடி. ஆனால், இன்றோ வரவு-செலவுத் திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ.4.12 இலட்சம் கோடி ரூபாயாகவும், மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு ரூ.31.55 இலட்சம் கோடியாகவும் உள்ளன. இதை அடிப்படையாகக் கொண்டு கடனைப் பொறுத்தவரை அதை மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்புடன் ஒப்பிட வேண்டும். அதாவது மாநிலத்தின் பொருளாதாரம் வளர வளர, அந்த மாநிலத்தின் கடன் வாங்கும் திறனும், அதைத் திருப்பிச் செலுத்தும் திறனும் அதிகரிக்கும். அந்தவகையில் 15-வது நிதிக் குழு தமிழ்நாட்டிற்கு கடன் அளவு குறித்த சில வரம்புகளை நிர்ணயித்திருக்கிறது.

அதன்படி 2021-2022-ல் 28.7 சதவிகிதம், மொத்த உற்பத்தி மதிப்பின் தமிழ்நாட்டின் கடன் விகிதம் அந்த 28.7 சதவிகிதத்திற்கு எதிராக 27.01 சதவிகிதம். 2022-2023-ல் 15-வது நிதிக் குழு வரம்பு 29.3 சதவிகிதம், நம்முடைய தமிழ்நாட்டின் கடன் விகிதம் 26.87 சதவிகிதம், 2023-2024-ல் 15-வது நிதிக் குழுவின் வரம்பு 29.1 சதவிகிதம், நம்முடைய கடன் விகிதம் 26.72 சதவிகிதம், அதைப்போல, 2024-2025-ல் அவர்களுடைய வரம்பு 28.9 சதவிகிதம், நம்முடைய கடன் விகிதம் 26.40 சதவிகிதம். எனவே, நிதிக் குழுவின் வரம்பிற்குள்தான் கடன் வாங்குகிறோம் என்பதையும் நான் இங்கே தெள்ளத்தெளிவாக சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

**நிதி ஆதாரங்கள் திரட்டுவதை ஒன்றிய அரசு கட்டுப்படுத்துகிறது!**

அதைப்போல சென்னை மெட்ரோ இரயிலின் 2 ஆம் கட்டத்திற்கு ஒன்றிய அரசின் ஒப்புதல் கிடைக்காததால், இந்த ஆண்டு ரூ.9,000 கோடி கடனும், அடுத்த ஆண்டு ரூ.12,000 கோடி கடனும் வாங்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இது போதாது என்று மாநில அரசின் நிதிநிலையை மேலும் பாதிக்கும் வகையில் கடுமையான நிபந்தனைகளை விதித்து, வளர்ச்சி திட்டங்களுக்காக நிதி ஆதாரங்களை திரட்டும் மாநில அரசினுடைய அதிகாரத்தை ஒன்றிய அரசு கட்டுப்படுத்துகிறது.

இவ்வாறு ஒவ்வொரு நிபந்தனையின்மூலம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு இழப்பீட்டு நிதியாக இந்த ஆண்டு ரூ.17,117 கோடியும், அடுத்த ஆண்டு ரூ.14,442 கோடியும் மாநில அரசு வழங்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. அவ்வாறு வழங்காவிட்டால் அதற்கு இணையான தொகை நம்முடைய கடன் வரம்பிலிருந்து கழிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஒன்றிய அரசு இவ்வாறு நம்முடைய நிதிநிலையைப் பாதிக்கின்ற வகையில் செயல்படாமல் இருந்தாலே நமது கடன் இந்த ஆண்டு ரூ.26,117 கோடியாகவும், அடுத்த ஆண்டு ரூ.26,442 கோடி அளவிற்கும் குறைந்திருக்கும் என்பதையும் நான் இந்த மாமன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

**கடன் என்ற சொல்லுக்கு 'கடமை' என பொருள் உண்டு!**

நான் கடன் குறித்து இந்த மாமன்றத்தில் விளக்கியிருக்கிறேன். இந்தக் 'கடன்' என்ற ஒரு சொல்லுக்கு 'கடமை' என்பதற்கான ஒரு பொருளும் இருக்கின்றது.

புறநானூற்று பாடலில் ஒவ்வொருவருக்கும் சமூகத்தில் என்ன கடமை இருந்தது என்று சொன்னால்,

**"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;**

**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;**

**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;**

**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;**

**ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்**

**களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"**

என்று ஒவ்வொரு கடனையும் புறநானூறு ஒவ்வொருவருக்கும் வகுத்து தந்திருக்கிறது. அந்த வகையில் தமிழ்நாட்டில் யாருக்கு என்ன கடன் இருக்கிறதோ, இல்லையோ நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அவரும் ஒரு கடன் வைத்திருக்கிறார்.

**"நெல்லும் உயிர் அன்றே;**

**நீரும் உயிர் அன்றே;**

**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;**

**அதனால் யான் உயிர் என்பது அறிகை;**

**வேன்மிகு தாளை வேந்தர்க்குக் கடனே"**

என்று புறநானூறு சொல்கிறது. மன்னன், தான் உயிர் என்பதாக அவன் கருதி, இந்த நாட்டு மக்களை எந்த ஆட்சி முறையுடன் கேட்கிறானோ (மேசையைத் தட்டும் ஒலி) அது அந்த மன்னனுடைய கடமை, அவன் அந்த உயிராக இருக்கிறான்.

தமிழ்நாட்டு மக்களுடைய உயிராக தமிழ்நாட்டு மக்களை தான் கருதி, தான் அவர்களுக்கு உயிராக இருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், அவருடைய கடனாக கருதுவது, வள்ளல் பெருமான் சொன்னதைப்போல, "என் கடன் பணி செய்து கிடப்பதே" (மேசையைத் தட்டும் ஒலி) என்று பணி செய்வதையே தன்னுடைய கடனாகக் கொண்டு இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்களை நான் இந்த நேரத்தில் வணங்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவர்களுடைய நல்லாட்சியில், அந்த ஆட்சி நடக்கக்கூடிய திராவிட மாடல் ஆட்சியை நாம் அனைவரும் போற்றி பாராட்டுகிறோம்.

கம்பன், கம்பராமாயணத்தை எழுதுகிறபோது கோசல நாட்டின் வளத்தை சொல்கிறபோது மிக அருமையாக ஒரு பாட்டில் சொல்வான்.

"வண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்;

திண்மை இல்லை, நேர் செறுநர் இன்மையால்;

உண்மை இல்லை, ஓர் பொய் உரை இன்மையால்;

வெண்மை இல்லை, பல கேள்வி மேவலால்" என்று சொன்னான்.

எல்லோருக்கும் எல்லாமுமான ராஜ்ஜியம்!

கோசல நாட்டிலே வள்ளல் தன்மை கிடையாது. காரணம் அங்கே வறுமையில்லை. கோசல நாட்டிலே பெரும் வீரர்கள் கிடையாது. காரணம் எதிர்த்து போராடக்கூடிய எவரும் எதிரே இல்லை. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) உண்மை இல்லை. காரணம் அங்கே ஒரு பொய்யுரை இல்லை. ஒண்மையில்லை பல கேள்வி மேன்மையால். அறியாமை என்பது அங்கில்லை. காரணம் அந்தக் கோசல நாட்டிலே கல்வி வளாகத்திற்கு அள்ளிக் கொடுத்த வள்ளல் இருந்தான் என்ற காரணத்தினாலே. (மேசையைத் தட்டும் ஒலி) ராமராஜ்ஜியம் எப்படி இருந்ததோ இல்லையோ யானொன்றறியேன் பராபரமே. ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய திராவிட மாடல் ஆட்சி எல்லோருக்கும் எல்லாமுமான ராஜ்ஜியமாக இருந்திருக்கிறது என்பதை நான் சொல்லுவேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அந்த நல்லாட்சியிலே குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால்,

**'தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிப் பெய்து,**

**ஓங்கு பெருஞ்செல் நெல் ஊடு கயல் உகளப்,**

**பூங்குவளைப் போதில் பொறி வண்டு கண்படுப்ப,**

**தேங்காத புக்கிருந்து சீர்த்த மலைபற்றி**

**வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்**

**நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்'**

என்று சொன்ன அந்தப் பாடலை நிறைவு செய்து இந்த ஆட்சியிலே முதலமைச்சர் அவர்களுடைய திராவிட மாடல் ஆட்சி எல்லா வகையிலும் நிறைந்திருக்கக்கூடிய ஆட்சியாக இந்த ஆட்சி இந்த நாட்டினுடைய நிதி வளத்தையும், இந்த நாட்டினுடைய இயற்கை வளத்தையும் மேம்படுத்தி செயல்படுத்தும் என்பதை நான் தெரிவித்து என்னுடைய பதிலுரையை நான் நிறைவுசெய்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு உரையாற்றினார்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசின் பயன்தரும் திட்டங்கள்!

## பேரவையில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு!

**கோரிக்கைகளை பரிசீலித்து சில அறிவிப்புகள்!**

நிறைவு செய்வதற்கு முன்பாக, வரவு-செலவுக் கூட்டத்தொடரின் விவாதத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் சில கோரிக்கைகளையெல்லாம் பேசுகின்றபோது முன்வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளைப் பரிசீலித்து முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலிலே நான் கீழ்க்கண்ட அறிவிப்புகளைச் செய்யவிரும்புகிறேன். குறிப்பாக நம்முடைய காட்டுமன்னார் கோவில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனை செல்வன் அவர்கள் பேசிய போது அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன சில கோரிக்கைகளின் அடிப்படையில் சென்ற ஆண்டு நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முதலமைச்சர் அவர்கள் பழுதடைந்த ஆதி திராவிட பழங்குடியினப் பள்ளி கல்லூரி விடுதிகளைப் பராமரிக்க நிதியொதுக்கப்படும் என்று அறிவித்தார்கள். மாணவர்களின் எண்ணிக்கையையும், தேவையையும் கருத்தில்கொண்டு சிறப்பு பராமரிப்பு மேற்கொள்ள 521 ஆதி திராவிடர் மற்றும் 15 பழங்குடியினர் விடுதிகள் கண்டறியப்படவுள்ளன. வரும் கல்வியாண்டு தொடங்கப்படுவதற்கு முன்பாகவே 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவுபெறும் என்பதை முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு நான் தெரிவிக்க விரும்பு கிறேன்.

அதைப்போல ஆதி திராவிட தொழில் முனைவோருக்கென திருப்பூர் மாவட்டம், முதலிபாளையத்தில் மொத்தம் 100 ஏக்கரில் 80 ஏக்கர் பரப்பளவில் 100 தொழிற்கூடங்கள் கொண்ட தொழிற்பேட்டை 1996 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அதில் 51 தொழிற்கூடங்கள் மட்டும் விற்பனை மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மீதமுள்ள 49 ஒதுக்கீடு செய்யாமல் உள்ளது. மேலும் ஆதி திராவிட தொழில் முனைவோர்களுக்கு ஈரோடு மாவட்டம் ஈங்கூரிலும் 200 தொழிற்கூடங்கள் கொண்ட தொழிற்பேட்டை 1997-லேயே அமைக்கப்பட்டது. பல ஆண்டுகளாக இத்தொழிற்கூடங்கள் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளது. ஆதி திராவிட மற்றும் பழங்குடி சமூகத்தில் தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் அறிமுகப்படுத்தப்பட்டு பயன்பாட்டில் இல்லாத இத்திட்டங்களுக்கு உயிரூட்ட இந்த அரசு முடிவு செய்திருக்கிறது. முதலிபாளையம் மற்றும் ஈங்கூர் தொழிற்பேட்டையில் அமைந்துள்ள தொழிற்கூடங்களை நவீன கட்டமைப்பு வசதிகளுடன் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதேபோல நம்முடைய திருச்செங்கோடு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்களுடைய கோரிக்கையின் அடிப்படையில் மாவட்ட அரசு மருத்துவமனைகள், பேருந்து நிலையங்கள் என மக்கள் அதிகம் கூடும் 100 தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் அவர்கள் காத்திருக்கும் பொன்னான நேரத்தினை முறையாகப் பயன்படுத்தும் விதமாக சிறிய நூலகங்கள், படிப்பகங்கள் சுமார் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

அதேபோல குமாரபாளையம் சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் பி. தங்கமணி பேசினார்கள். அவர் அவையிலே இல்லாவிட்டாலும் அவர் பேசுகிறபோது அவர் சொன்ன கோரிக்கையின் அடிப்படையில் மின் விபத்து ஏற்பட்டு உயிரிழப்பு இல்லாத நிலையில் 1 இலட்சம் ரூபாய் முதல் 2 இலட்சம் ரூபாயும், உயிரிழப்பு ஏற்படும்போது 5 இலட்சம் ரூபாயும் தற்போது இழப்பீடாக வழங்கப்பட்டு வருகிறது. இது 50 சதவிகிதம் உயர்த்தப்பட்டு உயிரிழப்பு இல்லாத விபத்துக்களுக்கு 1.5 இலட்சம் ரூபாய் முதல் 3 இலட்சம் ரூபாய் வரையிலும் உயிரிழப்பு ஏற்பட்டிருக்கக்கூடிய விபத்துக்களுக்கு ரூபாய் 10 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்பதைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரையாற்றினார்.



சென்னை தெற்கு மாவட்டம், முகப்பேர் பகுதிக்கழகத்தின் முன்னாள் பகுதி அவைத்தலைவர் நினைவில் வாழும் எம்.ஏ.அன்பு அவர்களின் இல்ல மணவிழா – மதுரவாயல் வடக்குப் பகுதி ஐ.டி. விங்க் துணை அமைப்பாளர் ராஜ் கமல் –பிரியதர்ஷினி ஆகியோரின் திருமணத்தை குறிஞ்சி இல்லத்தில் கழக இளைஞரணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். உடன் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன், அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. உள்ளிட்ட கழக முன்னணியினர் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் கோணை ஊராட்சியில் உயர்மட்ட பாலம் கட்டுவதற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார். அருகில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஆகியோர் உள்ளனர்.

**முதல்வரின் சீரிய நடவடிக்கையால் கரும்பு உற்பத்தி – விளைநில சாகுபடி பரப்பளவு அதிகரிப்பு! 2 ஆண்டுகளில் 2 லட்சம் மின் இணைப்புகள்!**

# 1 கோடியே 4 லட்சம் விவசாயக் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் திட்டங்கள்!

## சட்டப் பேரவையில் வேளாண் நிதிநிலை அறிக்கையில் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பதிலுரை!

**சென்னை, பிப். 24-**

**சட்டப்பேரவையில் வேளாண் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் பதிலுரை, வழங்கினார். அவரது பதிலுரையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய முயற்சியால் நெல் சாகுபடி, கரும்பு உற்பத்தி, பரப்பளவு, தானிய உற்பத்திகள் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் முதலமைச்சரின் திட்டங்களால் 1கோடியே 4 இலட்சம் விவசாயக் குடும்பங்கள் பலன் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகிறார்கள் என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

**வேளாண் நிதிநிலை அறிக்கை மீதான விதாதத்திற்கு வேளாண் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பதிலுரை வருமாறு:**

பேரவைத் தலைவர் அவர்களே, பாழ்பட்டுக் கிடந்த தமிழ்நிலத்தை பண்படுத்துவதற்கு என நினைவிற்கொண்டு எனது பதிலுரையைத் தொடங்குகிறேன்.

சமுதாய மேடு பள்ளங்கள், வேற்றுமை, ஏற்றத்தாழ்வுகள் கொண்டதாக 100 ஆண்டுகளுக்கு முன்னால் இந்தத் தமிழ் நிலம் இருந்தது. கொடூரமான உயிர்கொல்லிகளும் இருந்தன. அவற்றையெல்லாம் தனது தடியால் அடித்து சரிப்படுத்தியவர் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள். தந்தை பெரியாரால் சமன்படுத்தப்பட்ட நிலத்தில் தமிழ் மண்ணுக்கே உரிய இயற்கை உரங்களைப் போட்டு மண்ணை வளப்படுத்தியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். பேரறிஞர் அண்ணாவால் பக்குவப்படுத்தப்பட்ட நிலத்தில் மிகச் சரியான விதைகளை விதைத்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். களைகளைக் களைந்து, விளைச்சலை அதிகப்படுத்திக் காட்டிக்கொண்டிருப்பவர் நம்முடைய திராவிட மாடல் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். இந்த நால்வரால் வளர்ந்ததுதான் தமிழ் நிலமாகும். சமய குரவர்கள் நால்வர் என்பார்கள். திராவிட இனத்தின் மானம் காக்கும் மன்னர்கள் இந்த நால்வரும்தான். இந்த நால்வரையும் வணங்குகிறேன்.

**ரூ. 206 கோடியில் 'முதலமைச்சர் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்' புதிய திட்டம்!**

**முதல்வரை வானமே வாழ்த்துகிறது!**

'உழவே தலை' என்றார் அய்யன் திருவள்ளுவன். அத்தகைய தலைச்சிறந்த துறைக்கு என்னை அமைச்சராக்கி, எங்களுக்காக தனி நிதிநிலை அறிக்கையையும் தந்து, அதை நான்காவது ஆண்டாக தாக்கல் செய்ய வைத்த எங்கள் உயிரான தலைவர் உணர்வான தலைவர் முதலமைச்சர் அவர்களே, ஒரு விவசாயியின் வீட்டில் பிறந்த எனக்கு, இலட்சக்கணக்கான விவசாயிகளுக்கு நன்மைதரும் வாய்ப்பை வழங்கியமைக்காக கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**'வரப்புயர நீருயரும்;**
**நீருயர நெல்லுயரும்;**
**நெல்லுயரக் குடியுயரும்;**
**குடியுயரக் கோலுயரும்;**
**கோலுயரக் கோனுயர்வான்'**

என்று அன்று பாடினார் அவ்வையார். அவரே இன்று இருந்திருந்தால், கோனுயர்ந்தால், அதாவது உயர்ந்த மன்னன் ஆட்சிக்கு வந்ததால் குடி உயர்ந்தது, நெல் உயர்ந்தது, வரப்பு உயர்ந்தது என்று பாடியிருப்பார். அதாவது, reverse-ல் பாடியிருப்பார். நீங்கள் ஆட்சிக்கு வந்தது முதல் அதிகமாக மழை பெய்தது என்றால், வானமே உங்களை வாழ்த்துகிறது. நீங்கள் ஆட்சிக்கு வந்தது முதல் பூமியில் விளைச்சல் அதிகமாகிறது என்றால் பூமியே உங்களை வாழ்த்துகிறது. வானம் முதல் பூமி வரை வையகமே வாழ்த்தும்வண்ணம் ஆண்டு கொண்டிருக்கும் முதலமைச்சர் அவர்கள் வாழ்வாங்கு வாழ வாழ்த்துகிறேன். எனது பதிலுரைக்குள் வருகிறேன்.

**ரூ. 624 கோடியில் கரும்பு விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை!**
**ரூ. 940 கோடியில் நிவாரண உதவித் தொகை!**

இந்த வேளாண் துறை பட்ஜெட்டை தாக்கல் செய்வதற்கு முன்பாக முதல்வர் அவர்கள் எங்களுக்குக் கொடுத்த அறிவுரை என்னவென்றால், நேரடியாகச் சென்று விவசாயிகளைச் சந்தித்து அவர்களுடைய குறைகளை அறிந்து, அதனை நிதிநிலை அறிக்கையில் நிறைவேற்றும் நிலையை உருவாக்க வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். அதன்தொடர்ச்சியாக கடந்த 3 வேளாண் நிதிநிலை அறிக்கைகளில் கிட்டத்தட்ட 1,311 விவசாயிகளைச் சந்தித்து அவர்களுடைய குரலைக் கேட்டு, அவர்கள் 1,667 கோரிக்கைகளை வைத்தார்கள். அந்தக் கோரிக்கைகளை முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச்சென்று, அவருடைய உத்தரவால் கிட்டத்தட்ட நிறைவேற்றப்பட்டவை 548 கோரிக்கைகளாகும். இந்த 548 கோரிக்கைகளையும் இந்த 3 ஆண்டு வேளாண் நிதிநிலை அறிக்கையில் சேர்த்த காரணத்தால்தான் விவசாயிகளுடைய குரல் நிறைவேற்றப்பட்டதன் காரணமாகத்தான் விவசாயிகள் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள்.

ஆக, அந்தளவுக்கு அவர்களுடைய 548 கோரிக்கைகளை உள்ளடக்கியது 3 வேளாண் நிதிநிலை அறிக்கை. இப்போது நான்காவது நிதிநிலை அறிக்கையின்போது 4 கூட்டங்கள் நடத்தி, 549 விவசாயிகள் தங்களுடைய கருத்துகளைக் கூறியிருக்கின்றார்கள். அதையெல்லாம் தொகுத்துதான் நான்காவது நிதிநிலை அறிக்கை; அந்த அறிக்கையின் மூலமாக இன்றையதினம் இங்கே **தமிழ்நாடு முழுவதும் நிதியொதுக்கீட்டைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட 77 இலட்சம் விவசாயிகள் முதல் வேளாண் நிதிநிலை அறிக்கையில் பயனடைந்திருக்கின்றார்கள். இரண்டாவது வேளாண் நிதிநிலை அறிக்கையில் 78 இலட்சம் விவசாயிகள் பயனடைந்திருக்கின்றார்கள். மூன்றாவது வேளாண் நிதிநிலை அறிக்கையில் ஒரு கோடியே 4 இலட்சம் விவசாயிகள் பயனடைந்திருக்கின்றார்கள்.**

இப்போது மகளிர் திட்டத்தின் மூலமாக ஒரு கோடியே 15 இலட்சம் மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கப்படுகிறது. அதேபோல, ஒரு கோடியே 4 இலட்சம் விவசாயக் குடும்பங்களுக்கு இந்த அரசாங்கத்தினுடைய திட்டம் முதல்வருடைய திட்டம் மக்களுக்குச் சென்று கொண்டிருக்கிற காரணத்தால்தான் விவசாயிகள் எந்தவித போராட்டமும் இல்லாமல் வாழக்கூடிய நிலையை உருவாக்கிக் கொடுத்திருக்கின்றார்கள். அத்தகைய முதல்வர் அவர்களுக்கு நாம் நன்றியைச் செலுத்த வேண்டும்.

**ஒன்றரை இலட்சம் எக்டேரில் கரும்பு உற்பத்தி!**

அதேபோல, அவர்களுடைய கோரிக்கை நெல்– இந்த ஆட்சி பொறுப்பேற்றபிறகு நெல் விலை என்னவாயிற்று, என்னவாயிற்று என்கிறார்கள். இப்போது கரும்பு விலை என்னவானதென்று சொன்னார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபிறகு, நெல் விலையை சன்னரகத்திற்கு 70 ரூபாயிலிருந்து 107 ரூபாயாக உயர்த்திக் கொடுத்து அதனால் அதிக விவசாயிகள் பயன் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். மோட்டாரக நெல்லுக்கு 50 ரூபாயிலிருந்து 82 ரூபாயாக ஒரு குவிண்டாலுக்கு இங்கே வழங்கப்படுகிறது. இன்னும் இரண்டு ஆண்டு காலம் இருக்கிறது. ஆக, 2,500 ரூபாய் சொன்னீர்களே, என்னவாயிற்று, என்னவாயிற்று என்று கேட்டார்கள். இப்போது அதை நாங்கள் நோக்கி சென்று கொண்டிருக்கிறோம்.

அதேபோல, கரும்பு விலை; கரும்பு விலையைப் பொறுத்தவரையில் இந்த அரசு கடந்த ஆட்சியாளர்கள் 10 ஆண்டுக்காலத்தில் 3 இலட்சம் எக்டேர் கரும்பு விளைவித்த இந்தத் தமிழ்நாட்டில் கடந்த 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் அவர்கள் ஆண்ட ஆட்சியில் கரும்பு ஆலை முடக்கப்பட்டு, ஆக, கரும்பு விலை ஏற்றப்படாமல் இருந்த நிலையை அறிந்து, இன்னும் சொல்லப்போனால், 95,000 எக்டேர் நிலத்தில்தான் கரும்பு பயிர் விவசாயம் செய்தார்கள். ஆனால், முதல்வர் அவர்கள் எடுத்த நடவடிக்கையால் இப்போது 1 இலட்சம் எக்டேர் அளவுக்கு கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது.

இப்போதுதான் BJP அரசு ஒன்றிய அரசு



அடுத்த அக்டோபருக்கு கரும்பு விலை உயர்வு வருகிறதாம். நேற்றையதினம் அறிவிப்பு கரும்பு பயிருக்கு விலை உயர்வு அடுத்த அக்டோபர்; ஆக, நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு அவர்கள் நேற்றையதினம் விலையை அறிவிக்கிறார்கள். 25 ரூபாய் ஒரு டன்னுக்கு கூடுதலாக்கி, அக்டோபர் மாதம் வருகின்ற season-க்கு கரும்பு வெட்டுவதற்கு அறிவிக்கிறார்கள்.

ஆனால், நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே 25 ரூபாய் கூடுதலாக அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். கடந்த ஆண்டு முதன்முதலாக ஆட்சிப் பொறுப்பேற்றபோது இங்கே கரும்பு விலை உயர்வு ரூபாய் 2,750-லிருந்து 2,900 ரூபாய் அளவிற்கு இருந்தது. கரும்பு பயிரிடும் பரப்பு–அதேபோல, ஊக்கத்தொகை 3 இலட்சத்து 50 ஆயிரம் விவசாயிகளுக்கு 624 கோடி ரூபாய் கரும்பு ஊக்கத்தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

நலிவுற்ற கரும்பு ஆலைகள், நலிவுற்ற கரும்பு விவசாயிகளுக்கு எந்தவித பாக்கியும் இல்லாமல், எந்தவித கடனும் இல்லாமல், விவசாயிகளுக்கு முழுமையாக ரூ.624 கோடியை நம்முடைய அரசு, நம்முடைய முதல்வர் அவர்கள் கொடுத்த காரணத்தால், கரும்பு விவசாயிகள் இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால், இந்த ஆண்டு கரும்பு விலை ஏற்றப்பட்டு, இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில், ஒரு டன் கரும்புக்கு ரூ.215 சிறப்பு ஊக்கத் தொகையாக உயர்த்தி இந்த அரசு அறிவித்துள்ளது, நேற்றுமுதல் பணம் வழங்கப்படுகிறது. ஒன்றிய அரசு வருகின்ற அக்டோபர் மாதம் கரும்பு விலையை ஏற்றுகிறார்கள். ஆக, இடையில் 5-6 ஆண்டுகளாக இல்லாமல், இப்போது தேர்தலை முன்னிட்டு அவர்கள் செய்கிறார்கள். ஒவ்வொரு திட்டத்தையும் தேர்தலை முன்னிட்டு அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**ரூ.940 கோடி நிவாரணத் தொகை!**

அதேபோல நிவாரணத்தைப் பொறுத்தவரையில், வறட்சி மற்றும் வெள்ளம் தொடர்பாக, முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற இந்த 3 ஆண்டு காலத்தில், வறட்சி, புயல், திடீர் மழை, திடீர் புயல் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.940 கோடி நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆக, தூத்துக்குடியிலும் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுவிட்டது. கிட்டத்தட்ட 12 இலட்சத்து 58 ஆயிரம் விவசாயிகள் ரூ.940 கோடி நிவாரணத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அறிக்கை விட்டார்கள். Budget பற்றி கருத்து கேட்கும்போது, 10 ஆண்டுகளில் சாகுபடி பரப்பை இருமடங்காக உயர்த்துவோம் என்றார்கள், என்ன ஆயிற்று என்றும், அதேபோல, இருபோக சாகுபடியை உயர்த்துவோம்–. அ.தி.மு.க. ஆட்சியில் 2020-21 ஆம் ஆண்டுவரை, சாகுபடி பரப்பு 61.56 இலட்சம் ஹெக்டராக இருந்தது. இப்போது நம்முடைய கழக ஆட்சி வந்த 2 ஆண்டு காலத்தில், 62.60 இலட்சம் ஹெக்டர் அளவுக்கு, கடந்த ஆட்சியைவிட ஒரு இலட்சம் ஹெக்டர் அளவுக்கு நம்முடைய சாகுபடி நிலங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. பத்தாண்டுத் திட்டம் 11 இலட்சம்–. ஆக, நாங்கள் இந்த 2 ஆண்டுகளிலேயே ஒரு இலட்சம் ஹெக்டர் அளவிற்கு விளைநிலங்கள் இங்கே உயர்த்தப்பட்டிருக்கிறது.

**இரண்டு இலட்சம் மின் இணைப்பு!**

இருபோக சாகுபடி பரப்பு, 2020-21 ஆம் ஆண்டில் 10 இலட்சம் ஹெக்டராக இருந்தது. 10 ஆண்டுகளில் 20 இலட்சம் ஹெக்டராக உயர்த்துவோம் என்று நாங்கள் தேர்தல் அறிக்கையில் சொன்னதை, 2022-23-ல் இருபோக சாகுபடி பரப்பு 14.23 இலட்சம் ஹெக்டராக, 2 ஆண்டு காலத்தில் உயர்ந்திருக்கிறது. ஆக, இந்த அளவுக்கு விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற காரணத்தால், கோரிக்கைகள் உடனுக்குடன் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றப்படுகின்ற காரணத்தால், இன்னும் சொல்லப்போனால் சாகுபடி பரப்பை உயர்த்துவதற்கு இலவச மின்சாரம், இரண்டு இலட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுத்த காரணத்தால், 10 ஆண்டுகளில் அவர்கள் 2 இலட்சம் இணைப்புதான் கொடுத்தார்கள். ஆனால், இந்த 2 ஆண்டு காலத்திலேயே 2 இலட்சம் அளவிற்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டு, விவசாயிகளின் வாழ்வாதாரம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

**மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்!**

புதிய திட்டமாக முதலமைச்சர் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் (CM MK MKS) திட்டம் ரூ.206 கோடியில் துவங்கப்படுகிறது. இது பிள்ளையார் சுழிதான். மண்ணைக் காக்கவேண்டும் என்று பேசுகின்ற விவசாயிகளாக இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், மண்ணைக் காப்பாற்ற வேண்டும், மண்ணைக் காப்பாற்ற வேண்டும் என்று அவர்கள் கூறியதை அடுத்து, மண் வளத்தைப் பெருக்குவதற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திட்டம் அறிவிக்கப்பட்டு, மண் வளத்தைக் காக்கக்கூடிய திட்டமாக அது உருவாக்கப்பட்டிருக்கிறது.

**தேங்காய் எண்ணெய் விற்பனை அதிகரிக்க நடவடிக்கை!**

அதேபோல, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் யாரும் அதிகமாக எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. எல்லோரும் பாராட்டி, வாழ்த்துகளைத் தான் தெரிவித்தார்கள். ஒரு சில சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கருத்து சொல்ல வேண்டுமென்ற ஒரு உணர்வு. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் செல்லூர் கே. ராஜூ அவர்களும், தலைவர் ஜி.கே. மணி அவர்களும், திருமதி வானதி சீனிவாசன் அவர்களும் கொப்பரை சம்பந்தமாகவும், பயிர் காப்பீடு சம்பந்தமாகவும், பயிர் இழப்பீடு சம்பந்தமாகவும்– தேங்காய் எண்ணெயை சாப்பிடுவதற்கு நம்முடைய மக்களைத் தயார்படுத்த வேண்டும். எல்லோருக்கும் தேங்காய் எண்ணெயைக் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கை தென்னை உற்பத்தியாளர்கள் மத்தியில் இருக்கின்ற காரணத்தால், நானும், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களும் முதலமைச்சர் அவர்களிடத்தில் இதுகுறித்து எடுத்துக் கூறியிருக்கின்றோம்.

ஆக, தேங்காய் எண்ணெய் கொடுத்தால்,

**கரும்பு - நெல் கொள்முதல் விலை உயர்வு!**

அந்த விவசாயம் செய்கின்ற மக்களுக்கு ஓர் ஆறுதலாக இருக்கும் என்கிற காரணத்தால், அந்தத் திட்டமும் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, 1.19 இலட்சம் மெட்ரிக் டன் அரவை மற்றும் பந்து கொப்பரைகள் 83,386 விவசாயிகளிடமிருந்து விலை ஆதரவு திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றன. கடந்த ஆண்டு–குறைந்தபட்ச ஆதரவு விலையை ஒன்றிய அரசு வருடந்தோறும் நிர்ணயித்து வருகிறது. நாங்கள் நிர்ணயிக்கவில்லை. இந்த விலையை ஒன்றிய அரசு நிர்ணயிக்கக்கூடிய காரணத்தால், நாங்கள் எவ்வளவு பரிந்துரைகள் செய்தாலும், ஒன்றிய அரசு அந்தக் குறிப்பிட்ட அளவை எட்டாமல் இருக்கிறது. ஆகவே, நீங்களும் முயற்சிகள் செய்து ஒன்றிய அமைச்சரை வரவழைத்து, கூட்டத்தை நடத்தி, கோயம்புத்தூரிலும் கூட்டத்தை நடத்தி,–ஒன்றும் ஆதரவு விலையை உயர்த்தவில்லை. ஆக, அவர்கள் அந்த விலையை வருடந்தோறும் நிர்ணயம் செய்கிறார்கள்.

**25 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.4,436 கோடி பயிர்க் காப்பீட்டுத் தொகை!**

பயிர் காப்பீடு திட்டத்தின்மூலமாக ரூ.4,436 கோடி இழப்பீட்டுத் தொகை 25 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை நான் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சி மற்றும் வெள்ள நிவாரணமாக ரூ.940 கோடி, 12 இலட்சத்து 58 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. Insurance–பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக.

அதேபோல, தலைவர் ஜி.கே. மணி அவர்கள், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், களர் உவர் நில மேம்பாடு, மா, பலா, வாழை மேம்பாடு, ஒரு கிராமம் ஒரு பயிர்' திட்டம் உள்ளிட்ட திட்டங்களுக்கு பாராட்டுகளைத் தெரிவித்திருக்கின்றார்கள். மண் வளம் குறித்து அவர் பேசியிருக்கின்றார். அதை நாங்கள் திட்டமாக ஆக்கியிருக்கின்றோம். அவர் நிழல் பட்ஜெட்டை போட்டு–எத்தனை வருடங்களாக? (குறுக்கீடு) 17 வருடங்களாக நிழல் பட்ஜெட் போட்டு, போட்டு பார்த்தார்கள். அந்த நிழல் பட்ஜெட்டே இப்போதுதான் நிஜ பட்ஜெட்டாக (மேசைத் தட்டும் ஒலி) நம்முடைய முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த காரணத்தினால், அது இங்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஒரு பாராட்டை தெரிவிக்கலாம். (குறுக்கீடு) அதற்கு பாராட்டை தெரிவித்திருக்கிறார்கள். ஆக, அதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சிறு தானிய உற்பத்தி!**

அதேபோல, 2023 ஆம் ஆண்டை சிறுதானிய ஆண்டாக அறிவித்த போதிலும், சிறுதானிய உற்பத்தி, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி, மல்பெரி உற்பத்தி குறைந்துள்ளன என்று கூறியிருக்கிறார்கள். 2023-2024 ஆம் ஆண்டில் சிறுதானிய இயக்கம்மூலம் 65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்திய தன்மூலம் சாகுபடி பரப்பானது 9.23 இலட்சம் எக்டரைவிட நடப்பாண்டு 9.38 இலட்சம் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. உற்பத்தி 36.31 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்ததை நடப்பாண்டில் 37.37 இலட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டைக் காட்டிலும் ஒரு இலட்சம் மெட்ரிக் டன் அதிகரித்துள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நடப்பாண்டில் பயறு வகைகள் சாகுபடி பரப்பு 6.59 இலட்சம் எக்டராக இருக்கிறது. எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பு 7.9 இலட்சம் எக்டர் பரப்பாக உயர்ந்திருக்கிறது.

**வாடல் நோயை கட்டுப்படுத்த நடவடிக்கை!**

திருமதி வானதி சீனிவாசன், எம்.எல்.ஏ. அவர்கள் தென்னை வாடல் நோய் சம்பந்தமாக ஆராய்ச்சிகள் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தென்னையிலுள்ள வாடல் நோய் கட்டுப்படுத்துதல் உட்பட பல்வேறு திட்டங்களுக்கு இந்த ஆண்டு அதிகபட்சமாக ரூ.36 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல கொப்பரை கொள்முதல் விலை ரூ.108.60 பைசா ஆக இருக்கிறது.

அதேபோல, தங்கமணி, எம்.எல்.ஏ., திருமதி வானதி சீனிவாசன், எம்.எல்.ஏ ஆகியோர் கேரளா வாடல் நோயை கட்டுப்படுத்த மேற்கொண்ட ஆராய்ச்சிப் பணிகள் பற்றிக் கேட்டார்கள். இது ஒரு Phytoplasma நோய்; இன்னும் சொல்லப்போனால், மனிதனுக்கு எப்படி கொரோனா வருகிறதோ, அதேபோல, தென்னைகளுக்கு Phytoplasma நோய் வருகிறது. 1-லிருந்து 2 வருடம் கழித்தேதான் அந்த நோயினுடைய அறிகுறி தென்படும். கேரளா வாடல் நோயை ஒருங்கிணைந்த நோய் மேலாண்மைமூலம் கட்டுப்படுத்தலாம். இதனைக் கட்டுப்படுத்த தனியாக 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 250 ஏக்கர் வயல் விளக்க திடல் அமைக்கப்படும்.

உழவியல் முறையில் பசுந்தாள் உரமிடல், தேவையான நீர்ப் பாசனம், பாதிக்கப்பட்ட நிலத்தில் வெள்ளப்பாசனத்தை தவிர்த்தல், போதுமான வடிகால், மரத்திற்கு 50 கிலோ தொழு உரம், 5 கிலோ வேப்பம் புண்ணாக்கு போன்றவற்றையெல்லாம் செய்திட வேண்டும். அது உழவியல் முறை. உயிரி முறையில், "கோகோ கான்" என்ற எதிர் உயிரி கலவையை ஏக்கருக்கு 5 லிட்டர் அளவில் மண்ணில் இட வேண்டும். இரசாயன முறையில் மரத்திற்கு ஜிப்சம் 1 கிலோ, மெக்னிசியம் சல்பேட் அரை கிலோ போன்றவற்றையெல்லாம் செய்திட வேண்டும். இந்த முறைகளையெல்லாம் செய்யும்போது, தென்னை மரங்களை நோய்களிலிருந்து காப்பாற்றக்கூடிய வாய்ப்புகள் உருவாகும்.

ஆகவே, இந்த முயற்சியை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த பதிலுரையில், அந்த அளவிற்கு போதுமான கருத்துக்களை வழங்கியிருக்கின்றோம். சட்டமன்ற உறுப்பினர்களுடைய இந்த மகிழ்ச்சியான ஆதரவு, இதற்கு ஓர் உதாரணமாக இருக்கிறது. இந்த வேளாண்மை நிதிநிலை அறிக்கைக்கு யாரும் எதிர்ப்புக் குரல் கொடுக்கவில்லை. இதற்கு வாய்ப்பளித்த சபாநாயகர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பதிலுரையில் உரையாற்றினார்.



புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், கடியாபட்டி ஊராட்சி, சந்தைபேட்டை பகுதியில், அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்து, நெல் பிரிக்கும் இயந்திரத்தினை துவக்கி வைத்தார். உடன் அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மேகலாமுத்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர் எம்.சீதாராமன், முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் பொன்.இராமலிங்கம், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் திருமதி.கலைவாணி சுப்பிரமணியன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை (திட்டங்கள் அலகு) சார்பில் திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் ரயில்வே கடவு சாலை மேம்பாலம் அமைப்பு பணிகளுக்கான அடிக்கல்லை தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணி துறை அமைச்சர் எ.வ. வேலு நாட்டினார். பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம், சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன், மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, ஒன்றிய பெருந்தலைவர் சோம.செந்தமிழ்ச் செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.ராஜமாணிக்கம்,ஒன்றிய செயலாளர்கள் கே.வி.கே.ஆனந்த், நா.கவியரசு, நகர செயலாளர் ராஜசேகர் ஆகியோர் முன்னிலை ஏற்றனர். மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், அரசு அதிகாரிகள்,பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு - இதுவரை 3601 வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன! நிதி நிலை அறிக்கையில்

# பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.44,042 கோடி வழங்கிய முதல்வருக்கு நன்றி!

## சட்டப் பேரவையில் - அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி உரை!



**சென்னை,பிப். 24 -**

**ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு - இதுவரை 3601 வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன என்றும் நிதிநிலை அறிக்கையில் பள்ளிக் கல்வித் துறைக்கு அதிகப்பட்சமாக ரூ.44,042 கோடி வழங்கிய முதல்வருக்கு நன்றி என்றும் சட்டப் பேரவையில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.**

இதுகுறித்து சட்டப் பேரவையில் உறுப்பினர்களின் கேள்விக்கு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அளித்த பதில் வருமாறு:-

**சதன் திருமலைக்குமார்:** தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், முள்ளிக்குளம் கிராமம், பாண்டியக்கோனார் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் மற்றும் அறிவியல் ஆய்வகம் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** உலக தாய்மொழி தினமான இன்று, புதுமைப் பெண்ணின் தாயாக, தமிழ்ப் புதல்வரின் தந்தையாக, இனி ஊரகப் பகுதியைச் சார்ந்திருக்கின்ற, அரசு உதவி பெறுகின்ற பள்ளிகளிலும் காலை உணவு வழங்கப்படும் என்று சொன்ன தாயுமானவராக, (மேசையைத் தட்டும் ஒலி) 'தடைகளைத் தாண்டி வளர்ச்சியை நோக்கி' என்ற நம்முடைய நிதியமைச்சர் தாக்கல் செய்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையில், சட்டமன்ற வரலாற்றிலேயே அதிகப்படியாக 44,042 கோடி ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய பள்ளிக் கல்வித் துறைக்கு வழங்கியதற்கு, ஆசிரியர்கள் சார்பாக, மாணவர்கள் சார்பாக, பெற்றோர்கள் சார்பாக எங்களுடைய நன்றியை நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், முள்ளிக்குளம் கிரா மத்திலுள்ள பாண்டியக்கோனார் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இரண்டு வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதலாக 4 வகுப்பறைகள் மற்றும் மேல்நிலை வகுப்புகளுக்கு 2 அறிவியல் ஆய்வகங்கள் அமைக்க அரசாணைகள் வெளியிடப்பட்டு, வரும் கல்வியாண்டிலே நபார்டு வங்கிமூலம் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கு.சின்னப்பா:** தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள புளி யங்குடிசங்கரன்கோவில் மாநில நெடுஞ்சாலையின் அருகில் முள்ளிக்குளம் என்ற ஊரில் ஓர் ஆரம்பப்பள்ளி நினைவில் வாழும் பாண்டியக் கோனார் அவர்கள் பெயரில் அவர் தம்பி இராமசாமி கோனார் அவர்களால் துவக்க ப்பட்டு, பின்பு அது நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்ட நிலையில், 1962 ஆம் ஆண்டில் அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. அது 1963 ஆம் ஆண்டில் அரசு உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்டது. பள்ளியை ஒப்படைக்கும் போதே பள்ளியைச் சார்ந்த 5 ஏக்கர் நிலமும், பள்ளிக் கட்டடமும் தானாமாக அரசிடம் ஒப்படைக்கப்பட்டன. அதன் பின்பு, 2008 ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் அந்தப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்ட நிலையில், 2017 ஆம் ஆண்டில், 9 வகுப்பறை கட்டடங்களும், ஓர் அறிவியல் ஆய்வுக்கூடக் கட்டடமும் இடிக்கப்பட்டன. இடிக்கப்பட்ட கட்டடங்களுக்குப் பதிலாக, இதுவரை புதிய கட்டடங்கள் கட்டப்படவில்லை. மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்ட பின்பு, அதற்குரிய போதிய வகுப்பறை கட்டடங்களும், அறிவியல் ஆய்வகங்களும் இல்லை. இப்பள்ளியில் முள்ளிக்குளத்தைச் சுற்றியிலுள்ள 15க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சார்ந்த, ஏழையெளிய, விவசாய வீட்டுப் பிள்ளைகள் படிக்கின்றனர். ஆண்கள் 176 பேர்களும், பெண்கள் 110 பேர்களும் என 286 மாணவ, மாணவிகளும், 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களைப் பயிற்றுவிப்பதற்கு தலைமையாசிரியர் உட்பட 18 ஆசிரியர்களும், பிற பணியாளர்கள் 3 பேர்களும் பணிபுரிகின்றனர். போதிய அறிவியல் ஆய்வகக்கூடமும், கூடுதல் வகுப்பறை கட்டடங்களும் இருந்தால், ஆங்கில வழிக் கல்வி கற்பதற்கும் அங்கே மாணவ, மாணவியர் சேருவார்கள். ஆகவே, இப்பள்ளிக்குத் தேவையான அறிவியல் ஆய்வகக் கட்டடங்களும், கூடுதல் வகுப்பறை கட்டடங்களும் கட்டித்தர வேண்டுமென்றும் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டடம் கட்டப்பட்டு வருவதாகச் சொன்னார். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ததற்கு தொகுதி மக்களின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள கரிவலம்வந்தநல்லூர் அரசினர் அ.மருதப்ப செட்டியார் மேல்நிலைப் பள்ளிக்கு அறிவியல் ஆய்வுக் கூடங்களும், கூடுதல் வகுப்பறை கட்டடங்களும் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, புளியங்குடியிலுள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் சிதிலமடைந்த பழங்கால கட்டடத்தை பழமைமாறா வடிவத்தில் சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இப்பள்ளியின் பழமை வாய்ந்த கட்டடங்கள் கருங்கல்லால் கட்டப்பட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையினால், அமைச்சர் அவர்களிடம் அந்த பள்ளிக் கட்டடத்தை சீரமைக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** ஏற்கெனவே நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின்படி, பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக கிட்டத்தட்ட 7,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்த ஐந்து ஆண்டுகளில் சுமார் 18 ஆயிரம் வகுப்பறைகள், கழிவறைகள் உள்ளிட்ட வகுப்பறைகள் கட்டி முடிக்க வேண்டுமென்று திட்டமிட்டு, ஓர் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு, இதுவரைக்கும் 3,601 வகுப்பறைகள் (மேசையைத் தட்டும் ஒலி), 21 ஆய்வகங்கள், 184 யூனிட் கழிப்பறைகள், 700 மீட்டர் சுற்றுச் சுவர், கலைஞர் நூற்றாண்டு நூலகம் உள்ளிட்ட ஐந்து நூலகங்கள், அதைப்போன்று, பள்ளிகள் மற்றும் வகுப்பறைகளுக்கு, நூலகங்களுக்கு மதிப்பீடு என்று மொத்த மதிப்பீடாக சுமார் 2,080 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இன்றைக்கு கட்டடங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அவருக்குத் தேவைப்படுகின்ற, நான் ஏற்கெனவே சொன்னதைப்போன்று, இந்தக் கல்வியாண்டிலே நபார்டு திட்டத்தின்மூலமாக சொல்லி, அதைக் கண்டிப்பாக நாங்கள் கட்டித்தருவோம். அதுமட்டுமல்லாமல், பழமைவாய்ந்த கட்டடங்க ளைப்பற்றி சொன்னார்கள். கடந்த ஆண்டே, 100 ஆண்டுகளை கடந்திருக்கின்ற ஐந்து பள்ளிக் கட்டடங்களுக்கு தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான பராமரிப்பு பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த முறை எடுக்கின்ற ஒரு 5 பள்ளிகள், கண்டிப்பாக நீங்கள் சொல்கின்ற அந்தப் பள்ளிக் கூடத்தையும் நாங்கள் எடுத்துக் கொள்கின்றோம். அதுமட்டுமல்லாமல், 3,600 வகுப்பறைகள், 105 ஆய்வகங்கள், 191 கழிப்பறைகள், 2,100 மீட்டர் சுற்றுச்சுவர், 5 மாணவர் விடுதிகள், 5 மாணவியர் விடுதிகள் ஆகியவை இப்பொழுது கட்டப்பட்டு வருகின்றன. நீங்கள் கேட்கக்கூடிய கோரிக்கையும் இந்தக் கல்வியாண்டில் கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

# தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ அறிவிப்பு!



தஞ்சாவூர், கலைஞர் அறிவாலயத்தில் இன்று (24.02.2024 - சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் மாவட்டக் கழக அவைத்தலைவர் சி.இறைவன் தலைமையில் தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலை வகிக்கின்றார்.

அதுசமயம் நடைபெறும் கூட்டத்திற்கு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர்க் கழகச் செயலாளர்கள், மாவட்ட ஒன்றிய, பேரூராட்சி குழுத்தலைவர்கள், மாவட்ட சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

பொருள் : 1.2024 மார்ச் 1 தமிழ்நாடு முதல்வர், கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்தநாள் விழா.

2.கழக ஆக்கப் பணிகள்.

**துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ,**
செயலாளர்,
தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க.

கோவை விமான நிலைய விரிவாக்கம் : மக்களின் வரிப் பணத்தில் கையகப்படுத்தப்படும்

# தமிழ்நாட்டு நிலத்தை கார்ப்பரேட்டுகளுக்கு தாரை வார்க்க விட மாட்டோம்!

## சட்டப் பேரவையில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா உறுதி!



**சென்னை, பிப். 24-**

**தமிழ்நாட்டு மக்களின் வரிப் பணத்தில் கையகப்படுத்தப்படும் நிலத்தை கார்ப்பரேட்டுகளுக்கு தாரை வார்க்க விட மாட்டோம் என்று சட்டப் பேரவையில் கோவை விமான நிலைய விரிவாக்கம் குறித்த விவாதத்தில் குறுக்கிட்டு பேசிய அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா உறுதிபடத் தெரிவித்தார்.**

இதுகுறித்து சட்டப் பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**வானதி சீனிவாசன்:** ஏர்போர்ட் தொடர்பாக நான் வேறொரு விஷயத்தைக் கேட்கவிருக்கிறேன். அதற்கான நிலம் எடுக்கப்பட்டு, அவற்றை விமான நிலைய ஆணையத்திற்கு கொடுத்தாலும்கூட, தமிழ்நாடு அரசு மட்டும் அதற்கு புதிதாக கட்டுப்பாடுகள் விதிப்பதால், அந்த விமான நிலையத்தை மேம்படுத்த முடியாத நிலையில் மத்திய அரசு இருக்கிறது. ஏனென்றால், அனைத்து மாநிலங்களுமே விமான நிலை யத்திற்கென நிலத்தைக் கொடுக்கும்போது, அதை surrender செய்கின்றன. அதற்குப் பிறகு அங்கு development பணிகள் நடைபெறுகின்றன. ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் Special Rule சொல்கிறார்கள். இதனால், கோயம்புத்தூர் வளர்ந்து வரக்கூடிய நகரம் என்பதை மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது. ஆனால், (குறுக்கீடு)

**அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா:** உறுப்பினர் அவர்கள் பேசத் துவங்கியபோது, தமிழ், தமிழ்நாடு, தமிழக மக்களுக் காகப் பேசுகிறேன் என்றெல்லாம் கூறினார். ஆனால், தற்போது அவர் இவ்வளவு vehement ஆக சண்டை போடுவதைப் பார்த்தால், வேறு ஏதோ corporate நிறுவ னங்களுக்காகத்தான் அவரது பேச்சு இவ்வளவு நேரமாகத் தொடர்ந்ததா என்பது தெரியாத அளவிற்கு இருக்கிறது. அது ஏன் என்று நான் சொல்கிறேன். தமிழ்நாடு மட்டும் என்ன தனி விதிவிலக்கு என்று அவர்கள் மிகவும் vehement ஆகக் கேட்கிறார்கள். நாம் நமது மக்களின் நிதியின்மூலம் நிலத்தை கையகப்படுத்தி, அதை ஒரு பெரிய விமான நிலையம் அமைப்பதற்காகக் கொடுக்கிறோம். அதை Airports Authority of Indiaவிற்குக் கொடுக்கிறோம். அவ்வாறு கொடுத்த பிறகு, அதை அந்த அரசு, அதுவும் குறிப்பாக அவர்களது ஒன்றிய அரசு மிகப் பெரிய அளவிற்கு தனியார்மயமாக்குவதற்கான அரசாகவே அது இருக்கிறது. எடுத்தவுடனேயே நம்மிடமிருந்து நிலத்தை வாங்கிக்கொண்டு, அதாவது, நமது மக்களின் வரிப் பணத்தில் நிலத்தை வாங்கி, அதை தனியாருக்குத் தாரை வார்க்கும் வேலையைத்தான் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அதை முறியடிக்க வேண்டும்; மக்களின் வரிப் பணம், தமிழகத்தின் வரிப் பணம் தமிழ்நாட்டிலேயே தான் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த நிலைப்பாட்டினை எடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆம். தமிழ்நாடு தனித்துவம் மிக்க ஒரு மாநிலம்தான். அப்படித்தான் இருப்போம். உங்களுக்கெல்லாம் தாரை வார்த்துக் கொடுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் நிலம், நமது மக்களிடம்தான் இருக்க வேண்டும். நம்முடைய சொத்து நம்மிடம்தான் இருக்க வேண்டுமே தவிர, அதைக் கொண்டுபோய் உங்கள் ஆட்களுக்கு, corporate நிறுவனங்களுக்கு தானம் செய்கிற அரசாக இந்த அரசாங்கம் இருக்காது. எதற்காகக் கூறுகிறோம் என்றால், அந்த நிலத்திற்கென ஒரு மதிப்பு இருக்கிறது. நிலத்தை AAIக்கு கொடுக்கிறோம் என்றால், அதை privatize செய்யும்போது அதற்கேற்ப நமக்கு equity இருக்க வேண்டும் என்று கேட்கிறோம். அதில் என்ன தவறு இருக்கிறது என்பதை நீங்களே சொல்லுங்கள். நாம் நமது வரிப் பணத்திலிருந்து, நீங்களும் செலுத்தக் கூடிய வரிப் பணத்திலிருந்துதான் நிலத்தை வாங்குகிறோம். அதை எதற்கு பணமே வாங்காமல் நாம் அவர்களிடம் கொடுக்க வேண்டும்? அந்தக் காலம் எல்லாம் கடந்துவிட்டது. அந்தக் காலத்தில்தான் ஒன்றிய அரசின் அக்கறை, கருணை ஆகியவையெல்லாம் தேவைப்பட்டன. ஆனால், தற்போது எவ்வளவோ முதலீட்டாளர்கள் தயாராக இருக்கிறார்கள். அவர்களே நேரடியாக இப்படிப்பட்ட தமிழகத்தைப் போல ஒரு தனித்துவம் மிக்க மாநிலம் இந்தியாவில் வேறு எங்குமே இல்லை என்று உலகமே பறைசாற்றிக் கொண்டிருக்கும் வேளையில், (மேசையைத் தட்டும் ஒலி) ஊரே பாராட்டிக் கொண்டிருக்கும் வேளையில், இந்த ஒரு நிலைப்பாடு மிகச் சிறப்பானதொரு நிலைப்பாடு என்று அனைத்து இயக்கத்தினரும் நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். எதிரணியினரும் பாராட்டும் ஒரு நிலைப்பாடுதான் இது. இதை நீங்களும் முழுமையாகப் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்ள வேண்டும். நிச்சயமாக தமிழகத்தின் வரிப் பணத்தில் கையகப்படுத்தப்படும் நிலத்தை நாங்கள் வேறு யாருக்கும் தாரை வார்க்கமாட்டோம் என்ற அந்த நிலைப்பாட்டிலிருந்து இந்த அரசாங்கம் மாறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**எஸ்.பி. வேலுமணி:** எங்களைப் பொறுத்தவரை, விமான நிலையம் விரிவாக்கப்பட்டு, எப்போது cargo flight வரும், எப்போது கோயம்புத்தூர் develop ஆகும் என்றுதான் நாங்கள் கேட்கிறோம்.

**அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா:** உறுப்பினர் அவர்கள் கூறியது போல், அந்தப் பணிகளை அவர்கள் இன்னும் முழுமையாக முடிக்கவில்லை. திராவிட நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இந்த திராவிட மாடல் ஆட்சியில்தான் பணிகள் தற்போது துரிதப்படுத்தப்பட்டுள்ளது. சுமார் 30 ஏக்கர் பட்டா நிலங்கள் மேலும் கையகப்படுத்தப்பட வேண்டியுள்ளது. மார்ச் மாத இறுதிக்குள் முடிப்பதற்கான பணிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். வெகுவிரைவில் அந்தப் பணிகள் முடிக்கப்படும். என்னையும் நேரடியாக டெல்லிக்குச் செல்லுமாறு சொல்லியிருக்கிறார்கள். அங்கு நேரடியாக அமைச்சர் அவர்களுடனோ அல்லது சம்பந்தப்பட்ட வேறு யாருடனுமோ அமர்ந்து பேசி, நமது நிலைப்பாட்டினை எடுத்துக் கூறவிருக்கிறோம்.

புதுமையான முயற்சி. இது என்று சொல்லவில்லை. எல்லோருமே, எல்லா மாநிலங்களும் செய்வதால் அதையே நாம் தொடர்ந்து செய்ய வேண்டாம் என்று முயற்சித்திருக்கிறோம். புதுமையான முயற்சி. அனைவரும் ஒருமித்த குரலாக இதில் ஒலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**எஸ்.பி.வேலுமணி:** நீங்கள் இதை ஒரு முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். நீண்ட காலமாக நீங்கள் ஆட்சிக்கு கிட்டத் தட்ட 3 வருடமாகிவிட்டது. அதனால் சீக்கிரமாக இந்தப் பிரச்சினையை முடிக்க வேண்டுமென்றுதான் நான் சொல்கிறேன்.

**அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா:** உறுப்பினர் கூறிய அதே நிலைப்பாடுதான் நமக்கும். இதை விரைவில் முடிக்க வேண்டுமென்றுதான் முதல மைச்சர் அவர்களும் மிகவும் தெளிவாக இருக்கிறார்கள். ஆனால், அவர் சொல்வதைப்போல, எந்த விதத்திலும் இதனால் ஒரு பாதிப்பும் இல்லாத அளவுக்கு முதலமைச்சர் அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் தமிழகத்தில் இந்த அளவில், குறிப்பாக, தொழில் வளர்ச்சிக்கு இப்போது நாம் கோயம் புத்தூருக்கே இவ்வளவு பெரிய TIDEL Park இதெல்லாமே அறிவித்து வருகிறோம். மிகப்பெரிய அளவில் அங்கு interest பெருகி வருகிறது. நிச்சயமாக இதனால் இந்த ஒருசில மாதங்கள் தொய்வினால் அங்கே ஒரு பெரிய பாதிப்பு ஏற்படாத அளவுக்கு நிச்சயமாக இந்த அரசாங்கம் பார்த்துக்கொள்ளும். மிகப் பெரிய வளர்ச்சி கோவை மாநகரத்திற்கு கோவை பகுதிக்கு நிச்சயமாக காத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**வானதி சீனிவாசன்:** விமான நிலைய வளர்ச்சியை தடைபடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஏனென்றால், அங்கு வந்து infrastructure develop ஆகும்போது connectivity என்பது ஒரு crucial factor. நீங்கள் அதை ஓர் அரசியல் ரீதியான நிலைப்பாட்டில் நீங்கள் அவர்களுக்குக் கொடுத்து விடுவீர்கள்; இவர்களுக்குக் கொடுத்து விடுவீர்கள். உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தி உலகத்தில் இருக்கிற எல்லோரையும் கூட்டிக் கொண்டு வந்து, தமிழ்நாட்டிற்கு வாருங்கள் என்கிறீர்கள். அப்புறம் கோயம் புத்தூர் மட்டும் தனியாக இருக்கிறது. ஏன் இந்த நிலை?

**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா:** உறுப்பினர் இவ்வளவு tension ஆகத் தேவையில்லை. இவ்வளவு tensionஐ நீங்கள் கொண்டு போய் நீங்கள் ஒன்றிய அமைச்சரிடம் நாம் நிறைய நேரடி விமான connections கேட்டுக் கொண்டிருக்கிறோம். இன்று சென்னைக்கு வர வேண்டிய flight எல்லாவற்றையும் கொண்டுபோய் இவர்கள் பெங்களூருவுக்கும் மற்ற பகுதிகளுக்கும் எல்லாம் இவர்கள் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். சென்னைக்கு வர வேண்டிய முக்கியமான இணைப்புகள் நேரடியாக Tokyo வுக்கு இணைப்பு கேட்டி ருக்கிறோம். நேரடியாக Korean Aircrafts கேட்டுக் கொண்டிருக்கிறோம். நேரடியாக USக்கான இணைப்பு கேட்டுக் கொண்டிருக்கிறோம். இதெல்லாவற்றையும் தராத ஒன்றியம் ஏன் இன்றைக்கு வெறும் கோவைக்கு மட்டும் இவ்வளவு குதித்துக் கொண்டிருக்கிறதென்று தெரியவில்லை. அதனால் கவலைப்பட வேண்டாம். அந்தக் கோவை உட்பட தமிழகத்தில் இன்னும் அனைத்து பகுதிகளிலும் உள்ள அனைத்து விமான நிலையங்களுக்கும் மிகப் பெரிய வளர்ச்சி நிச்சயமாகக் காத்திருக்கிறது. குறிப்பாக, ஒசூர் போன்ற புதிய நகரங்களிலும் பெரிய விமான நிலையங்களெல்லாம் வருவதற்கான வேலைகளை தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் ஆட்சி செய்து கொண்டிருக்கிறது.

**அமைச்சர் துரைமுருகன்:** முதலில் இந்த நில த்தைப் பற்றி வந்தபோதே பேசலாம் என்று பார்த்தேன். இந்த சமாச்சாரமெல்லாம் முடியட்டுமென்றுதான் இருந்தேன். இந்த நிலத்தைப்பற்றி ஒரு விஷயம். 1795 ஆம் ஆண்டு வரையில் அனைவரும் நிலம் வாங்குவதற்கு வெள்ளைக்காரன் காலத்திலே யாருக்கும் உரிமை கிடையாது. மேல் ஜாதிக்காரர்கள் மட்டும்தான் நிலம் வாங்க முடியும். British அரசாங்கத்தில் தான் 1795க்குப் பிறகுதான் மற்றவர்கள் நிலம் வாங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

எல்லோரும் நிலம் வாங்கலாம் என்று அனுமதி கொடுத்தார்கள். அதுவரையில் உயர் ஜாதியினர் மட்டும்தான் நிலம் வாங்க அனுமதி இருந்தது. 1795க்குப் பிறகு உயர் ஜாதியினர், பட்டியல் ஜாதியினருக்கு நிலம் வாங்க அனுமதி மறுத்த காரணத்தால், அந்த பஞ்சமி நிலம் என்ற முறை அப்போதுதான் கொண்டு வரப்பட்டது.

அந்த பஞ்சமி நிலம் தொடர்பான transfer நடவடிக்கைகள் ஒன்றிய அரசுதான் எடுக்க வேண்டும்

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.






நாள் : 23, 24.02.2024, வெள்ளி, சனிக்கிழமை
இடம் : வேலம்மாள் பொறியியல் கல்லூரி, மதுரை

# தி.மு.க.பொறியாளர் அணி நடத்தும்

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா

## மதுரை & நெல்லை மண்டல அளவிலான பேச்சுப்போட்டி மற்றும்

# கலைஞர் கொண்டாட்டம்

## கலைத் திருவிழா

வரவேற்புரை :

**வே.உமாகாந்த்** — மாநில துணைச் செயலாளர், மதுரை மண்டல பொறுப்பாளர்
**ச.பிரதீப்** — மாநில துணைச் செயலாளர், நெல்லை மண்டல பொறுப்பாளர்

முன்னிலை :

**எஸ் கே பி. கருணா** — மாநில பொறியாளர் அணிச் செயலாளர்
**துரை கி.சரவணன்** EX.MLA — மாநில பொறியாளர் அணித் தலைவர்
**அ.வெற்றியழகன்** — மாநில பொறியாளர் அணி இணைச் செயலாளர்
**கு.சண்முகசுந்தரம்** **இரா.நரேந்திரன்** **இரா.ப.பரமேசகுமார்** — மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர்கள்

தலைமையேற்று சிறப்புரை

மாண்புமிகு
**ஐ.பெரியசாமி** அவர்கள்
ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர், கழக துணை பொதுச் செயலாளர்

மாண்புமிகு
**பி.மூர்த்தி** அவர்கள்
வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளித்து சிறப்புரை

மாண்புமிகு
**ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்** அவர்கள்
உயர்கல்வித்துறை அமைச்சர்

திருமிகு
**மு.மணிமாறன்** — மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர்

திருமிகு
**கோ.தளபதி** MLA — மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர்

வாழ்த்துரை

மாண்புமிகு **KKSSR.ராமச்சந்திரன்** அவர்கள் — வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்
மாண்புமிகு **P.T.R.பழனிவேல் தியாகராஜன்** அவர்கள் — தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்
மாண்புமிகு **தங்கம் தென்னரசு** அவர்கள் — நிதி, மனிதவளம் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்
மாண்புமிகு **K.R.பெரியகருப்பன்** அவர்கள் — கூட்டுறவுத் துறை அமைச்சர்
மாண்புமிகு **அனிதாஆர்.ராதாகிருஷ்ணன்** அவர்கள் — மீன் வளம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்
மாண்புமிகு **அர.சக்கரபாணி** அவர்கள் — உணவுத் துறை அமைச்சர்
மாண்புமிகு **பி.கீதாஜீவன்** அவர்கள் — சமூக நலத் துறை அமைச்சர்
மாண்புமிகு **த.மனோ தங்கராஜ்** அவர்கள் — பால் வளத் துறை அமைச்சர்

திரு **இரா.ஆவுடையப்பன்** — திருநெல்வேலி கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர்
திரு **TPM.மைதீன்கான்** — திருநெல்வேலி மத்திய மாவட்ட கழகச் செயலாளர்
திரு காதர்பாட்சா **முத்துராமலிங்கம்** MLA — இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர்
திரு **இ.பெ.செந்தில்குமார்** MLA — திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர்
திரு கம்பம் **நா.இராமகிருஷ்ணன்** MLA — தேனி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்
திரு **தங்க தமிழ்செல்வன்** — தேனி வடக்கு மாவட்ட கழகச் செயலாளர்
திரு மேயர் **ரெ.மகேஷ்** — கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர்
திரு **ஈ.இராஜா** MLA — தென்காசி வடக்கு மாவட்ட கழகச் செயலாளர்
திரு **வே.ஜெயபாலன்** — தென்காசி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்

**எம்.சுரேஷ்** — மதுரை தெற்கு மாவட்ட அமைப்பாளர்
**அ.வினோத்குமார்** — மதுரை மாநகர் மாவட்ட அமைப்பாளர்
**கலை.கார்த்திகேயன்** — மதுரை வடக்கு மாவட்ட அமைப்பாளர்





## தலைப்புகள்

1. "தமிழ்ச் சமூகத்தின் மீதான கலைஞரின் அன்பு"
2. "பெரியார், அண்ணா வழியில் கலைஞரின் சாதனைகள்"
3. "கலைஞரால் தலை நிமிர்ந்த தமிழகம்"

## கலந்து கொள்ளும் மாவட்டங்கள்

- மதுரை தெற்கு
- மதுரை மாநகர்
- மதுரை வடக்கு
- திண்டுக்கல் கிழக்கு
- திண்டுக்கல் மேற்கு
- தேனி வடக்கு
- தேனி தெற்கு
- விருதுநகர் வடக்கு
- விருதுநகர் தெற்கு
- இராமநாதபுரம்
- திருநெல்வேலி கிழக்கு
- திருநெல்வேலி மத்தியம்
- தென்காசி வடக்கு
- தென்காசி தெற்கு
- தூத்துக்குடி வடக்கு
- தூத்துக்குடி தெற்கு
- கன்னியாகுமரி கிழக்கு
- கன்னியாகுமரி மேற்கு
- சிவகங்கை

# தி.மு.க.பொறியாளர் அணி


நாள் : 24.02.2024
சனிக்கிழமை காலை 11 மணி
இடம் : நெம்மேலி.
ARASU ARTS
செங்கல்பட்டு மாவட்டத்தில்
ரூ. 2465 கோடி மதிப்பீட்டில் கடல்நீரை குடிநீராக்கும் நிலையம்,
95 முடிவுற்ற திட்டப் பணிகள் மற்றும் ரூ. 2058 கோடி மதிப்பீட்டில்
40 புதிய திட்டப் பணிகளை அடிக்கல் நாட்டி துவக்கி வைக்க வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களை வருக. வருக.. என அன்புடன் வரவேற்கும்
கே.என்.நேரு
கழக முதன்மைச் செயலாளர் – நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர்

## சேலம் மாவட்டம் - காவிரி ஆற்றின் குறுக்கே இரண்டு பாலங்கள்!

# ஆய்வில் உறுதித் தன்மை இருக்குமானால் பணியைத் தொடர முன்னுரிமை அளிக்கப்படும்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு பதில்!

**சென்னை, பிப்.24- காவிரியின் குறுக்கே இரண்டு பாலங்கள் அமைப்பது குறித்து ஆய்வில் உறுதித் தன்மை இருக்குமானால் பணியை தொடர அரசு முன்னுரிமை அளிக்கும் என்று சட்டப் பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு பதிலளித்தார்.**

இதுகுறித்து சட்டப் பேரவையில் ஈ.ஆர்.ஈஸ்வரன் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் எ.வ.வேலு பதில் வருமாறு:-



**ஈ.ஆர். ஈஸ்வரன்:** காவிரி ஆற்றின் குறுக்கே, சேலம் மாவட்டம் பூலாம்பட்டியையும், ஈரோடு மாவட்டம் நெருஞ்சிப்பேட்டையையும் இணைக்கின்ற ஒரு பாலம், சேலம் மாவட்டம் கொளத்தூர் ஒன்றியத்தில் கோட்டையூர் பகுதியையும், பெண்ணாகரத்தையும் இணைக்கின்ற ஒரு பாலம், காவிரி ஆற்றின் குறுக்கே இந்த இரண்டு பாலங்களும் அவசியமான பாலங்கள். அதை அமைச்சர் அவர்கள் முடித்துத் தர வேண்டும். கோட்டையூர், பெண்ணாகரம் பாலம் அமைக்கப்பட்டால், தோப்பூரிலே நடக்கின்ற விபத்துகளுக்கு ஒரு தீர்வு வரும், ஒரு மாற்றுப் பாதையாக அது இருக்கும் என்பதைக் கருத்திலே கொண்டு, இந்தப் பாலங்களை அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

**அமைச்சர் எ.வ. வேலு:** காவிரி ஆற்றுப் பாலத்தைப் பற்றி இரண்டு இடத்திலே அவருடைய தொகுதி சம்பந்தப்பட்டதை அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர் கடிதம் கொடுத்தால், அதை ஆய்வு செய்து இந்த நிதி ஆண்டிலே சேர்த்துக் கொள்ள முடியுமா என்பது, முதலமைச்சர் அவர்களின் அனுமதி பெற்று சேர்ப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இன்னொன்று, நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர், நம்முடைய அண்ணன் ஜி.கே. மணி அவர்கள் ஏற்கெனவே தொடர்ந்து இதே சட்டமன்றத்திலே அந்தக் கேள்வியை வைத்தார்கள். அதையே நீங்கள் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்.

ஏற்கெனவே, அதற்கு DPR தயார் செய்வதற்காக நாங்கள் சொன்னபோது, இல்லை, அது மேட்டூர் அணையினுடைய தண்ணீர் இருக்கிற இருப்பிலே அது இருக்கிறது. ஆதலால், அது pile foundation போட்டால்கூட நிற்க முடியாது என்று ஒரு DPR report கொடுத்துவிட்டார்கள். ஆனாலும் அவர் விடுவதாக இல்லை. ஏனெனில், ஏற்கெனவே முதலமைச்சர் அவர்களிடம் கடிதம் கொடுத்து, அதன் மூலமாக வந்திருக்கிறது. மறுபடியும் அதற்கு முக்கியத்துவம் தந்து வேறொரு தனியார் companyயை அழைத்து DPR தயார் செய்வதற்கு வேண்டிய ஏற்பாட்டை செய்திருக்கிறோம். Pile foundation போட்டு அதற்கு உறுதித் தன்மை இருக்குமேயானால் ஏனெனில் கடிதம் முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்கு சென்று, எங்கள் துறைக்கு வரப்பெற்றிருப்பதால் அதற்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்பதன் அடிப்படையிலே எங்கள் துறையில் அதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். முதல் ஆய்வில் அது முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

இரண்டாவதாக, இன்னும் திறமையானவர்களை அழைத்து அவர்களிடம் இதைக் கொடுத்திருக்கிறோம். அவை pile foundationல் போட்டால் அந்தப் பாலம் நிற்கும் என்ற நிலை ஏற்பட்டால், அந்தப் பணிகளைத் தொடரலாம். ஏனென்றால், நீங்கள் சொல்கிறீர்கள் என்பதற்காக pile foundation போடப்பட்டு, பாலத்தைக் கட்டி, அதற்குப்பின் பாதுகாப்புத் தன்மை இல்லை என்று சொன்னால், அது எந்தளவிற்கு விமர்சனத்திற்கு ஆளாகும் என்பது உங்களுக்குத் தெரியும். இரண்டாவதாக செய்யப்படும் DPRல் முறையாக உறுதித் தன்மை இருக்குமேயானால் அந்தப் பணிகளைத் தொடருவது குறித்து அரசு அதற்கு முன்னுரிமை அளிக்கும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பதிலளித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.2.2024) தலைமைச் செயலகத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் சிந்தனைச்செல்வன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ். பாலாஜி, ஜெ. முகம்மது ஷா நவாஸ், எம்.பாபு, சமூக செயற்பாட்டாளர் ரமேஷ் பாபு ஆகியோர் சந்தித்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்கான நிதி செலவிடப்படுவதை உறுதி செய்வதற்கும், அவர்களுக்கான மேம்பாட்டுச் செயல் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சட்டம் இயற்றியதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

## சின்னசேலம் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த வேண்டும்!

# சங்கராபுரத்தில் கலை - அறிவியல் கல்லூரி தொடங்கிடுவீர்!

## சட்டப் பேரவையில் - கழக உறுப்பினர் த.உதயசூரியன் உரை!

**சென்னை, பிப். 24- சட்டப்பேரவையில் (21.02.2024) அன்று நிதி நிலை அறிக்கை மற்றும் வேளாண் நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய சங்கராபுரம் தொகுதி கழக உறுப்பினர் த.உதயசூரியன், "சின்ன சேலம் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த வேண்டும்!" என்றும், "சங்கராபுரத்தில் கலை - அறிவியல் கல்லூரி தொடங்கிட வேண்டும்!" எனவும் வேண்டுகோள் விடுத்தார்.**

சட்டப் பேரவையில் அவர் பேசியதாவது:-

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரை, நிறைய பேர் நிறைய கருத்துகளைச் சொல்லியிருக்கின்றார்கள். எதிர்க் கட்சித் தலைவர் கூட கானல் நீர் என்று சொன்னார்கள். அவரைப் பொறுத்தவரை கானல் நீர் என்று சொன்னார், எங்களைப் பொறுத்தவரை வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு, மேட்டூர் அணையில் தண்ணீர் குறைவாக இருந்தாலும் 3 TMC தண்ணீரை 3.2.2024 அன்று திறக்கப்பட்டு, 25,000 ஏக்கர் சம்பா சாகுபடியைக் காப்பாற்றிய, இந்த budgetஐ உருவாக்கிய எங்களுடைய தலைவருக்கு வணக்கம். காகிதப் பூ மணக்காது என்றெல்லாம் சொன்னார்கள். காகிதப் பூ என்ற நாடகத்தை 1966 ஆம் ஆண்டில், 1967 தேர்தலுக்கு முன்பு எழுதியவர் எங்கள் ஐயா கலைஞர். ஆகவே, என்னைப் பொறுத்தவரை தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் இந்த நிதிநிலை அறிக்கையை ஏழை எளிய மக்கள் பறிக்காத கிடைத்த பனம்பழம் போல், இன்றைக்கு இந்த budget அமைந்திருக்கிறது. ஆனால், காவி பூசும் சில தனவான்களுக்கு இந்த budgetன் அருமை தெரிவதற்கு வாய்ப்பில்லை. ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையில் கடைக்கோடி மக்கள் வரை, ஏன் மழைவாழ் பழங்குடியின மக்கள் முதல் சாதாரண ஏழையெளிய மக்கள் வரை, மாணவர், மாணவியர், தொழிலாளர், விவசாயிகள் என பலதரப்பட்ட மக்கள் அனைவருக்கும் இந்த budgetல் பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

15வது நிதிக் குழு 41 சதவிகிதம் தரவேண்டுமென்று சொல்லியிருந்தும், ஒன்றிய அரசிடமிருந்து நிதிப் பகிர்வு முறையாக கிடைக்கவில்லை, ஆனால், 30 சதவிகிதம்தான் ஒன்றிய அரசு தருகிறது. GST இழப்புத் தொகை ரூ.20,000 கோடி தர வேண்டும். ஆனால், சென்ற ஆண்டு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற நிலைமைகள் இருந்திருந்தும், கோவையில் Metro rail திட்டத்தை ஏன் ஆரம்பிக்கவில்லை என்றுகூட பேட்டி கொடுத்தார்கள். ஆனால், 50 சதவிகிதம் மாநில அரசும், 50 சதவிகிதம் ஒன்றிய சர்க்காரும் கொடுக்கவேண்டும். ஏன் தரவில்லை? ஆகவே, இப்படி தராமல் இருக்கின்ற ஒன்றிய அரசைச் சார்ந்தவர்கள் எங்களைக் குறை சொல்லுகின்ற சூழ்நிலையில் தங்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். இன்னும் மேலோங்கிச் சொல்லவேண்டுமென்று சொன்னால், பெரியாரும். அண்ணாவும். கலைஞரும் யாத்துத் தந்த இலட்சியம், கொள்கைகளைப் பின்பற்றி, எங்களுடைய மாண்புமிகு தமிழக முதல்வர், திராவிட மாடல் ஆட்சி நடத்துகின்ற இந்தவேளையில், பெரியார் நினைத்த நினைவுகள், அண்ணா நினைத்த கொள்கை, இலட்சியம், கலைஞர் நினைத்த சில நெகிழ்வுகள் அவை அனைத்தையும் ஒன்றுசேர இந்த ஆட்சியில் பல்வேறு திட்டங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஒன்றிய அரசில் பிரதமர் அவர்கள் 'பிரதமரின் விஸ்வ கர்மா' என்ற திட்டத்தை ரூ.13 கோடி அளவில் உருவாக்கி இருக்கின்றார்கள். ஆனால், திட்டத்தைப் போட்டுவிட்டு ஒவ்வொரு சமுதாயத்தையும் இதிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். குயவர்கள் என்றும், காலணி தைப்பவர்கள் என்றும், சலவைத் தொழிலாளி என்றும், பொற்கொல்லர் என்றும், தச்சர் என்றும் இத்திட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், எங்களுடைய ஐயா கலைஞர் அவர்கள், 1944 ஆம் ஆண்டு, ஒரு குறிப்பிட்ட சமூகம் சார்ந்தவர்கள் சிதம்பரத்திலே வருணாசிரம மாநாடு நடத்திய போது, அந்த மாநாட்டினை எதிர்த்து ஒரு பாடலையே பாடி, தன்னுடைய முதலிரவுக்குக்கூட போகாமல் ரயிலடியில் கைது செய்யப்பட்ட ஐயா கலைஞரைத் தாங்கியிருக்கின்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

ஒருவர் ஒரு சமுதாயத்தில் பிறந்தார் என்று சொன்னால், குயவர் சமுதாயத்தில் பிறந்திருந்தால் அவர் மண் பாண்டம்தான் செய்ய வேண்டும்; முடி திருத்துவோர் சமுதாயத்தில் பிறந்திருந்தால் முடி தான் வெட்டவேண்டும்; சலவைத் தொழிலாளி சமுதாயத்தில் பிறந்திருந்தால் சலவைத் தொழில்தான் செய்யவேண்டும்; தச்சு வேலை சமுதாயத்தில் பிறந்திருந்தால் தச்சுவேலைதான் செய்யவேண்டும்; என நான் சொல்லிக்கொண்டே போகலாம். இப்படி, ஒரு சமுதாயத்தில் பிறந்தவர்கள் அவர்களின் குலத் தொழிலைத்தான் செய்யவேண்டுமென்று இருந்த அவல நிலையை 1944 ஆம் ஆண்டில்,

"பரணி பல பாடி,
பாங்குடன் வாழ்ந்த
பைந்தமிழ் நாட்டில்
சொரணை சிறிதுமிலாச்
சுயநலத்து சோதாக்கள் சிலர்கூடி
வருணத்தை நிலை நாட்ட
வகையின்றி கரணங்கள் பலபோட்டாலும்
மரணத்தின் உச்சியில்
மானங்காக்க மறத்தமிழா போராடு"

என்று சொன்னவர்தான் எங்கள் ஐயா கலைஞர் அவர்கள்.

அதனுடைய வழித்தோன்றலாகத்தான் எல்லா சமுதாய மக்களும் திருக்கோயில்களில் அர்ச்சகராகலாம் என்ற சட்டத்தினையும் எங்கள் ஐயா கலைஞர் அவர்கள் உருவாக்கித்தந்த நிகழ்வுகள் உண்டு என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

பாசிசத்தையும், எதேச்சதிகாரத்தையும் வேரோடு அழிக்க இந்தியாவில் நெஞ்சுயர்த்தி எங்கள் கழகத் தலைவர் அவர்கள், போற்றுவோர் போற்றட்டும், புழுதி வாரி தூற்றுவோர் தூற்றட்டும் என்று சொல்லி தொடர்ந்து செல்வேன்; எவர் வழியிலும் நில்லேன், அஞ்சேன் என்ற வார்த்தைகளின் அடிப்படையில், ஒன்றிய அரசு நமக்கு நிதிப் பகிர்வு கொடுத்தாலும், கொடுக்கவில்லை என்று சொன்னாலும் ஆனாலும்கூட இடையிலே, சென்னையிலே ஏற்பட்ட பேரிடர், அதேபோல, தூத்துக்குடி, திருநெல்வேலியில் ஏற்பட்ட பேரிடர்கள், இந்தப் பேரிடர்களில் நான்கு நாட்கள் நானும், எங்களுடைய பொறுப்பு அமைச்சர், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களோடு இருந்தபோது, 3 நாட்கள் அந்த மக்கள் வெளியே வர முடியாத நிலைமை. எங்களிடம் சொன்னார்கள், VAO வரவில்லை; அந்த ஊர் president வரவில்லை, vicepresident வரவில்லை என்று சொன்னபோது, கழுத்தளவு தண்ணீர் இருக்கின்றபோது, வீட்டை விட்டு அவர்கள் மட்டும் எப்படி வெளியே வருவார்கள் என்றெல்லாம் விளக்கம் சொல்லி, 2 நாட்கள், 3 நாட்கள் கழித்து அவர்களுக்குத் தேவையான திட்டங்களைக் கொடுக்கின்றபோது, மத்திய ஒன்றிய அமைச்சரும், நிதி யமைச்சரும் வந்து பார்வையிட்டு, எல்லாவற்றையும் கேட்டுவிட்டு, முதலமைச்சர் அவர்களும் கோரிக்கை வைத்தும், ஒரு பைசாக்கூட கொடுக்காத ஒன்றிய அரசுஅதை எதிர்ப்பார்க்காமல் எங்களுடைய தலைவர் ஒரு குடும்பத்திற்கு 6,000 ரூபாய் பணம் கொடுத்த நிகழ்வுகளையும், விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகளுக்கும், உயிர், உடைமைகளை இழந்த அந்தக் குடும்பங்களுக்கும் நிதிக் கொடுத்த நிகழ்வுகள் உண்டு.

### தாய்மொழி நாள்!

எங்கள் ஐயா கலைஞர் அவர்கள் அடிக்கடி ஒன்றைச் சொல்லுவார். ஊளையிடும் நரிகள், ஒன்று வலப் பக்கம் போகும்; ஒன்று இடப்பக்கம் போகும் அது வலம் போனால் என்ன, இடம் போனால் என்ன; நம்மிடமிருந்து பிடுங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லுவார். அதனடிப்படையில்தான், ஒன்றிய அரசு நிதிக் கொடுத்தாலும், கொடுக்கவில்லை என்று சொன்னாலும், நாட்டு மக்களைக் காப்பாற்றுகின்ற நிகழ்வில் எங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிதிகளை மக்களுக்குக் கொடுக்கின்ற நிகழ்வுகளில் தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டிருக்கின்றார் என்று சொன்னால், இது தான் திராவிட மாடல் ஆட்சி. ஆகவே, இந்த வேளாண்மை நிதிநிலை அறிக்கையை படிக்கின்றபோது, நிறையபேர், வார்த்தை ஜாலங்கள் என்று சொன்னார்கள். தமிழிலே தங்குதடையின்றி, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் படித்தார்கள் என்றுகூட சொன்னார்கள். இது தாய்மொழி; இன்றைக்கு 'தாய்மொழி தினம்'. ஆகவே, தமிழ்நாட்டில் பிறந்து, தமிழனாக இருக்கின்ற ஓர் அமைச்சர் தங்குதடையின்றி படித்ததைப் பார்த்து, தடையில்லாமல் படித்தார் என்று பேட்டிக் கொடுக்கின்ற இந்தச் சூழ்நிலையில் அமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறையில் திருக்குறள், பாரதியார், கம்பர், தொல்காப்பியர், சீவக சிந்தாமணி போன்ற இத்தனை பேர்களையும், பாடல்களையும் இந்தப் பட்ஜெட்டில் கொண்டு வந்திருக்கிறார். ஆகவே, தங்குதடையின்றிசொல்லத் தெரியாதவர்கள் சொல்வதை வரவேற்க வேண்டும். ஆனால், தங்குதடையின்றி படிக்கின்ற சூழ்நிலையைச் சுட்டிக்காட்டி இந்தப் பட்ஜெட்டில் ஒன்றுமில்லை என்று சொல்கிறார். ஆகவே, திராவிட மாடல் ஆட்சியில் பத்தாண்டு காலம் அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்ற போது, 2 இலட்சம் பேர்களுக்குத்தான் மின்னிணைப்புக் கொடுக்கப்பட்டது; அதிலே தட்கலில் 50 ஆயிரம் பேர். இரண்டரை இலட்சம் ரூபாய் பணம் கட்டினால்தான் தட்கலில் மின்னிணைப்பு, ஒன்றரை இலட்சம் பேர்களுக்கு இலவச மின்சாரம்ஆனால், ஒன்றரை இலட்சம் பேர்களுக்கு இரண்டு ஆண்டு காலத்தில் கொடுத்துவிட்டு, இப்போது இரண்டரை இலட்சம் பேர்களுக்கு 33 மாத காலத்தில் விவசாயிகளுக்கு மின்னிணைப்புக் கொடுக்கின்ற நிகழ்வு உருவாக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல கரும்புக்கு, ஐந்து வருடங்கள் 2,750 ரூபாய்தான் டன்னுக்கு வழங்கப்பட்டது. அதை ஒன்றிய அரசு சொல்லியிருக்கலாம் அல்லது வருவாய் பகிர்வு மூலமாகவும் சொல்லியிருக்கலாம். ஆனால், ஐந்து வருடங்களாக 2750 ரூபாய்தான். 2021 ஆம் ஆண்டில் நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2,900, 2022 ஆம் ஆண்டு ரூ.2,950, 2023 ஆம் ஆண்டு ரூ.3,016, இப்போது, 2024 ஆம் ஆண்டு 3,134 ரூபாய் 75 காசு. இன்றைக்கு இந்தப் பணத்தைக் கொடுத்திருக்கின்றோம். ஆகவே, அ.தி.மு.க. ஆட்சியில் கடந்த மூன்று வருட காலம், 3.15 இலட்சம் விவசாயிகளுக்கு 353 கோடி ரூபாய்தான் ஊக்கத்தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த 33 மாத காலகட்டத்தில் 624 கோடி ரூபாய் ஊக்கத்தொகை, இருமடங்காகக் கொடுத்திருக்கின்ற ஆட்சி அவர்களுடைய ஆட்சி என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல, மலைவாழ் பழங்குடியின மக்களுக்கு 'தொல்குடி' திட்டம் 6 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவிருக்கிறது கோடி.

### மலைவாழ் மக்களுக்கு பணிமனை!

மலைவாழ் மக்கள் எங்கு இருக்கிறார்கள் என்று பார்த்து, அவர்களை கண்டுபிடித்து, அந்த மக்களுக்கு மலைப் பகுதிகளில், விளக்குகள், மின்சாரம், சாலை வசதிகள், குடியிருப்பதற்கு வீடுகள் போன்ற வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதோடு மட்டுமல்லாமல், 1 இலட்சம் இளைஞர்களை தேர்வு செய்து, அவர்கள் படிப்பதற்கும், அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தொழில் திறனை உருவாக்குவதற்கும் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'தொல்குடி திட்டம்' உருவாக்கப்பட்டிருக்கிறது. நிறைவாக ஒன்றைக் கூறி, விடைபெற விரும்புகின்றேன். விடியல் திட்டத்தில் மகளிர் நகரப் பேருந்துகளில் மட்டும்தான் மகளிர் செல்வது வழக்கம். ஆனால், 30 கிலோ மீட்டர் வரைக்கும்தான் நகரப் பேருந்துகள் செல்வதற்கு வரையறை உள்ளது. 30 கிலோ மீட்டருக்கு அந்தப் பக்கம் route bus செல்கிறது. அதில் மகளிர் கட்டணம் இல்லாமல் பயணம் மேற்கொள்ள முடியாது. இதுகுறித்து முதலமைச்சர் அவர்களிடமும், எங்களுடைய பொறுப்பு அமைச்சர் அவர்களிடமும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடமும் பேசினேன். அப்போது, மலைப் பகுதியில் நீங்கள் ஒரு பணிமனையை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கோரினேன். அங்கிருந்து 30 கிலோ மீட்டர் தூரம் அங்குள்ள மக்கள், மகளிர், கீழே இருக்கிற மக்கள் போகிறார்கள். மலைப் பகுதியிலே இருக்கிற மகளிர், மக்கள் கட்டணம் இல்லாமல் பயணம் மேற்கொள்ள முடியாததால் போகாமல் இருக்கிறார்கள்.

ஆகவே, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை, கல்வராயன் மலை, கொல்லிமலை, பச்சைமலை, சின்ன கல்வராயன் மலை போன்ற மலைப் பகுதிகளில் அங்குள்ள மலைவாழ் மக்களுக்காக ஒரு பணிமனையை உருவாக்கிவிட்டால், அங்கிருந்து அந்த மக்கள் கட்டணமில்லாமல் பயணம் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று கேட்டபோது, 1½ கோடி ரூபாய் பணிமனை அமைப்பதற்கு தேவைப்படும் என்று சொன்னார்கள். 1½ கோடி ரூபாயில் எப்படி கட்டுவது என்று கேட்டபோது, நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில், மலைவாழ் பழங்குடியின மக்களும், மலைப்பிரதேசங்களிலும் இனி கட்டணம் இல்லாமல் விடியல் பயணத்தை மேற்கொள்ளலாம் என்ற உன்னதமான திட்டத்தினை உருவாக்கித் தந்திருக்கிற நிகழ்வை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன்.

மலைவாழ் பிரதேச மக்கள் 100 பேருக்கு மேல் தொலைபேசி மூலம் அழைத்து எனக்கு மட்டும் நன்றி சொல்லியிருக்கின்ற முக்கியமான நிகழ்வை நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். வாழை விவசாயம் செய்யும்போது, புயல், காற்று, பெரும் மழை போன்றவை ஏற்படுவதாலும் பாதிப்பு ஏற்படும்; காய்ந்துவிட்டாலும் அவற்றை ஒன்றும் செய்ய இயலாது. ஒரு விவசாயி ஆயிரம் மரங்கள் வைத்து விவசாயம் செய்யும்போது, அவை விழுந்துவிட்டன என்றால், அவற்றை ஒன்றிரண்டு நாட்களுக்குமேல் வைத்திருக்க முடியாது. அதில் பிஞ்சும் இருக்கும், பழுத்ததும் இருக்கும். அவர்கள் insurance போட்டிருந்தால்தான் இழப்பீட்டுத் தொகை கிடைக்கும். Insurance போடாத ஏழை விவசாயிகள் என்ன செய்வார்கள்! ஆனால், இப்போது இந்த நிதிநிலை அறிக்கையில் மூன்று முட்டுக்களை கனிகளை வைத்து அதை தாங்கிப் பிடித்து அந்த வாழைத் தாரை அது விளைந்த பிறகு எடுப்பதற்கு, நிதிநிலை அறிக்கையில் நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். அதுமட்டு மல்லாமல், இதில் கருப்புப் புள்ளி விழாமல், இது சேதமடையாமல் அணில் போன்ற சில பிராணிகள் அதைக் கொத்திவிடாமல் இருப்பதற்கும் உரப்பையை கொடுப்பதற்கும், அந்த தாரிலே உரப்பையை மாற்றுவதற்கும் நிதியை ஒதுக்கியிருக்கிற நிகழ்வு இந்த வேளாண்மைத் துறையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்து, மஞ்சள் குறித்து பேச வேண்டும். எங்கள் பகுதியில் மஞ்சள் என்றால் ஈரோட்டிற்குத் தான் செல்ல வேண்டும். ஈரோட்டிற்கு சென்று மஞ்சளை மெருகூட்டி, அதனை godownல் அடுக்கி வைத்து, நல்ல விலை வரும்போது தான் விவசாயிகள் மஞ்சளை விற்பனை செய்வார்கள். ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மெருகூட்டுவதற்கு 5 கருவிகளும், வேக வைப்பதற்கு 8 கருவிகளும், அதேபோல கள்ளக்குறிச்சி, தருமபுரி, ஈரோடு ஆகிய 3 ஊர்களிலும் இந்த 5 கருவிகளும், 8 கருவிகளும் விவசாயப் பெருமக்களுக்கு கொடுத்திருக்கின்ற இந்த நல்ல நிகழ்வினை பாராட்டுகிறேன். கரும்புக்கு விலை ஏற்றப்பட்டுள்ளது. அதேபோல நெல்லுக்கு சன்னரக நெல்லுக்கு 2,010 ரூபாயாக இருந்ததை 2,400 ஆக உயர்த்தித்தர வேண்டுமென்று கோரிக்கை வைத்து அடுத்த முறை சட்டமன்றம் கூடுகின்றபோது 40ம் நமதே! நாடும் நமதே! நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அவர் பேரவையில் பேசினார்.





நேற்று முன்தினம் (22.02.2024) தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் ஊரகப்பகுதிகளில் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு 6–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை உலகத்தரம் வாய்ந்த கல்வியை வழங்கிட பள்ளிக் கல்வித்துறைக்கும், சிவ் நாடார் அறக்கட்டளைக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் பள்ளிக்கல்வித் துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு மாதிரி பள்ளிகள் உறுப்பினர் ஆர்,சுதன் ராமசாமி, சிவ்நாடார் அறக்கட்டளை நிர்வாகிகள் சுந்தர், பேனர்ஜி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டச் செயலாளரும்,ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் கள்ளக்குறிச்சி மாவட்டம் தியாகதுருகம் பேரூராட்சிக்குட்பட்ட 2 வது வார்டு கஸ்தூரிபாய் நகரில் ரூ.75,00,000/ மதிப்பீட்டில் 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, சுற்றுச்சுவர் மற்றும் பைப்லைன் அமைப்பதற்கான பணிகளை துவக்கி வைத்தார்,இந்த நிகழ்வில் தியாகதுருகம் பேரூர் கழக செயலாளர் தே.மலையரசன், தியாகதுருகம் ஒன்றியக் குழு பெருந்தலைவர் ந.தாமோதரன், பேரூராட்சி மன்ற தலைவர் மா.வீராசாமி, துணைத் தலைவர் மு.சங்கர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



ரூ.366 கோடியில் கொள்ளிடம் காவேரி கூட்டுக் குடிநீர் திட்டம்

# அமைச்சர் கே.என்.நேருவுக்கு நன்றி!

## ஆ.ராசா எம்.பி. தெரிவித்தார்! குன்னம் ராஜேந்திரன் - எம். பிரபாகரன் பங்கேற்பு!

பெரம்பலூர்,பிப்.24- பெரம்பலூர் மாவட்டத்திற்கு ரூ.366 கோடி மதிப்பீட்டில் கொள்ளிடம் காவேரி கூட்டுக்குடிநீர் திட்டம் அறிவித்த நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேருவை சென்னையில் உள்ள முகாம் அலுவலகத்தில் சந்தித்து, ஆ.இராசா.எம்பி., நன்றி தெரிவித்தார்!

பெரம்பலூர் மாவட்டத்தில் மக்களின் வாழ்வாதாரமான குடிநீர் தட்டுப்பாடு நீண்ட காலமாக இருந்து வந்தது.

கடந்த 19962001 ஆம் ஆண்டுகளில், பெரம்பலூர் பாராளுமன்ற தொகுதியில் இருந்து வெற்றி பெற்று மத்திய அமைச்சராக இருந்த ஆ.இராசா அவர்களின் பரிந்துரையை ஏற்று, பெரம்பலூர் மாவட்டத்திற்கு கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தில்(19962001) அப்போதைய முதலமைச்சர் கலைஞர் அவர்களால் காவேரிகொள்ளிடம் கூட்டுக்குடிநீர் திட்டம் ரூ.120 கோடியில் அறிவிக்கப்பட்டு, கொள்ளிடத்தில் இருந்து தண்டாரக்கோறை எனுமிடத்தில் நீரேற்று நிலையம் அமைக்கப்பட்டு பூவாளூர், தச்சங்குறிச்சி, சிறுகனூர் வழியாக பெரம்பலூர் மாவட்டத்திற்கு குடிநீர் கொண்டு வந்து பெரம்பலூர் மாவட்ட மக்களின் நீண்ட வருட கோரிக்கை நிறை வேற்றப்பட்டது. தற்போதைய கணக்கெடுப்பின்படி மக்கள்தொகையின் வளர்ச்சி அதிகமடைந்துள்ளதால், குடிநீர் தேவையும் அதிகரித்துள்ளது. அதனைக் கருத்தில் கொண்டும், மேனாள் மத்திய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி.யின் கோரிக்கையை வைத்ததை முன்னிட்டும்,

பெரம்பலூர் நகராட்சிக்கும் , எறையூர் மற்றும் பாடலூரில் அமைந்துள்ள சிப்காட்களுக்கும் சேர்த்து ரூ.366 கோடியில் கொள்ளிடம் காவேரி கூட்டுக் குடிநீர் திட்டம் அறிவித்த நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் ,கே.என்.நேரு அவர்களை, சென்னையில் உள்ள முகாம் அலுவலகத்தில், மேனாள் மத்திய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி., சந்தித்து நன்றி தெரிவித்தார். உடன் பெரம்பலூர் மாவட்ட கழகச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர் உள்ளனர்.

# கடலூரில் நாளை மாரத்தான் போட்டி!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் துவக்கி வைக்கிறார்!

கடலூர், பிப். 24- முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ரெட் பிட்னஸ் அகாடமி சார்பில், மு.க.ஸ்டாலின் மாரத்தான் போட்டி நாளை (25.02.2024- ஞாயிற்றுக்கிழமை), காலை 6.30 மணி அளவில், கடலூரில் நடைப்பெற உள்ளது.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமை தாங்கி கொடியசைத்து மாரத்தான் போட்டியை துவக்கி வைக்க உள்ளார்.

கழகத் தேர்தல் பணிக் குழு செயலாளர் இள.புகழேந்தி, கடலூர் கிழக்கு மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன்,

கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ. ஐய்யப்பன், மாநகராட்சி மேயர் சுந்தரி ராஜா, கடலூர் மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் வே.விக்ரமன், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் பா. கலைக்கோவன் உள்ளிட்ட பலர் கலந்துக் கொள்கின்றனர். டவுன் ஹாலில் இருந்து மாரத்தான் போட்டி துவங்கி நடைப்பெற உள்ளது.

அரக்கோணம் முன்னாள் நகர மன்ற உறுப்பினர்

# க.மீனாட்சி சுந்தரம் - மீ.சசி இல்லத் திருமண விழா!

## அமைச்சர் ஆர்.காந்தி - டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் - ஆர்.வினோத் காந்தி வாழ்த்துரை!

அரக்கோணம், பிப். 24- அரக்கோணம் நகர மன்ற முன்னாள் உறுப்பினர் க.மீனாட்சி சுந்தரம் - மீ.சசி ஆகியோரின் புதல்வி எம்.ஜெயஸ்ரீக்கும் கொளம்பாக்கம் எஸ்.தணிகைவேல் - டி.லஷ்மிபிரபா ஆகியோரின் புதல்வர் டி.சுரேஷ் குமாருக்கும் திருமணம் 26.2.2024 - திங்கள் காலை 6 மணியளவில் திருத்தணி - அரக்கோணம் சாலையில் (பாரத் பெட்ரோலியம் எதிரில்) அமைந்துள்ள பி.எஸ்.ஆர்.திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., ஆர்.வினோத் காந்தி, ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மேலும், வி.எல்.ஜோதி, மு.கண்ணையன், எம். பூபதி, எஸ்.மணி, வெ.விக்ரமன், சி.என்.அன்பு, மு. நாகன், வி.வினோத்குமார், லட்சுமிபாரி, கலாவதி அன்பு லாரன்ஸ், ஆர். தமிழ்ச் செல்வன், பெ.வடிவேலு, ஆ.சவுந்தர், கே.பசுபதி, எஸ்.நாகராஜன், என். ராஜ்குமார், துரை சீனிவாசன், அ.அன்புலாரன்ஸ், கோ.வ.தமிழ்வாணன், ப.நந்தா தேவி, எஸ்.ரமேஷ் பாபு, என்.அரிகிருஷ்ணன், வி.எஸ்.ஆர்.ரவிச்சந்திரன், ஆர்.கே.லிங்கம், ஏ.தமிழ் அன்சாரி, வி.பாலன், எஸ். பிரசாத், எம்.கே.சிவா, கே.ராஜா, எஸ்.சரவணகுமார், டி.அன்பு, கே.சிட்டிபாபு, வி.என்.உலகநாதன், மு.பாலன், எஸ்.பி. மாலின், எம்.கருணாகரன், ஜி.ஜெனிஸ்குமார், பி.ஆர். விமல், பி.மூர்த்தி, ஆர். குணா, டி.தினேஷ், ஜி. கிருஷ்ணமூர்த்தி, பி.பிரவீன் குமார், தமீன், எஸ்.பிரகாஷ், தமிழரசன், வின்சென்ட், பி. கன்னியப்பன், எம்.லோகநாதன், கே.நாகராஜ், எம்.நடராஜன், எம்.ராஜன், டிம்போ, இ.பாலன், எஸ்.செல்வம் உள்ளிட்ட பலர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

க.மீனாட்சி சுந்தரம் நன்றி கூறுகிறார்.

இந்தியாவிலேயே கடந்த 3 ஆண்டுகளில்

# 12 இலட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கித் தந்தது தமிழ்நாடுதான்!

## கழக அரசின் சாதனை! பேரவையில் - அமைச்சர் சி.வெ.கணேசன் ஆதாரங்களுடன் விளக்கம்!

**சென்னை, பிப். 24 - சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், பேரவை விவாதத்தின் போது குறுக்கிட்டு விளக்கமளித்த தொழிலாளர் நலத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன், "இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத சாதனையாக, தமிழ்நாட்டில் தளபதி தலைமையில் ஆட்சி அமைந்த கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 12 இலட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**



சட்டப்பேரவையில் நேற்று, இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ஆர்.பி. உதயகுமார்:** இந்த அரசினுடைய சாதனையாக இளைஞர்களுக்கு அரசு வேலை வழங்கியதைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதிலே ஒரு சின்ன clarification. உங்களுடைய தேர்தல் அறிக்கையில் மூன்று இலட்சம் பேர்களுக்கு அரசு வேலை வாய்ப்பு தருவதாக, ஆண்டுக்கு 10 இலட்சம் பேர்களுக்கு, 5 ஆண்டுகளுக்கு 50 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதாகச் சொல்லியருக்கிறீர்கள். நீங்கள் கொடுத்திருப்பது 28,000 பேர்தான். மற்றது எல்லாம் கருணை அடிப்படையில், TNPSC, சீருடைப் பணியாளர்கள் எல்லாம் சேர்த்து. ஆகவே, அந்தத் தகவல் என்பது சரியான தகவலாக இல்லை. ஆகவே, ஆண்டுக்கு 10 இலட்சம் என்ற வீதம் 50 இலட்சம் பேர்களுக்கும், மூன்றரை இலட்சம் பேர்களுக்கு அரசுப் பணி வழங்குவதற்கு அரசு முன்வருமா?

**அமைச்சர் சி.வெ. கணேசன்:** தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்ற நோக்கத்தோடு அரசு தரப்பிலே, TNPSC- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாகப் பணிக்குச் செல்வோர் ஒருபுறம் இருந்தாலும், தனியார் தொழில் நிறுவனங்களில் இதுவரையிலே, வருகிற 24 ஆம் தேதியன்று 2 இலட்சம் இளைஞர்களுக்கு பணி நியமன ஆணையை வழங்குகின்ற அளவிற்கு இந்த அரசு படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தந்திருக்கிறது. அதேபோல, வருங்கால வைப்பு நிதி நிறுவனம் குறித்து ஒன்றிய அரசாங்கம் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அது என்ன வென்றால், இந்தியாவிலே, இதுவரையில் தமிழ்நாட்டில் 12 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்த மாநிலம் தமிழ்நாடு என்ற செய்தியை வெளியிட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. தலைமையில்

# அமைப்புசாரா ஓட்டுநர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

## மாநிலச் செயலாளர் டி.செங்குட்டுவன் அறிவிப்பு!

தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர் அணியின் மாநில, மாவட்ட, மாநகர தலைவர்கள் மற்றும் அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாளை (25.02.2024) காலை 10.00 மணியளவில் சென்னை தேனாம்பேட்டை இளைஞரணி அலுவலகமான அன்பகத்தில், மாநிலத் தலைவர் டி.எம். கதிர்ஆனந்த் எம்.பி. தலைமையிலும், மாநில துணை செயலாளர்கள் டாக்டர் வை..முத்துராஜா எம்.எல்.ஏ. கே.தினகரன், ஏ.ஆர்.டி.உதயசூரியன், டாக்டர் ஆர்.சி.எம்.விஷ்ணுபிரபு, எம்.சிவராஜ், ஏ.கே..பூபதி, எஸ்.செல்லதுரை, எஸ். ராம்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அது சமயம் மாநில நிர்வாகிகள், மாவட்ட, மாநகர தலைவர்கள், அமைப்பாளர்கள்மட்டும்அவசியம்தவறாமல்கலந்துகொண்டுசிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: மார்ச் 1கழகத்தலைவர், முதல்வர் அவர்களின் பிறந்த நாள் விழா, 2024 நாடாளுமன்ற தேர்தல் குறித்து

**டி.செங்குட்டுவன்,**
செயலாளர்,
தி.மு.க அமைப்பு சாரா ஓட்டுநர் அணி.

மதுரையில் 'எய்ம்ஸ்' அறிவிக்கப்பட்டது போல அல்லாமல்

# கோவையில் நூலகம் கட்டி முடிக்கப்பட்டு ஜனவரி 2026 இல் திறக்கப்படும்!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, பிப். 24–**

**கோவையில் நூலகம் அமைக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதை பா.ஜ.க. உறுப்பினர் திருமதி. வானதி சீனிவாசன், அந்த நூலகம் எங்கே அமைக்கப்படும் எவ்வளவு நிதி ஒதுக்கப்படும் எப்போது ஆரம்பிப்பீங்க, எப்போது அந்தப் பணி முடிவடையும், என்று கேள்வி எழுப்பி இருந்தார்.**

**இதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று பதிலளிக்கையில் மதுரையில் எய்ம்ஸ் அறிவிக்கப்பட்டதைப் போல் இல்லாமல் குறிப்பிட்டக் காலத்திற்குள் கோவை நூலகம் கட்டி முடிக்கப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அந்த நூலகம் திறந்து வைக்கப்படும் என்று தமது பதிலில் உறுதியுடன் தெரிவித்தார்.**

முதல்வர் அளித்த பதிலுரை வருமாறு:

பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் சட்டமன்றப் பேரவையில் நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றி இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கு எல்லாம் மிகத் தெளிவாக, விளக்கமாக, விரிவாக நம்முடைய அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் பதிலளித்திருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரிய வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) அமைந்திருக்கிற காரணத்தால் என்னுடைய வாழ்த்துகளையும் மனதார நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நேற்றையதினம் விவாதத்தின்போது சில குறிப்பிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்த வினாவிற்கு விளக்கம் சொல்லியிருக்கிறார். ஆனால், அதேநேரத்தில், பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் வைத்த கோரிக்கைக்கு ஏன் பதில் சொல்லாமல் விட்டுவிட்டார் என்று எனக்குப் புரியவில்லை. அவர் ஒரு கோரிக்கையை வைத்திருந்தார். கோவையில் நூலகம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பிற்கு நன்றி தெரிவித்துவிட்டு, அது எங்கே அமையவிருக்கிறது, எவ்வளவு நிதி ஒதுக்கப் போகிறீர்கள், எப்போது ஆரம்பிக்கப் போகிறீர்கள், எப்போது அந்தப் பணிகள் முடிவடையும் என்று கேள்விகளைக் கேட்டிருந்தார்கள். அது நிச்சயமாக உடனடியாக செயலாக்கத்திற்கு வரும். ஏனென்றால், இந்த ஆட்சி சொன்னதைச் செய்யும், சொன்னதைத் தாண்டியும் செய்யும், செய்வதைத்தான் சொல்லும். (மேசையைத் தட்டும் ஒலி)

மதுரையில் எவ்வாறு உலகத்தரம் வாய்ந்த கலைஞர் நூலகம் குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருக்கிறதோ, சென்னையில் கலைஞர் சிறப்பு பல்நோக்கு மருத்துவமனை, மதுரை அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டுக்காக ஏறுதழுவுதல் அரங்கம் அமையப் பெற்றிருக்கின்றனவோ, இன்னும் சில தினங்களில் நம்முடைய கலைஞர் நினைவிடம் அமையவிருக்கிறதோ, அதேபோல் அதுவும் சொன்னபடி நிச்சயமாக இந்த ஆட்சியில் நடக்கும்.

ஆனால், திருமதி வானதி சீனிவாசன் அவர்களுக்கு நான் ஒன்றை மட்டும் உறுதியாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நிச்சயமாக மதுரையில் AIIMS அறிவிக்கப்பட்டதைப்போல் இல்லாமல், (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டி முடிக்கப்படும். அதுவும் குறிப்பிட்ட நாளையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அது திறக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) திறப்பு விழா நிகழ்ச்சிக்கு உங்களுக்கு முறையாக அழைப்பு வரும். நீங்களும் வந்து விழாவில் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிலளித்தார்

# அரியலூர் மாவட்டம் மீன்சுருட்டியில் "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" பொதுக்கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் சிறப்புரை!

அரியலூர்,பிப், 24- அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் ஒன்றியம், மீன்சுருட்டியில் "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" பாசிசம் வீழட்டும்! இந்தியா வெல்லட்டும்! என்ற தலைப்பில், சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதி பரப்புரை பொதுக்கூட்டம், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு பெரம்பலூர் மாவட்ட கழக செயலாளர் குன்னம் இராஜேந்திரன் முன்னிலை வகித்தார். நடைபெற்ற கூட்டத்தில்

அரியலூர் மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமச்சர் சா.சி. சிவசங்கர், கழக மாநில வர்த்தகர் அணி துணைத் தலைவர், அரசு தலைமை கொறடா கோவி.செழியன்,

கழக சட்டதிட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க. சொ.க.கண்ணன், , மாநில இளைஞரணி துணை செயலாளர் ஆனந்தகுமார் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:

நம்முடைய தலைவர் தளபதி அவர்கள் தமிழ்நாடு முதல்வராக பொறுப்பேற்ற பிறகு முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் பல்வேறு திட்டங்களை தீட்டி வருகிறார்கள். நம் மாநிலத்தில் கொண்டு வரப்பட்ட திட்டம் தான் பக்கத்து மாநிலத்தில் நம்மைப் பார்த்து செயல்படுத்தும் திட்டங்களாக இருக்கிறது. அரசு பேருந்தில் பயணிக்கின்ற இலவச மகளிர் பயண திட்டமாக இருந்தாலும் கர்நாடகத்திலே பயன்படுத்தியிருக்கிறார்கள் தெலுங்கானாவில் அமல் படுத்தி இருக்கிறார்கள் மகளிர் உரிமை தொகையை திட்டத்தை கிண்டல் செய்த பாஜக அவர்கள் ஆளுகின்ற மத்திய பிரதேசத்தில் அமல்படுத்தி இருக்கிறார்கள்.

இப்படி இந்தியாவில் இருக்கின்ற மற்ற மாநிலத்தைச் சேர்ந்த முதலமைச்சர்கள் நம்முடைய முதலமைச்சர் என்ன திட்டத்தை தீட்டுகிறார் என்பதை பார்த்து தான் அவர்கள் செயல்படுத்துகிறார்கள். அந்தத் திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போடுகின்ற விதமாகத்தான் பிஜேபி ஆட்சி செயல்படுகிறது. இந்திய மக்களின் வயிற்றில் அடிக்கும் அரசாக மோடி அரசு திகழ்கிறது. இன்னொரு புறத்தில் நமது மொழியை அழிக்க நினைக்கிறார்கள். கலாச்சாரத்தை அழிக்க நினைக்கிறார்கள், நம்முடைய அடையாளத்தை அழிக்க நினைக்கிறார்கள்.

இந்து என்ற ஒற்றைச் சொல்லை சொல்லிக் கொண்டு, ராமரை திணிக்க முயல்கிறார்கள். நாம் நமது கிராமத்தில் நமக்கு என்று குடி தெய்வம் இருக்கிறது குலதெய்வம் இருக்கிறது. சிலர் சிவன், முருகன், வினாயகர், அம்மன் என பல தெய்வங்களை வணங்கி வருகிறார்கள் அதனை ஒழித்துவிட்டு இந்தியா முழுவதும் ஒரே கடவுள் ஒரு மொழி தான் இருக்க வேண்டும் என நம் மீது திணித்து கொண்டு இருக்கிறார்கள். அயோத்தியில் ஒரு கோயிலை கட்டி திறந்து விட்டு அங்கு அசைவம் சாப்பிடக்கூடாது என்று அறிவித்திருக்கிறார்கள், நாளை இந்தியா முழுவதும் இதே நிலைதான் கொண்டு வருவார்கள். நமது உணவை நாம் தீர்மானத்தை விட அவர்கள் தீர்மானிக்கும் நிலைக்கு போவார்கள். அதனால் தான் இந்த பாசிச சக்திகளை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று நமது கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் ஒரு போரை அறிவிப்பது போல அறிவித்திருக்கிறார்.

அந்தப் போரை வெல்ல வேண்டிய கடமை நமக்கு தான் இருக்கிறது இந்த போர்வென்றால் தான் தமிழ்நாடு இருக்கும் தமிழ்நாடு சட்டமன்றம் இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்க முடியும். தமிழ் இருக்க முடியும் நமது குரல் ஒலிக்க முடியும். மாநில நிர்வாகத்தை கலைப்பது மாத்திரமல்ல இந்தியாவினுடைய நாடாளுமன்றத்தை மறு சீரமைத்து 543 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதை 800 நாடாளுமன்ற உறுப்பினராக அதிகரித்து வட இந்தியாவில் இருக்கின்ற தொகுதிகளை அதிகரிப்பதற்கான திட்டத்தை செயல்படுத்துவதற்காக துடித்துக் கொண்டு இருக்கிறார்கள். அந்த நிலை வந்தால் தென்னிந்தியாவில் இருக்கின்ற நான்கு மாநிலம் மகாராஷ்டிரா இவற்றையெல்லாம் ஒதுக்கி தள்ளிவிட்டு அவர்களுடைய பெல்ட்டாக இருக்கின்ற உத்தரபிரதேசம் மத்திய பிரதேசம் பீகார் போன்ற மாநிலங்களில் மீண்டும் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்ற கனவினை கண்டு கொண்டிருக்கிறார்கள். அவர்கள் காணுகின்ற கனவிற்கு சாவு மணி அடிக்கத்தான் விவசாயிகள் கொதித்தெழுந்து டெல்லியை நோக்கி திரண்டு கொண்டு இருக்கிறார்கள். கடந்த தேர்தலிலேயே 33 சதவீதம் வாக்குகளைப் பெற்று தான் பாஜக ஆட்சிக்கு வந்தது. மீதி இருக்கின்ற வாக்குகள் பாஜகவுக்கு எதிராக இருக்கின்ற வாக்குகள் சிதறி போனது, அப்படி சிதறி போன வாக்குகளை ஒருங்கிணைப்பதற்கு தான் இந்தியா கூட்டணியை அமைத்து நமது கழகத் தலைவர் தளபதி அவர்கள் எதிர் கட்சிகளை எல்லாம் ஒருங்கிணைத்து இருக்கிறார்கள் எனவே மோடி வீழ்வது உறுதி அதனை உறுதி செய்ய வேண்டுமென்றால் 40 தொகுதியை நமது கழகத் தலைவர் தலைமையில் வெல்ல வேண்டும், அப்படி வெல்வதற்கு வந்திருக்கின்ற ஒவ்வொருவரும் இங்கு ஒலிக்கின்ற கருத்துக்களை உங்களை சார்ந்தவர்கள் இடத்திலே ஒலிக்க வேண்டும். உரிமைகளை மீட்க ஸ்டாலின் என்ற குரல் என்றால் அந்தக் குரல் வந்திருக்கின்ற ஒவ்வொருவருடையது தான். ஒவ்வொருத்தரும் தளபதியுடைய தல கர்த்தராக மாறி இந்த தேர்தலை எதிர்கொள்ள வேண்டும் இவ்வாறு போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் ப. துரைசாமி, மாநில வர்த்தகர் அணி துணை தலைவர் பெரியசாமி,

தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன் சி.சந்திர சேகர், லதாபாலு, ஒன்றிய கழை செயலாளர்கள் தனசேகர், இரா.கென்னடி, பூ. செல்வராஜ், கோ. அறிவழகன், வா.சௌந்தரராஜன், இரா.மணிமாறன், அசோக சக்ரவர்த்தி, ரெங்க.முருகன், மா.அன்பழகன், ஆர். கலியபெருமாள், வி.எழில் மாறன், நகர கழக செயலாளர்கள் வெ.கொ.கருணாநிதி, இரா.முருகேசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ. இளையராஜா, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயி கதிரவன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி மற்றும்

அரியலூர், பெரம்பலூர், கடலூர் மாவட்டங்களை சேர்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய,பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

முன்னதாக ஜெயங்கொண்டம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் இரா. மணிமாறன் வரவேற்புரையாற்றினார்.

நிறைவாக மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் பெரியசாமி நன்றி தெரிவித்தார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம்

# மரக்காணம் மேற்கு, மரக்காணம் மத்திய ஒன்றிய பிரிப்பு அறிக்கையில் திருத்தம்

## தலைமைக் கழகம் அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெறவும் 'முரசொலி'யில் வெளியிடப்பட்ட ஒன்றிய பிரிப்பு அறிக்கையில்;

விழுப்புரம் வடக்கு மாவட்டம், மரக்காணம் மேற்கு ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த கீழ்சிவிரி, டி.நல்லாளம் ஆகிய 2 ஊராட்சிகள் மரக்காணம் மத்திய ஒன்றியக் கழகத்தின் கீழும்;

மரக்காணம் மத்திய ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த ஆடவல்லிகூத்தான் ஊராட்சி மரக்காணம் கிழக்கு ஒன்றியக் கழகத்தின் கீழும் இயங்கும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 22.2.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

தமிழ்நாட்டிலிருந்து சபரிமலை கோவிலுக்குச் செல்லும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர நடவடிக்கை!

# 772 திருக்கோயில்களில் ஆண்டுதோறும் ரூ.112 கோடி செலவில் அன்னதானம் வழங்கல்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

**சென்னை, பிப். 24 -**

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது 2 உறுப்பினர்களுக்கு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பதிலளிக்கையில் தமிழ்நாட்டி லிருந்து சபரி மலைக்குச் செல்லும் ஐயப்ப பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது என்றும் 9 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம், 763 திருக்கோயில்களில் ஒரு வேலை அன்னதானத் திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு 92 ஆயிரம் நபர்கள் உணவருந்தி வருகிறார்கள். இத்திட்டத்திற்காக ரூ.112 கோடி செலவு செய்யப்பட்டு வருகிறது என்றும் குறிப்பிட்டார்.**

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு :-

**ச.சிவகுமார்:** மயிலம்தொகுதி, வல்லம் ஒன்றியம், கொங்கரப்பட்டு கிராமம், வேங்கட வரதராஜப் பெருமாள் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு :** உறுப்பினர் அவர்கள் கோரிய வேங்கட வரதராஜ பெருமாள் திருக்கோயிலுக்கு 30 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. பிரிவு 49(i)ன் கீழ் ஆண்டிற்கு ரூ.10,000க்கும் குறைவாக வருமானம் வருகின்ற திருக்கோயில் என்பதால் அந்த கிராம மக்கள் ஒன்றுசேர்ந்து திருப்பணியை தொடங்கி இருக்கின்றார்கள். போதிய நிதி திரட்ட முடியாத காரணத்தினால் திருப்பணி முடிவடையாமல் இருப்பதை இந்து சமய அறநிலையத்துறை அறிந்து அத்திருக்கோயிலுக்கு மாவட்ட மற்றும் மாநில அளவிலான வல்லுநர் குழுக்களின் அனுமதியை பெற்று போதிய நிதி ஆதாரத்தை ஏற்படுத்தித் தந்து இந்தாண்டு இறுதிக்குள் அத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ச.சிவகுமார்:** பழமை வாய்ந்த திருவேங்கட வரதராஜ பெருமாள் கோயிலுக்கு திருப்பணிகள் செய்திட மாநில வல்லுநர் குழு ஒப்புதல் பெறுவதற்கான நடவடிக்கையில் உள்ளது என்பதற்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மாநிலக் குழு ஒப்புதல் பெற்றவுடன் இந்த ஆண்டே திருப்பணி துவக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இதே போன்று வல்லம் ஒன்றியம், குறிஞ்சிப்பை கிராமத்தில் ஆயிரம் ஆண்டு பழமை வாய்ந்த ஸ்ரீ பண்டாபிராமன் திருக்கோயிலும், மேல்சேவூர் கிராமத்தில் உள்ள சிவன் கோயிலிலும், தலைவனூர் கிராமத்தில் உள்ள சிவன் கோயிலும், பேர்ணாம்பூர் கிராமத்தில் உள்ள கலிவரத பெருமாள் கோயிலும், கலையூர் கிராமத்தில் உள்ள பெருமாள் கோவிலும், முறையூர் கிராமத்தில் உள்ள பெருமாள் கோயிலும் பல வருடங்களாக பழுதடைந்து உள்ளதால் புனரமைத்து குடமுழுக்கு நடத்தப்படுமா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** உறுப்பினர் அவர்கள் கோரிய சிவன் கோயில் ஒன்றும் மற்றொரு பெருமாள் கோயிலும் அதேபோல் களையூர் சார்ந்த மற்றொரு பெருமாள் கோயிலும் துறையின் கட்டுப்பாட்டில் இல்லை. இருப்பினும் துறை சார்பிலே உபயதாரர்களை அணுகி அந்த திருக்கோயில்களுக்கு நிதி ஏற்பாடு செய்து திருக்கோயிலுக்கு திருப்பணி கள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும். அதேபோல் அவர் கூறிய மற்ற 5 திருக்கோ யில்களில் கைலாசநாதர் திருக்கோயில், ரிஷிபுரீஸ்வரர் திருக்கோயில், எமதண்டீஸ்வரர் திருக்கோயில் ஆகிய 3 திரு க்கோயில்களில் திருப்பணி களுக்கான ஆரம்பகட்ட பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதர 2 திருக்கோயில்களின் திருப்பணிக்கு மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்தாண்டு இறுதிக்குள் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ச.சிவகுமார்:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. கடந்த கார்த்திகை மாதம் முதல் தை மாதம் வரை சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு சென்ற பக்தர்கள் கடும் கூட்ட நெரிசலிலும், கழிப்பிட வசதி, குடிநீர், சாப்பாடு இல்லாமல் கடுமையான நெருக்கடிக்கு உள்ளாகினர் என்பதனை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் அரசு கவனத்திற்கும் கொண்டு வந்து இனி வரும் காலங்களில் சபரி மலை செல்லும் தமிழ்நாடு ஐயப்ப பக்தர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.



**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** இந்த செய்தி பத்திரிகையில் வரப்பெற்றவுடன் முதலமைச்சர் அவர்கள் தனி கவனம் செலுத்தி நம் தலைமைச் செயலாளரை கேரளா மாநிலத்தின் தலைமைச் செயலாளருடன் தொடர்புகொண்டு வருகின்ற பக்தர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தி தரவும், ஏதாவது இன்னலுக்கு ஆட்படுகின்ற பக்தர்களுக்கு உடனடியாக உதவிகள் செய்வதற்காக சபரிமலையில் கன்னியாகுமரி தேவஸ்தான கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில் கண்காணிப்பாளர் ஒருவரையும், மணியக்காரர் ஒருவரையும் பணியமர்த்தி பக்தர்களுக்கு தேவைப்படுகின்ற உதவிகளை செய்தார்கள். அதோடு மட்டுமல்லாமல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஏற்பாட்டில் 10 லட்சம் பிஸ்கட் பாக்கெட்டுகள் சபரிமலைக்கு அனுப்பப்பட்டு, அண்டை மாநிலங்களுக்கு செல்லுகின்ற தமிழ்நாட்டு பக்தர்களுக்கு எந்த சிரமம் ஏற்படக்கூடாது என்பதற்காக இந்த உதவிகளை மேற்கொண்டோம். வரும் ஆண்டில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கூடுதலாக என்னவெல்லாம் சிறப்பாக செய்திடலாம் என்பதனை துறை சார்ந்து ஆய்வு செய்திட முதலமைச்சர் அவர்கள் உத்தர விட்டிருக்கின்றார். ஆகவே அடுத்த ஆண்டு தமிழ்நாட்டு பக்தர்களுக்கு எவ்வித இன்னலும் ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வோம். உறுப்பினர் அவர்களின் தொகுதியில் திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு 11 திருக்கோயில்களுக்கு ரூ.1.70 கோடி செலவில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. 10 திருக்கோயில்களில் ரூ.1.68 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு இறுதிக்குள் 10 திருக்கோயில்களின் திருப்பணிகள் முடிவுற்று குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**காரம்பாக்கம் க.கணபதி :** மதுரவாயில் சட்டமன்றத் தொகுதி மதுரவாயில் மார்க்கசகாய ஈஸ்வரர் திருக்கோயில் 800 ஆண்டுகள் பழமையான திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் அருணகிரிநாதருக்கு வழிகாட்டிய திருக்கோயில் என்று வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. இத்த திருக்கோயிலுக்கு கடந்த 24.06.2022 அன்று மிகச் சிறப்பான முறையிலே குடமுழுக்கு நடைபெற்றது. திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் பயன்பெற அன்னதானத் திட்டம் கொண்டுவர ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

### வள்ளியூர் முருகன் திருக்கோயில்

பேரவைத் தலைவர்: என் தொகுதியைச் சேர்ந்த வள்ளியூர் முருகன் திருக்கோயிலிலும், பழங்குடி இராமலிங்க சுவாமி திருக்கோயிலிலும், பழவூர் நரம்புநாதர் ஆலயத்திலும், ராதாபுரம் நித்திய கல்யாணி அம்மன் திருக்கோயிலிலும் அன்னதானம் வழங்க கருணை காட்டுங்கள்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** பேரவை தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கோரிய கேள்விக்கு பதில் சொல்வதற்கு முன்பாக பேரவை தலைவர் வைத்த கோரிக்கைக்கு பதில் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் நீங்கள் கூறிய அந்த 4 திருக்கோயில்களில் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் 2 திருக்கோயில்களுக்கு ரூ.70 லட்சம் மதிப்பீட்டில் அன்னதான மண்டபம் கட்டுவதற்கு ஆரம்பக்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்த 2 திருக்கோயில்களில் 50 நபர்களுக்கு ஒரு வேளை அன்னதானத் திட்டம் வழங்கப்படுகிறது. நிதி ஆதாரம் இல்லாவிட்டாலும், முதலமைச்சர் அவர்களின் உத்தரவை பெற்று நீங்கள் கூறிய மற்ற 2 திருக்கோயில்களும் இந்த ஆண்டு அன்னதானத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும்.

உறுப்பினர் கோரிய மார்கசகாய ஈஸ்வரர் திருக்கோயிலுக்கு 13 ஆண்டுகளுக்கு முன்பு திருப்பணி தொடங்கப்பட்டு நிலுவையிலிருந்த திருப்ப ணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான் கடந்த ஆண்டு குடமுழுக்கு நடந்து முடிந்திருக்கிறது.

இந்து சமய அறநிலையத் துறை வரலாற்றில் தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களில் அன்னதானம் வழங்குவதில் ஒரு பெரிய புரட்சியை ஏற்படுத்திய அரசு திராவிட மாடல் அரசு என்பதற்கு ஒரே ஒரு மேற்கோளை காட்டுகிறேன். 9 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் மற்றும் 763 திருக்கோயில்களில் ஒரு வேளை அன்னதானத் திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு 92 ஆயிரம் நபர்கள் உணவருந்தி வருகிறார்கள். இத்திட்டத்திற்காக ஆண்டிற்கு ரூ.112 கோடி செலவு செய்து வருகின்றோம். அன்னதானம் மற்றும் பிரசாதத்தின் தரத்தினை உறுதி செய்து ஒன்றிய அரசின் உணவு தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் BHOG என்ற சான்றிதழ் வழங்கப்படுகிறது. அதில் தமிழ்நாடுதான் 523 சான்றிதழ்களை பெற்று இந்தியாவிலேயே அதிகமான சான்றிதழ்கள் பெற்ற மாநிலமாக திகழ்கிறது. வாழும் வள்ளலார் முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில் எங்கும் மகிழ்ச்சி, எதிலும் மகிழ்ச்சி என்பது போல இறை பசியோடு வருகின்ற இறையன்பர்களை வயிற்றுப் பசி இல்லாமல் அனுப்புகின்ற ஆட்சியாக இந்த ஆட்சி திகழ்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

### மருதமலை திருக்கோயில்

**அம்மன் கே.அர்ஜூனன்:** மருதமலை திருக்கோயிலுக்கு சாமி தரிசனம் செய்ய தமிழகம் மட்டுமல்லாமல் வெளி மாநில பக்தர்கள் அதிகமாக வருவதால் அங்கு நான்கு வழிச்சாலை அமைக்கப்படுமா, அப்படி அமைத்தால் எப்போது அமைத்து தருவீர்கள் என கேட்டு அமருகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** பேரவை தலைவர் அவர்களே, மருதமலை முருகன் திருக்கோயிலை பொறுத்த அளவில் கடந்த ஆண்டு நிலுவையில் இருந்த மின்தூக்கி திருப்பணிக்கு இந்தாண்டு முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வனத்துறைக்கு சொந்தமான இடத்தில் சாலை அமைப்பதில் இருக்கின்ற பல்வேறு சிக்கல்களை பொதுப்பணித்துறை அமைச்சர், அந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சராக இருக்கின்ற வீட்டு வசதித்துறை அமைச்சர் ஆகியோர் மூன்று மாதங்களுக்கு முன்பு களஆய்வு செய்து இருக்கின்றார்கள். அதன் தொடர்ச்சியாக நானும் வனத்துறையுடன் பேசி இருக்கின்றேன். ஏற்கனவே இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் ரூ.3.57 கோடி மதிப்பீட்டில் பழுதடைந்த மலைப் பாதை சாலை சீரமைக்கப்பட்டு வருகிறது. உறுப்பினரின் கோரிக்கை பரிசீலனையில் இருக்கின்றது. வெகு விரைவில் அதை செயல்பாட்டிற்கு கொண்டுவருவதற்குண்டான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### குளித்தலை ரத்தினகிரீஸ்வரர் திருக்கோயில்

**ஆர்.மாணிக்கம்:** குளித்தலை தொகுதி அய்யர்மலையில் ரத்தினகிரீஸ்வரர் திருக்கோயில் சுமார் 1500 அடி உயரம் கொண்ட சிவன் கோயிலாகும். அந்த திருக்கோயிலுக்கு ரோப் கார் வசதி வேண்டுமென்ற பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் கோரிக்கைக்கு 2010 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் ஆட்சியிலே அதற்கான அரசாணை வெளியிடப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டது. அதன்பிறகு வந்த ஆட்சியாளர்கள் அந்த திட்டத்தை கிடப்பில் போட்டதால், திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர் தளபதி அவர்களின் அமைச்சரவையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சராக அவர் பொறுப்பேற்ற பிறகு அய்யர்மலை உச்சிக்கே வந்து ஆய்வு செய்து பணிகளை விரைவுப்படுத்தி முடித்திட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள். அந்த பணி எப்போது முடியும், ரோப் கார் எப்போது வரும் என மக்களெல்லாம் ஆவலோடு இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமருகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** இது குற்றச்சாட்டாக அல்லாமல் அவையின் கவனத்திற்கு கொண்டு வருவதற்காக கூறுகிறேன். 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் தேதி காலையில் அந்த கோயிலின் ரோப் கார் மக்கள் பயன்பாட்டிற்கு அன்றைய அரசால் அர்ப்பணிக்கப்பட்டதாக கல்வெட்டு இருக்கின்றது. 50 சதவீத பணிகள் கூட முடிவுறாத நிலையில் தவறான தகவல்கள் அடிப்படையில் அந்த ரோப் காரை செயல்பாட்டை கொண்டு வருவதாக அறிவித்து விட்டார்கள். பின்னர் நம்முடைய உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று 1,017 படிகள் கொண்ட அய்யர்மலைக்கு நானும், அலுவலர்களும் நேரடியாக சென்று ஆய்வு செய்தோம். அங்கு பக்தர்கள் காத்திருப்பு கூடம் இல்லை, கழிப்பிட வசதி இல்லை, குடிநீர் வசதி இல்லை, வருகின்ற வாகனங்களை நிறுத்துவதற்கு உண்டான வாகன நிறுத்துமிடமும் இல்லை. முதலமைச்சர் அவர்களின் உத்தரவைபெற்று தற்போது ரூ.2.95 கோடி மதிப்பீட்டில் இவற்றையெல்லாம் அமைப்பதற்கு பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அடுத்தமாத இறுதிக்குள் ரோப் கார் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு உண்டான அடிப்படை தேவைகளை நிறைவேற்றுகின்ற பணிகளை மேற்கொண்டு இருக்கின்றோம். அதேபோல சோளிங்கர் திருக்கோயில் ரோப் காரும் அதே நாளில் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது என எந்த பணிகளும் முடிக்காமல் இருந்ததை அந்த மாவட்டத்தின் அமைச்சர் திரு. காந்தி அவர்கள் தனிப்பட்ட முறையில் நடவடிக்கையை மேற்கொண்டு உபயதாரர் நிதியாக ரூ.12 கோடியை திரட்டி தற்போது அனைத்து பணிகளையும் நிறைவு செய்து இந்த மாத இறுதிக்குள் அதனையும் மக்கள் பயன்பாட்டிற்கு முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் ஒப்படைக்க இருக்கின்றோம் என்பதை உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---

அன்பும் திராவிடமும் நமது முதல்வரின் இரு கண்கள்!

# அரசுப் பள்ளிகளில் ‘யோகா வகுப்புகள்’ நடத்த வேண்டும்!

## சட்டப் பேரவையில் - ஆர்க்காடு கழக உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் பேச்சு!

சென்னை, பிப். 24 -

சட்டப் பேரவையில் நேற்று முன்தினம், (பிப்.21) நிதி நிலை மற்றும் வேளாண் நிதி நிலை அறிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய ஆர்க்காடு தொகுதி கழக உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் “அரசுப் பள்ளிகளில் யோகா வகுப்புகள் நடத்த வேண்டும்” என்று குறிப்பிட்டார்.

சட்டப் பேரவையில் - கழக உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் பேசியதாவது:-

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு - தழல்
வீரத்திற் குஞ்சென்று மூப்பென்று முண்டோ?
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்

- மகாகவி பாரதியார் சொல்லியிருக்கிறார்.

எண்ணத்தில் தோன்றும் எரிதழலின் சிறுபொறியை, மனத்தில் உறைந்திருக்கும் சிறுமை எனும் மரப்பொந்தில் இட்டேன். அந்தச் சிறு பொறியின் சக்தியால் மனத்தின் சிறுமைகள் மடிந்தது மட்டுமல்லாமல், அச்சம், மடமை, துன்பம், பொய் முதலிய தீமைகள் அனைத்தையும் கொண்ட மனமென்னும் காடே ஒட்டுமொத்தமாக எரிந்தது; சிறுமைகள் சிதைந்தழிந்த நெஞ்சம் நற்குணங்கள் பொலிந்து தெளிவுற்றது.

இந்த விந்தை நிகழ்வு உணர்த்தும் உண்மை யாதெனில், வாழ்வில் அல்லவை தேய்ந்து அறம் பெருக வைக்க, பலனளிக்காத ஆயிரம் செயல்கள் செய்வதைக் காட்டிலும், செம்மைப்பட்ட சக்தி வாய்ந்த ஒரே ஒரு எண்ணம் மட்டும் போதும்; தீமைகள் எல்லாம் மாய்ந்து துயர் தீரும். எழுச்சிமிக்க எண்ணத்தின் சக்தியில் சிறியது பெரியது என்ற பாகுபாடில்லை; ஒரே ஒரு எண்ணத்தையோ, சொல்லையோ, செயலையோ கொண்டு பெரியதொரு மாற்றத்தைத் தோற்றுவிக்கும் ஆற்றல் மனிதனுக்கு உண்டு. அத்தகைய மாமனிதர் சமூகநீதிக் காவலர் நம் முதலமைச்சர் அவர்களை வணங்குகின்றேன்.

“எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது என்ற குறளுக்கேற்ப, வாழ்ந்து கொண்டிருக்கும் நம்முடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகின்றேன். தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம் என்று கொக்களித்தார் மகாகவி பாரதியார்.

‘படமாடக் கோயில் பகவதற்கு ஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவதற் அது ஆமே’

அதாவது படமாடக் கோயில் நடமாடும் கோயில், நடமாடும் கோயிலாவது உயிர்கள். குறிப்பாக மனிதர்கள் கடவுளை படமாக எழுதி வைத்து வழிப்பட்டமையால் படமாடக் கோயில் என்றார்.

தன்னையொத்த மனிதன் பசித்திருக்கையில் கடவுட்கு ஒரு பொருளைக் காணிக்கையாக அளித்தால் அது நடமாடும் கோயிலான மனிதனுக்குச் சென்று பயன்தராது. ஆனால் நடமாடக் கோயிலான பசித்த மனிதனுக்கு ஒன்று ஈந்தால் அது இறைவனுக்கு சென்று சேரும் என்று கூறியுள்ளார் திருமூலர் பெருந்தகை. இதை மெய்ப்பிக்கும் வகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க திருப்புமுனை திட்டமான முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட, ‘காலை உணவுத் திட்டத்திற்கு’ 2023-2024 ஆம் ஆண்டு 2,50,000 மாணவர்களுக்கு பயன்பெறும் வகையில் வரவு - செலவுத் திட்டத்தில் 600 கோடி ரூபாய் ஒதுக்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தமிழ்நாடு மக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



‘அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு’

என்றார் திருவள்ளுவர்.

அதனைச் செயல்படுத்திடும் வகையில் முதல மைச்சரின் தாயுமானவர் திட்டம். இரண்டு ஆண்டுகளில் மிகவும் வறிய நிலையில் உள்ள ஆதரவற்றோர், தனித்து வாழும் முதியோர், ஒற்றை பெற்றோர் குடும்பங்கள், பெற்றோரை இழந்து குழந்தைகள், மனநலம் குன்றிய வர்கள் போன்ற சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழும் சுமார் 5 இலட்சம் குடும்பங்களுக்கு அரசின் உதவிகள் அனைத்தை யும் ஒருங்கிணைத்து வழங்கி, விரைவில் அவர்களை வறுமையில் இருந்து மீட்டெடுத்திட அரசு உறுதியாக உள்ளது என்று முதல மைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

#### ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒருவரை நாட வேண்டியிருக்கிறது!

இந்தத் திட்டம் குறித்து பார்த்தால் என்றால், உண்மையிலேயே கிராமப்புறப் பகுதியில், பெற்றோரை இழந்த குழந்தைகள் அவர்கள் தாத்தா வீட்டில், பாட்டி வீட்டில் வாழ்ந்து வருகிறார்கள். ஒவ்வொரு விஷயத்திற்கும் அவர்கள் தேடி செல்லவேண்டியிருக்கிறது. அதுமாதிரி பார்த்தால், 800 குழந்தைகளை இனம் கண்டு, அவர்களுக்கு 800 ரூபாய் கொடுத்து, சிறுசேமிப்பு திட்டம் மாதிரி நான் ஆரம்பித்துக் கொடுத்தேன். அப்போது அவர்களுடைய மனநிலையை பார்த்தால், அவர்கள் ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒருவரை நாடியிருக்கவேண்டியிருக்கிறது. அத்தகைய குழந்தைகளின் மனதில் இந்தத் திட்டத்தினால் என்ன பாட்டு வரும் என்று பார்த்தார். இதை நான் பாடியாக வேண்டும்.

‘கடவுள் உள்ளமே ஓர் கருணை இல்லமே
தந்தை இல்லை, தாயும் இல்லை, தெய்வம் அன்றி யாரும் இல்லை
பாதம் செல்லும் பாதை காட்டிடும் தலைவா, என் தலைவா!
உண்ணும் உணவும் நீரும் தினம் தந்த தெய்வமே...
என்றும் உமக்கே நாம் நன்றி சொல்வோம்!

இது குழந்தைகளில் மனதில் வருகின்ற ஆழமான சிந்தனைக்குண்டான பாடல். நிஜமாகவே ஒரு திட்டத்தை உலகத்தில் யாரும், எந்த அரசாங்கமும் செய்திருக்கமுடியாத ஒரு திட்டம், இந்தத் திட்டம்.

அடுத்து, இளைஞர் நலன் மற்றும் விளை யாட்டுத் துறையில், கிரிக்கெட், கையுந்து பந்து, கால்பந்து, இறகுபந்து, சிலம்பம் என 33 விளையாட்டுகள் மற்றும் உடற்பயிற்சிக்கான கருவிகள் அடங்கிய, ‘கலைஞர் விளையாட்டு தொகுப்புகள்’ தமிழ்நாட்டில் அனைத்து ஊராட்சிகளிலும் வழங்கப்படும். இந்தத் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் நீங்கள் அனைத்து கிராமங்களுக்கும் சென்றால், அந்த ஊராட்சியில் இருக்கின்ற இளைஞர்கள் எங்களுக்கு கிரிக்கெட், வாலிபால், கால்பந்து வாங்கித் தாருங்கள் என்று கண்டிப்பாக கேட்பார்கள்.

இங்குள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்ற விதமாக, நம்முடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் அனைத்து கிராமங்களையும் அலசி, ஆராய்ந்து இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார். தமிழ்நாட்டு மக்களின் சார்பாக நாங்கள் மனதார வரவேற்கிறோம்.

அடுத்ததாக, மாற்றுத் திறனாளிகளைப் பொறுத்தவரையில், உடல் குறைபாடாக இருக்கலாம், ஆனால் உள்ள குறைபாடு இல்லை அறிவு குறைபாடு இல்லை என்பதை உணர்ந்து போற்ற வேண்டும். பாதிக்கப்பட்டவர்களைச் சிறப்பு கவனம் செலுத்தி கவனிக்கவேண்டும் என்ற தலைவர் கலைஞர் அவர்கள் கூறினார்.

#### இந்தியாவிலேயே ஒரு முன்னோடித் திட்டம்!

‘எதை இழந்தீர்கள் என்பதல்ல, என்ன மிச்சம் இருக்கிறது என்பதுதான் முக்கியம்’ என்றார் ஸ்டீபன் ஹாகிங். அதை மனதில் வைத்து அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியே தமிழ்நாடு அரசின் தாரக மந்திரம்.

மாற்றுத் திறன் படைத்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளின் para athletics திறமைகளை மேம்படுத்திட நாட்டிலேயே முதல் முறையாக மாற்றுத் திறனாளிகளுக்காக 6 விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதில் சிறப்பு இறகுபந்து, கைபந்து, வாள்வீச்சு உள்ளிட்ட ஆடுகளங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டம் இந்தியாவிலேயே ஒரு முன்னோடி திட்டமாக இருக்கும் கண்டிப்பாக என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, ‘கலைஞர் மகளிர் உரிமைத்தொகை’ திட்டம்,

‘உவந்தொருவன் வாழ்க்கை சரியாய் நடத்த
உதவுபவள் பெரும்பாலும் மனைவி ஆவாள்
அவளாலே மணவாளன் ஒழுங்கு பெற்றான்
அவளாளே மணவாளன் சக்தி பெற்றான்’

என்றார் பாரதிதான்.

இவ்வாறு பெண் சக்தியை பலர் உணர்ந்திருந்தாலும் நாட்டில் பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கிறதா என்றால், இல்லை. இதற்காக முதல் தீயை நூற்றாண்டுகளுக்கு முன்பே திராவிட இயக்கமும் அதன் ஒப்பற்ற தலைவர் பெரியார் அவர்களும், பேரறிஞர் அவர்கள், தலைவர் கலைஞர் பற்ற வைத்தார்கள். திராவிட இயக்கத்தின் நீட்சியாக இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும், திராவிட மாடல் ஆட்சியில் அத்தகைய தாய்மார்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக, திராவிட மாடல் அரசின் மகத்தான திட்டமான, ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கு’ 13,720 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, சுமார் 1.15 கோடி குடும்பங்களுக்கு வாழ்வு அளித்த முதலமைச்சர் அவர்களை தாயாக, தந்தையாக, அண்ணணாக எண்ணி தங்கள் நன்றியை மகிழ்ச்சியாக தெரிவித்துக்கொள்கின்றனர்.

#### தாய்மார்கள் சார்பாக நன்றிகள்!

விடியல் பயணம் பொறுத்தவரையில் 50 இலட்சம் பெண்கள் தினமும் பேருந்துகளில் சராசரி பயணம் செய்கிறார்கள். மொத்தம் 444 கோடி முறை பயணம். பயணம் செய்யும் பெண்களில் 40 சதவிகிதத்தில் இருந்து 60 சதவிகிதமாக உயர்வு பெற்றிருக்கிறது. இதற்காக 3,050 கோடி ரூபாய் மானியமாக வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு தாய்மார்கள் அனைவரின் சார்பாக நன்றியைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரின் ‘புதுமைப் பெண் திட்டம்’ தாலிக்கு தங்கம் கொடுக்கும் திட்டத்தை நிறுத்திவிட்டதாக சொல்கிறார்கள். இன்றைக்கு பார்த்தால், தாலிக்கு தங்கம் கொடுக்கும் திட்டத்தைவிட படித்து முடித்து வந்தபிறகுத்தான், அந்த தாலிக்கு தங்கத்தைக் கொடுப்பார்கள். ஆனால் இங்கே உள்ள சட்டமன்ற உறுப்பினர் மனதில் கையை வைத்து சொல்லுங்கள், எத்தனைபேர் உங்களிடம் college admissionக்கு எங்களால் பணம் கட்டமுடியவில்லை என்று பணம் கேட்டிருப்பார்கள். அதை உணர்ந்த எத்தனையோ தாய்மார்கள் பணம் கட்ட முடியாமல், அவர்களுடைய பிள்ளைகளை படிக்க வைக்க கஷ்டப்பட்டிருப்பார்கள்.

அதை உணர்ந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள், தாயுள்ளத்தோடு மாதாமாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தை, இந்திய அளவில் அறிவித்த ஒரே முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு கோரிக்கை,

“உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே. . .
உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுரவாயில்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே. . .”

இப்படி 12 ஆம் திருமுறையில் உடலைப் பற்றி நிறைய விஷயங்கள் சொல்லப்பட்டுள்ளது. ஆகவே, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், பள்ளிக் குழந்தைகளுக்கு யோகாவைச் சொல்லிக் கொடுக்கும்போது எந்த வித சமுதாய சாயலும், எந்தவித சித்தாந்த சாயலும் இல்லாமல் யோகாவைச் சொல்லித் தர வேண்டுமென்று பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் பணிவான வேண்டுகோளை வைக்கிறேன். இறுதியாக என்னுடைய உரையை முடிக்கும் விதமாக,

“அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே. . .” என்கிறது ஆன்மிகம்.

தாய்மார்களின் அன்பை வெளிப்படுத்தும் விதமாக மகளிர் உரிமைத்தொகை, முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் அன்பை வெளிப்படுத்தும் விதமாக முதியோர் உதவித்தொகையை உயர்த்தினார், மாணவ, மாணவிகளுக்கு அன்பை வெளிப்படுத்தும் விதமாக புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், ஆதரவற்றோர்களுக்கு அன்பை வெளிப்படுத்தும் விதமாகத் தாயுமானவர் திட்டம், தமிழ்நாடு மக்களின் சுகாதாரத்தைக் காத்திட மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் என்கிறது திராவிட மாடல் ஆட்சி. இதைத்தான் எங்கள் முதலமைச்சர் அவர்கள் திராவிட மாடல் ஆட்சி ஆன்மீகத்திற்கு எதிரான ஆட்சி அல்ல, ஆன்மீகத்தை அரசியலுக்கும், தங்களுடைய சுயநலனுக்கும் பயன்படுத்துவோருக்கு எதிரான ஆட்சி என்று கூறினார்.

“தேசியமும் தெய்வீகமும் நம் இரு கண்கள்” என்றார் அய்யா முத்துராமலிங்கத் தேவர். அன்பும், திராவிடமும் நமது முதலமைச்சர் அவர்களுக்கு இரு கண்கள் என்று கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

---

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு திருவிழா! பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் தலைமையில்

# 100 கவிஞர்கள் பங்கேற்கும் கலைஞர் நூற்றாண்டு விழாக் கவியரங்கம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைக்கிறார்!

சென்னை, பிப். 24 -

தமிழ்நாட்டில் தமிழுக்கு முதன்மை! என்பதை வலியுறுத்தி, 1991ஆம் ஆண்டு முதல் எங்கும் தமிழ்! எதிலும் தமிழ் வேண்டுமென கன்னியாகுமரி முதல் சென்னை வரையில் 50 நாட்கள் நடந்து வந்தோம்!

தொடர்ந்து வரும் இப்பயணத்தில் இவ்வாண்டும் தமிழுக்கு முதன்மை! என்ற குறிக்கோடு தமிழ், தமிழ்நாட்டு மக்கள் மற்றும் உலகளாவிய தமிழ் உணர்வாளர்களின் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையும், கன்னியாகுமரி - சென்னை 12.2.2024 முதல் 24.2.2024 ஆம் நாள் வரை பரப்புரை ஊர்திப்பயணம் செய்து வருகிறோம்.

இதன் நிறைவு நாளான 24.2.2024 ஆம் நாள் இப்பயணம் சென்னையில் நிறைவடைகிறது! பல்துறை வித்தகர், உவமை கூற முடியாத உன்னதக் கவிஞர் முத்தமிழறிஞர் கலைஞர் தம் அளப்பரிய சாதனைகளைப் பாராட்டும் முகத்தான் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைக்க பெருங்கவிக்கோ வா.மு.சே. தலைமையில் 100 கவிஞர்கள் பங்கேற்கும் கலைஞர் நூற்றாண்டு விழாக் கவியரங்கம் இன்று (24.2.2024-சனிக்கிழமை) காலை 9.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை

573, மேற்கு நிழற்சாலை, மகாகவி பாரதியார் நகர், வியாசர்பாடி, சென்னை -39 (அண்ணல் அம்பேத்கர் கல்லூரி அருகில் அமைந்துள்ள குரு சந்திரா திருமண மாளிகையில் நடைபெறுகிறது. இதில் கலைஞருக்கு வீரவணக்கம் - புகழ் அஞ்சலி பாடவுள்ளனர்.

தமிழ் மாமணி வா.மு. சே.திருவள்ளுவர் (இயக்குநர், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்) முனைவர் சோ. கருப்பசாமி, அருட்செல்வர் கூ.குருமூர்த்தி (குரு சந்திரா திருமண மாளிகை), மதுரகவி மறத்தமிழன், தலைவர் அண்ணாநகர் தமிழ்ப்பேரவை, செம்மொழிப் போராளி க.ச.கலையரசன், கவிச்சுடர் முனைவர் சிந்தைவாசன், கவிஞர் வீரமுத்து ஆகியோர் விழா ஏற்பாட்டுக் குழுவினராக செயல்படுகின்றனர்.

விழா நிறைவில் உலகத் தமிழ்ச் சங்க நிறுவனர் வி.ஜி.சந்தோசம், பேராசிரியர் மா.செல்வராசு, கந்தசாமி நாயுடு கல்லூரி முதல்வர் முனைவர் வா.மு.சே.முத்துராமலிங்க ஆண்டவர், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் சு.சுதர்சனம், பேராசிரியர் பொன்.செல்வகணபதி, தமிழ்ச்செம்மல் மேலை பழனியப்பனார் ஆகியோர் வாழ்த்துரையாற்றுகின்றனர்.

முனைவர் சோ.கருப்பசாமி நன்றி கூறுகிறார்.



சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், முத்தமிழ்ப் பேரவை திருவாடுதுறை டி.என்.ராஜரத்தினம் கலை அரங்கத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் நேற்று முன்தினம் (22.02.2024) தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் 2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் தமிழ்த்தாய் விருது, கம்பர் விருது, சொல்லின் செல்வர் விருது, உமறுப்புலவர் விருது ஆகிய விருதுகளை தமிழறிஞர்களுக்கு வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (22.02.2024) சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் அவர்களை தமிழ்நாடு ஹஜ் குழு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் ப.அப்துல் சமத் சந்தித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வின்போது தமிழ்நாடு ஹஜ் குழுவின் உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

# தென் மாநிலங்களுக்கு வருவாயில் நியாயமான பங்கைக் கொடுங்கள்!

## மாநிலங்களவையில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, பிப். 23-

மாநிலங்களவையில் கழக உறுப்பினர் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் பேசியதாவது:-

தென் மாநில தலைவர்கள், நிதி ஒதுக்கீடு செய்வதில் ஒன்றிய அரசு நியாயமாக நடந்துகொள்ளவில்லை என்று சில காலமாகவே குற்றம் சாட்டி வருகின்றனர். GST எனப்படும் சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகப் படுத்தப்பட்டு, 15 ஆம் நிதி ஆணைய அளவுகோல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, வரிப் பகிர்வுக் கொள்கை மாற்றம் கண்டது இந்த சிக்கலின் மூலக் காரணம். வரி விநியோகம் ஆராயப்படுவதற்கு முன், கொள்கை முடிவுகள் எவ்வாறு கூட்டாட்சிக் கட்டமைப்பில் மாநிலங்களின் நிதி சுயமேலாண்மையினை குலைத்து விட்டன என்பதை புரிந்து கொள்ள வேண்டியது மிக அவசியம்.

GSTக்கு முன்னர், மதிப்புக் கூட்டு வரி விகிதத்தை, தங்கள் நிதித் தேவைக்கு ஏற்ப முடிவு செய்வதில், மாநிலங்கள் தன்னாட்சி பெற்றிருந்தன. GST, மாநிலங்கள் ஒன்றிய அரசை சார்ந்து இருக்குமாறு, நிதிப் பகிர்வை எதிர்நோக்கி இருக்க தள்ளப்பட்டன. GST அறிமுகம் செய்யப்பட்டபோது, 14 விழுக்காடு வரி வருவாய் அதிகரிக்கும் என்றும், இடைக்காலத்தில் ஏற்படும் இழப்புகள் ஈடு செய்யப்படும் என்றும் ஒன்றிய அரசு உறுதியளித்தது. தென் மாநிலங்கள் அதிக வரி ஈட்டுவதால், உருவாக்கப்பட்ட GST இழப்பீடு செஸ் மூலம், அவை அதிக இழப்பீடு பெற்றிருக்க வேண்டும்.

ஆனால், சென்ற ஆண்டு மாநிலங்களுக்கு GST இழப்பீடு வழங்குவது நிறுத்தப்பட்டது. இழப்பீடு வழங்கிடும் நோக்கில் உருவாக்கப்பட்ட GST இழப்பீட்டு செஸ், இப்போதும் ஒன்றிய அரசால் வசூலிக்கப்பட்டு வரும் நிலையில், தமிழ்நாடு போன்ற மாநிலங்கள், ஆண்டொன்றும் 20,000 கோடிகளுக்கும் மேல் இழப்புகளை எதிர்கொண்டு வருகின்றன.

2011 ஆம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பை வரிப்பகிர்வைத் தீர்மானிக்க, 15 ஆம் நிதி ஆணையம் பயன்படுத்தி தீவிரமாகப் பங்கிட்டது, நிலையினை மிக மோசமாக்கியது. முந்தைய ஆணையம் பின்பற்றிய 1971, 2011 ஆகிய இரு ஆண்டுகளின் மக்கள்தொகை கணக்கெடுப்பையும் கருத்தில் கொண்ட முறை, நற்பலன் அளிக்கும் விளைவுகளை தரும் மக்கள்தொகை கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொண்ட மாநிலங்களுக்கு வெகுமானம் வழங்கிடும் வகையில் இருந்தது. இதிலிருந்து மாறுபட்டு 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் மட்டும் நிதி பகிர்வு அளிப்பது, உத்திர பிரதேசம் போன்ற அதிக மக்கள்தொகை கொண்ட மாநிலங்கள் கணிசமான அளவு அதிக பங்கினை பெற்று, குறைந்த மக்கள்தொகை கொண்ட தென் மாநிலங்கள் பாதிப்படைகின்றன. பகிர்ந்தளிக்கப்பட்ட வரியில் உத்திர பிரதேசம் 18 விழுக்காடு பெற்ற நிலையில், தமிழ்நாடு 4.2 %, கர்நாடகம் 3.65%, தெலுங்கானா 2.13%, ஆந்திர பிரதேசம் 4.11%, கேரளம் 1.96% மட்டுமே பெற்றன.



**மாநிலங்களுக்கு ஒதுக்கிய நிதியின் விபரங்கள் எங்கே?**

இந்த ஏற்றத்தாழ்வினை உரக்க விமர்சிக்கும், தமிழ்நாடு விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களுக்கு கேள்வி எழுப்பி, தென் மாநிலங்களுக்கு நியாயம் கேட்கிறார். இந்தக் கருத்துகளின் அடிப்படையிலேயே, நான் நாடாளுமன்றத்தில் ஒரு கேள்வி எழுப்பினேன். கடந்த ஐந்து ஆண்டுகளில் மாநிலங்கள் ஒன்றிய அரசிற்கு செலுத்திய GST, நேரடி, மறைமுக வரி, மத்திய வரியில் இருந்து ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கீடு செய்த நிதி ஆகியவற்றின் விரிவான தரவுகளைக் கேட்டேன்.

எனது கேள்வி எண் 362க்கு ஒன்றிய நிதி அமைச்சகம் பிப்ரவரி 6 ஆம் தேதி அளித்த பதிலில் வெளிப்பட்டது அதிர்ச்சி அளிக்கும் வகையில் இருந்தது. தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திர பிரதேசம், தெலுங்கானா ஆகிய மாநிலங்கள் சேர்ந்து கடந்த ஐந்து ஆண்டுகளில் GST, GST அல்லாத நேரடி வரி என்று 22.26 இலட்சம் கோடி ரூபாய்கள் பங்களித்துள்ளன, ஆனால் வெறும் 6.42 இலட்சம் கோடி ரூபாய்கள் மட்டுமே அவற்றின் பங்காக அளிக்கப்பட்டது. இதே காலத்தில், நேர் மாறாக உத்திரப் பிரதேசம் வெறும் 3.41 இலட்சம் கோடிகள் மட்டுமே பங்களித்து, ஆச்சரியமூட்டும் 6.91 இலட்சம் கோடிகள் ஒதுக்கீடு பெற்றது.

**மாநிலங்களுக்கு நிதி வழங்குவதில் ஏற்றத் தாழ்வு!**

ஏற்றத்தாழ்வுகள் பற்றிய கருத்துகளை களைந்திட ஒத்துக்கீட்டு வழிமுறையினை மாற்றுவது பற்றி அரசு பரிசீலனை செய்தததா என்ற எனது கேள்விக்கு பதில் இல்லை. இது, உறுப்பினர்களின் கேள்விகளுக்கு நேரடியாகவும் முழுமையாகவும் பதில் தரப்பட வேண்டும் எனும் மக்களவை விதிகளில் உள்ள நிபந்தனைக்கு முரணானதாகும்.

மத்திய வரியினை மாநிலங்களுக்கு வழங்கியதை ஆய்வு செய்தால், 2018-19, 2022-23 ஆகிய ஆண்டுகளுக்கிடையே GST, நேரடி வரி என செலுத்தப்பட்ட ஒவ்வொரு ரூபாய்க்கும் சராசரியாக தமிழ்நாடு வெறும் 26 காசுகள் மட்டுமே பெற்றிருக்கின்றது. கர்நாடகம் 26 காசுகள், கேரளம் 62 காசுகள், ஆந்திர பிரதேசம் 50 காசுகள், தெலுங்கானா 40 காசுகள் பெற்றிருக்கின்றன. உண்மையில் 2018-19, 2022-23 ஆகிய ஆண்டுகளுக்கிடையே தமிழ்நாட்டின் பங்கு 27 காசுகளில் இருந்து 24 காசுகளாக சரிந்துள்ளது. கர்நாடகம் 22 இலிருந்து 12, தெலுங்கானா 60 இலிருந்து 31, கேரளம் 81 இலிருந்து 50, ஆந்திர பிரதேசம் 66 இலிருந்து 49 காசுகள் என்று சரிந்துள்ளன.

மாறாக, உத்திரப் பிரதேசம் ஒன்றிய அரசிற்கு செலுத்திய ஒவ்வொரு ரூபாய்க்கும், 2.02 ரூபாய்கள் பெற்றுள்ளது. மத்தியப் பிரதேசம் 1.70 ரூபாய்களும், இராஜஸ்தான் 1.14 ரூபாய்களும் பெற்றுள்ளன. இது தென் மாநிலங்களுக்கும், சில வட மாநிலங்களுக்கும் இடையேயான ஏற்றத்தாழ்வினை தெளிவாக்குகிறது.

இந்தத் தென் மாநிலங்கள், தாங்கள் செலுத்திய தொகையில் ஏறக்குறைய 25% மட்டுமே திரும்பப் பெறும் நிலையில், உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்கள் 200% பெறுகின்றன. நான் உத்திர பிரதேசத்திற்கோ, வேறு வட மாநிலத்திற்கோ அதிக நிதி பங்கீடு அளிக்க வேண்டாம் என்று வலியுறுத்தவில்லை, எனது கவலை, தென் மாநிலங்களுக்கு மிகக் குறைந்த ஒதுக்கீடு செய்யப்படுவதே - அவர்கள் மீது ஏன் இந்த வஞ்சனை.

**தென் மாநிலங்கள் ஏன் தண்டிக்கப்படுகின்றன?**

மக்கள்தொகைப் பெருக்கத் தடுப்பு உள்ளிட்ட நல்ல கொள்கைகளை செயல்படுத்திய தென் மாநிலங்கள் ஏன் தண்டிக்கப் படுகின்றன? தென் மாநில தலைவர்கள் கோருவது போல, அவை நியாயமான பங்கினைப் பெறும் வகையில், நிதி ஒதுக்கீடு வழிமுறைகளை மறுபரிசீலனை செய்திட இதுவே சரியான நேரம்.

இவ்வாறு பி.வில்சன் எம்.பி. வலியுறுத்தினார்.


### தி.மு.க. மீனவர் அணி கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட

# துணை அமைப்பாளர் நியமனம்!

### மீனவர் அணிச் செயலாளர் டாக்டர்ஏ.ஜோசப் ஸ்டாலின்அறிவிப்பு!

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட சே.ஜார்ஜ் மறைவெய்திய காரணத்தால், **அ.மைக்கேல்ராஜ்.** (12/107/1, பரவர்தெரு, தெங்கம்புதூர், கன்னியாகுமரி மாவட்டம் - 629 602.) கன்னியாகுமரிகிழக்குமாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்டமாவட்ட மீனவர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”** சென்னை - 18 நாள்- 22.2.2024

**டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின்** செயலாளர் தி.மு.க. மீனவர் அணி


### கணினித் திரை உள்பட பல பெரிய திரைகளிலும் இணையதளத்திலும் காணலாம்!

# பள்ளி மாணவர்களுக்கென அரசு வெளியிட்ட ‘மணற்கேணி’ செயலி!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்!

சென்னை, பிப். 24 -

பள்ளி மாணவர்களுக்கென தமிழ்நாடு அரசு வெளியிட்ட மணற்கேணி செயலி புதிய வடிவமெடுத்திருக்கிறது. காணொலிப் பாடங்கள் அடங்கிய மணற்கேணியை இனி கணினித் திரை உட்பட பல பெரிய திரைகளிலும் இணையதளத்திலும் காணலாம். மணற்கேணி இணையதளத்தை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்.

கல்வியையும் கற்றல் முறையையும் ஜனநாயகப் படுத்தும் செயல்திட்டத்தை நமது பள்ளிக் கல்வித் துறை இலக்காகக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் பயிலும் அனைத்து மாணவர்களும் உயர்கல்விக்குச் செல்ல வேண்டும் என்கிற நோக்கத்துடனும், அரசுப் பள்ளி மாணவர்கள் உயர்கல்விக்குச் செல்வதை எளிதாக்கி சமூகத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வை சரிசெய்து சமூக நீதியை நிலைநாட்ட வேண்டும் என்கிற இலக்குடனும் தமிழ்நாடு அரசு 2023 ஆம் ஆண்டில் மணற்கேணி செயலியை அறிமுகப்படுத்தியது. பொருளாதாரத்தில் மேம்பட்டவர்களுக்கு மட்டுமே காணொலிப் பாடங்கள் கிட்டும் என்கிற நிலையைப் போக்கி அவற்றை அனைவருக்குமானதாக மாற்றுவதே அரசின் நோக்கம்.

மணற்கேணி ஆசிரியர்களுக்கு துணைக் கருவியாக பயன்படக்கூடிய ஒன்று. மணற்கேணி செயலியை தரவிறக்கம் செய்து அதில் உள்ள பாடங்களை மாணவர்களுக்கு வகுப்பறையில் உள்ள ஸ்மார்ட் போர்டில் திரையிட்டுக் காட்டி பாடங்களை நடத்தி வந்த ஆசிரியர்கள் இனி இணையதளம் வாயிலாக பாடங்களை நடத்தலாம். காட்சி ரீதியாக பாடங்கள் இருப்பதால் மாணவர்களுக்கு கற்றல் மேலும் எளிதாகும்.

மணற்கேணி செயலி உலகின் எந்த எந்த மூலையில் இருந்தும் ஆசிரியர்கள் மாணவர்கள் என எவர் வேண்டுமானாலும் பயன்படுத்தும் வகையில் ஓபன் சோர்ஸ் ஆக வெளியிடப்பட்டது. இப்போது இணையதளம் மூலமாகவும் பயன்படுத்தலாம் என்பதால் அலைபேசி வாயிலாகவும் கணினி வாயிலாகவும் இதனை பயன்படுத்தலாம். இதன் எளிமையான பயன்பாடு இதன் நோக்கத்தை பறைசாற்றும்.

இணையதளத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலும் என இரு மொழிகளிலும் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை மாநிலப் பாடத்திட்டத்தில் உள்ள பாடங்களை பல பாடப்பொருள்களாக, வகுப்புகள் தாண்டி வகைபிரித்து அதற்கேற்றபடி காணொலி வாயிலான விளக்கங்களை உருவாக்கி அளித்திருக்கிறது கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான மாநில கவுன்சில் (எஸ்.சி.இ.ஆர்.டி) நிறுவனம். இதன்கீழ் உருவாக்கப்பட்டுள்ள காணொலி கள் பாடப்பொருள்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

6, 7, 8, 11, 12 ஆகிய வகுப்புகளுக்கான அறிவியல், கணிதம், ஆங்கிலம், இயற்பியல், வேதியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களில் முதற்கட்டமாக பாடப்பொருள்கள் காணொலியாக தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு காணொலியின் முடிவிலும் வினாடி வினா வாயிலாக மாணவர்களின் புரிதல் திறனை சரி பார்க்கும் வசதியும் உள்ளது. இதன் மூலம் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் நடத்திய பாடம் முறையாகப் புரிந்திருக்கிறதா என சரி பார்த்துக்கொள்ள முடியும். முதல் கேள்வி எளிமையாகத் தொடங்கி படிப்படியாக விடையளித்துக் கொண்டே வருகையில் கொஞ்சம் கொஞ்சமாக கேள்விகளின் கடினத் தன்மை கூடிக் கொண்டே வரும். ஒவ்வொரு கேள்விக்குமான விரிவான விடைகளும் காணக் கிடைக்கும். ஏதேனும் ஓரிடத்தில் மாணவர்களுக்கு புரிந்து கொள்ள சிரமமாக உள்ளது எனில் ஆங்காங்கே அவர்களுக்கான உதவிக் குறிப்புகளும் உண்டு.

மணற்கேணியில் உள்ள காணொலிப் பாடங்கள் முறையான கற்றல் பயணத்திற்கு வழிவகுக்கின்றன. Laddered Learning approach எனப்படும் அணுகுமுறை இதில் கையாளப்பட்டுள்ளது. அதாவது எடுத்துக்காட்டாக, பன்னிரண்டாம் வகுப்பில் வரும் ஒரு பாடப்பொருளை முறையாகப் புரிந்து கொள்ள ஆறாம் வகுப்பில் அதற்கான அடிப்படைப் பாடம் இருக்கிறது என்றால் அதைப் படித்துப் புரிந்து கொண்டுவிட்டு பின் ஏழாம் வகுப்பில் அது குறித்துப் பாடமிருந்தால் அதையும் படித்துவிட்டு படிப்படியாக பன்னிரண்டாம் வகுப்புப் பாடப்பொருளுக்கு வரலாம். இதன்மூலம் பாடங்களை எளிதில் புரிந்துகொள்வதற்கும் எதையும் விட்டுவிடாமல் படிப்பதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.

திரையில் தொழில்நுட்பக் கலைச் சொற்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் காணலாம். கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்பாட்டை மணற்கேணி மிகவும் மகிழ்ச்சிகரமானதாக மாற்றும்.

இப்படிப் பயிற்றுவிப்பதன் வாயிலாக பொதுத் தேர்வில் கேட்கப்படும் எந்த வகையான கேள்விகளுக்கும் மாணவர்கள் எளிதாக விடையளிக்க முடியும். அது மட்டுமல்லாமல் ஜே.ஈ.ஈ போன்ற அகில இந்திய நுழைவுத் தேர்வுகளுக்கும் எளிதில் தயாராக முடியும். கடந்த பல ஆண்டுகளில் கேட்கப்பட்ட வினாக்கள் அடங்கிய வினா விடை வங்கி ஒன்றும் உண்டு. போட்டித் தேர்வுகள், நுழைவுத் தேர்வுகள், கல்வி உதவித்தொகைக்கான தேர்வுகள் என அனைத்தையும், மணற்கேணியை துணைக்கருவியாகக் கொண்டு பாடங்களை கற்பிப்பதன் மூலம் மாணவர்களை மிக எளிதாக ஆசிரியர்கள் வெற்றிகொள்ள வைக்க முடியும்.

இந்தக் காணொலிகள் 2டி மற்றும் 3டி அனிமேஷன் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன என்பதால் கற்போர் உடனடியாகப் புரிந்து கொள்வதற்கும் புரிந்து கொண்டவற்றை நீண்ட காலம் நினைவில் வைத்துக் கொள்வதற்கும் உகந்தவை.

சந்தேகங்களை உடனுக்குடன் தெளிவுபடுத்திக் கொள்ளும் விளக்கப்படங்கள் உள்ளதாலும் கற்றல் முற்றிலும் ஜனநாயகப்படுத்தப்பட்டுள்ளது எனலாம். அனைத்துக் காணொலிகளையும் கேள்விகளையும் தரவிறக்கம் செய்து கொள்ளலாம். அவற்றை தரவிறக்கம் செய்து கொள்ள கடவுச்சொல் எதுவும் தேவையில்லை. எந்தத் தடையும் இன்றி மிக எளிதாக அவற்றை தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மணற்கேணி இணையதள முகவரி :

https://manarkeni.tnschools.gov.in

அலைபேசியில் மணற்கேணி செயலியை ப்ளேஸ்டோரில் தேடவேண்டுமெனில் TNSED Manarkeni என்று உள்ளீடு செய்து தேடவேண்டும். இதுவரையிலும் 2,00,000 முறை இச்செயலி தரவிறக்கம் செய்யப்பட்டுள்ளது. இப்பொழுது உருவாக்கப்பட்ட மணற்கேணி இணையதளம் வாயிலாக இன்னும் அதிகமானோரை இக்காணொலிகள் சென்று சேரும்.

இவ்வாறு பள்ளிக் கல்வித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.


# கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அவசர செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அவசர செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் அ.யுவராஜ் தலைமையில் இன்று (24.02.2024 - சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் ஒசூர் மீரா மஹாலில் செயற்குழு கூட்டம் நடைபெற உள்ளது.

இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இதில் மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி செயலாளர்கள், நிர்வாகிகள், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய பேரூர், பகுதி அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை தலைவர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், வார்டு செயலாளர்கள் கிளை செயலாளர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:**


1. மார்ச் 1 கழக தலைவர் முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் குறித்து,
2. நாடாளுமன்ற தேர்தல் குறித்து,
3. கழக ஆக்கப்பணிகள்

**ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ**
செயலாளர்,
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க.



# மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் வரும் நாளை (25.2.2024 - ஞாயிறு) காலை 10.00 மணிக்கு மயிலாடுதுறையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் உள்ள கலைஞர் அரங்கில் மாவட்ட கழக தலைவர் கே.ஜி. சீனிவாசன் தலைமையில் நடைபெறுகிறது கூட்டத்தில் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழக செயலாளர் சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்

**பொருள்:**

1, மார்ச் 1ஆம் தேதி கழகத் தலைவர் திராவிட மாடல் அரசின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழா.
2. கழக உறுப்பினர் அடையாள அட்டை விநியோகம்
3..நாடாளுமன்ற தேர்தல் குறித்து,
4. ஓ.எம்.ஆர். படிவம் மாவட்டக் கழத்திடம் ஒப்படைத்தல் சம்பந்தமாக,
5. வாக்களர் பட்டியல் சரிபார்த்தல்
6.கழக ஆக்கப் பணிகள்

**நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ**
செயலாளர்,
மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க.


# கோவை இடையர்பாளையம் முரசொலி முகவர்!

## 50 வது ஆண்டு திருமண நாள் வாழ்த்து விழா!

கோவை, பிப். 24 -

கோவை மாவட்டம் கவுண்டம்பாளையம் பகுதி கழகம் முரசொலி முகவர் ச.சுப்பிரமணியன், சு.கமலா தம்பதியரின் 50 வது திருமண ஆண்டு விழா இன்று ( 24.02.2024 -சனிக்கிழமை) நடக்கிறது.

வங்கி ஊழியராக பணியாற்றிய ச.சுப்பிரமணியன் கழகத்தில் 1960 முதல் தன்னை இணைத்துக் கொண்டு பல்வேறு போராட்டத்தில் கலந்து கொண்டு கழகத்தில் பல பொறுப்புகளில் இருந்து உள்ளார்.

மேலும் 2008 முதல் 2014 வரை கவுண்டம்பாளையம் நகர கழகத்தில் 16 வது வார்டு வட்ட செயலாளராகவும்,2014 முதல் 2022வரை மாவட்டப் பிரதி நிதியாகவும், 2022 முதல் தற்போது வரை 16 வது வார்டு அவைத்தலைவராகவும், பத்து ஆண்டுகளாக தொடர்ந்து முரசொலி முகவராகவும் பணியாற்றி வருகிறார்.

இன்று (24.02.2024-சனிக்கிழமை) 50வது மணவிழா காணும் ச.சுப்பிரமணியன், கமலா தம்பதியரை முரசொலி சார்பாகவும் வாழ்த்துகிறோம். மேலும் பகுதி கழக நிர்வாகிகள், உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.


# தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ அறிவிப்பு!



இன்று (24.02.2024 - சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில், பட்டுக்கோட்டை, பேருந்து நிலையம் அருகில் உள்ள ஏ.ஏ.ஏ மஹாலில் தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் மாவட்டக் கழக அவைத்தலைவர் சுப.சேகர் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் எம்.பி, பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் நா.அசோக்குமார் , முன்னாள் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஏனாதி ப.பாலசுப்ரமணியன், தொகுதி பார்வையாளர்கள் சுப.சரவணன், நாகை ஜி.மனோகரன் கலந்துகொள்ள உள்ளனர்.

அதுசமயம் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர மற்றும் பேரூர்க் கழகச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்** : 1. மார்ச்1 கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள்.
2. தஞ்சைக்கு வருகை தரும் கழக தேர்தல் அறிக்கைக்குழு
3. 2024 நாடாளுமன்ற தேர்தல் பணிகள்.
4. கழக ஆக்கப் பணிகள்.

**கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ**
செயலாளர்,
தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு குடும்பத்தின் பாரத்தையும் சுமக்கும் குடும்பத் தலைவராக நமது முதல்வர் விளங்குகிறார்!

# சிறுபான்மையினரின் கோரிக்கைகளை - முதல்வர் ஒரே மாதத்தில் நிறைவேற்றியுள்ளார்!

## சட்டப்பேரவையில் - இனிகோ இருதயராஜ் பெருமித உரை!



சென்னை, பிப்.24-

சட்டப்பேரவையில் பிப்.21 அன்று, நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய கழக உறுப்பினர் இனிகோ இருதயராஜ், "சிறுபான்மையினரின் கோரிக்கைகளை நமது முதல்வர் அவர்கள், ஒரே மாதத்தில் நிறைவேற்றியுள்ளார்!", என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:

"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை

ஆராய்வான் செய்க வினை" என்கிறது திருக்குறள்.

அதாவது, வருமானம் வரக்கூடிய வழிகளை விரிவாக்கி, வளங்களை பெருக்கி, இடையூறுகளையும் ஆராய்ந்து நீக்கக் கூடிய வல்லவன்தான் செயலாற்றும் திறமையுடையவன் என்று இந்தத் திருக்குறளுக்கு விளக்கமளிக்கிறார் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். அத்திருக்குறள் வாக்கின்படி, செயல் வல்லவரான எங்கள் நல்லவராயர் சமூக நீதியை பின்பற்றி, ஜனநாயக வழியிலே ஆட்சியை நடத்தி, 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற கொள்கை கோட்பாட்டோடு தமிழகத்திலுள்ள கடைகோடி மக்களும் மகிழ்ந்து போற்றுகின்ற திராவிட மாடல் ஆட்சி நடத்தும் திராவிட இனத்தின் திசைகாட்டி தமிழக முதல்வர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கலைஞரின் மறுவுருவாய், தளபதியின் உழைப்பாய், இரவு, பகல் பாராமல் தமிழகத்தைச் சுற்றி வந்து, ஏழைத் தொண்டனுக்கும் பொற்கிழி அள்ளிக் கொடுத்து, புன்னகையுடன் அரவணைத்து வரும் அமைச்சர் உதயநிதி அவர்களையும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றத்திலும், அரசியலிலும் நீண்ட நெடிய அனுபவம் கொண்ட அவையின் முன்னவர் அவர்களையும், மாவட்ட அமைச்சர்கள் அண்ணன் நேரு, அருமைச் சகோதரர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், என் உயிரினில் கலந்த திருச்சி (கிழக்கு) தொகுதி மக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் சிரம் தாழ்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### பேரறிஞர் அண்ணாவின் வேண்டுகோள்!

இந்த பட்ஜெட் பற்றி சிந்திக்கின்றபோது, 1966 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்தில் பட்ஜெட் மீதான விவாதத்தில் ஆற்றிய உரைதான் நினைவுக்கு வருகிறது.

மக்கள் மேல் வரி விதிப்பதை விட்டுவிட்டு வருவாய் பெருக்குவதற்கான வழியை தேடுங்கள். குப்பனிடம் பறித்து குபேரனிடம் கொடுக்காதீர்கள் என்று அப்போதைய ஆளுங்கட்சிக்கு வேண்டுகோள் வைத்தார். ஏழைகளின் வரிப் பணத்தை பிடுங்கி குபேரர்களுக்கும் செல்வ கோமான்களுக்கும் தாரை வார்க்கும் அரசாக இல்லாமல் மாண்புமிகு முதல்வரின் அரசு பேரறிஞர் அண்ணாவினுடைய வேண்டுகோளை நிறைவேற்றும் அரசாக, மக்களின் வரிப் பணத்தை மக்களுக்காகவே செலவழிக்கிறது.

### எதிர்காலத்திற்கான பட்ஜெட்!

பத்தாவது நிதிக் குழுவிலே 6.64 சதவிகிதமாக இருந்த ஒன்றிய அரசினுடைய நிதி பகிர்வு, படிப்படியாகக் குறைந்து பதினைந்தாவது நிதிக் குழுவில் 4.08 ஆக குறைந்து தமிழகத்தையும் தமிழக மக்களையும் வஞ்சித்து வருகின்ற சூழ்நிலையில், வரவேண்டிய வரிகள் நிதியாக வராத காலக் கட்டத்தில் ஜி.எஸ்.டி 20,000 கோடி ரூபாய் இழப்பு என்ற சூழ்நிலையிலும், வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியாதாரம் இல்லாத காலக்கட்டத்திலும், மாற்றான் தாய் மனப்பான்மையோடு ஒன்றிய அரசு நடந்து கொள்கின்ற சூழ்நிலையில், எதற்கெடுத்தாலும் எதிர்போர்கூட, பூதக் கண்ணாடியை வைத்து எங்கு குறை கண்டுபிடிக்கலாம் என்று அதற்கும் வழி விடாமல், காகிதப் பூ மணக்காது, உப்பு சப்பு இல்லாதது, கானல் நீர் போன்றது என்று தமிழாசிரியர்களை வைத்து வார்த்தை ஜாலங்களை வழக்கம்போல் வார்த்தைகளைக்கூட எதிர்ப்போர் நாக்கில் சொல்வராமல், கும்மிடிப்பூண்டி முதல் கன்னியாகுமரி வரை இருக்கக்கூடிய கடைக்கோடி தமிழக மக்களுக்கு நலத் திட்டம் தந்த பட்ஜெட்டாகவும், ஏழையெளிய மக்களுக்கு வாழ்க்கையில் ஏற்றம் தருகின்ற பட்ஜெட்டாகவும், தமிழகத்தினுடைய நிதிப் பற்றாக்குறை 3.44 சதவிகிதத்திற்கு குறைந்துள்ள பட்ஜெட்டாகவும், காலத்தின் தேவையறிந்து கடமையாற்றுகின்ற மன்னனாக விளங்குகின்ற தமிழக முதல்வர் அவர்கள், உலக அரங்கில் மிக வேகமாக தொழில்நுட்ப அரங்கில் வளர்ந்து வருகின்ற *Artificial Intelligence, Virtual Reality, Machine Learning, Natural Language Processing, Large Language Model* போன்ற புதிய தொழில்நுட்பங்களுக்கு நிதியுதவி அளித்திட்ட பட்ஜெட்டாகவும் ஒட்டுமொத்தத்தில் 2024-2025 ஆம் ஆண்டு பட்ஜெட், எதிர்காலத்திற்கான பட்ஜெட். *Budget is for the future* என்று சொன்னால் அது மிகையாகாது. எனவேதான், உலக அரங்கில் நம்முடைய முதல்வர், அண்ணன் தளபதி அவர்களை பார்த்து, "*Stalin is a man with a plan; Stalin is a man with a vision*" என்று உலக அரங்கில் மிகப் பெரிய தொழில் நிறுவனங்களுடைய தலைவர்களெல்லாம் பாராட்டி மகிழ்கின்ற நிலைமை.

இந்த பட்ஜெட் எல்லோருக்கும் எல்லாம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் அமைந்த பட்ஜெட். ஒரு குடும்பம் என்று எடுத்துக் கொண்டால், நாம் இருவர், நமக்கு இருவர் என்ற கருத்தியல் அடிப்படையில் அப்பா, அம்மா, மகள், மகன். அப்பா, குடும்பத் தலைவர்; குடும்பத்தைக் காப்பாற்ற உழைக்கின்றவர். அம்மா, குடும்பத் தலைவி; அவருக்குத்தான் குடும்பத்தை நடத்துவதற்கான அத்தனை பொறுப்பும் இருக்கிறது. *Woman makes the backbone of the society*, நம் சமூகத்தினுடைய முதுகெலும்பு மகளிர்தான் என்பதை அறிந்த நம்முடைய முதல்வர் அவர்கள், மகளிர் நலனுக்கான திட்டங்களை தீட்டுகிறார். கலைஞர் மகளிர் உரிமைத் தொகை-மாதம் ஆயிரம் ரூபாய், வருடத்திற்கு பன்னிரெண்டாயிரம் ரூபாய். குடும்பத் தலைவி வேலை செய்வதற்கு விடியல் பயணம். குடும்ப பட்ஜெட்டில் பிரயாணச் செலவு மிச்சம். மகள் படிப்பதற்கு இலவச புத்தகம், கல்வி உபகரணம். பள்ளிக் காலங்களிலே காலைச் சிற்றுண்டி. கல்லூரிக் காலங்களில் புதுமைப் பெண் திட்டம்-மாதம் ஆயிரம் ரூபாய், வருடத்திற்கு பன்னிரெண்டாயிரம் ரூபாய்.

### தமிழ்ப்புதல்வன் திட்டம்!

மகன், பையன் பார்த்தான், அம்மாவிற்கு ஆயிரம் ரூபாய், அக்காவிற்கு ஆயிரம் ரூபாய், நம்முடைய *pocket* வெறும் *pocket* ஆக இருக்கிறதே, என்ன செய்வது, நமக்கும் செலவிருக்கிறதே என்று பார்த்தேன். இவ்வாறு ஏங்கிக்கொண்டிருந்த நிலையில், நீயும் *college*-க்கு செல்; நன்றாகப் படி; நான் இருக்கிறேன் என்று சொல்லி அவனுக்கும் ஆயிரம் ரூபாய், வருடத்திற்கு பன்னிரெண்டாயிரம் ரூபாய். தமிழ்ப் புதல்வன் என்கிற திட்டத்தைத் தீட்டியிருக்கிறார். படித்து முடித்தவுடன், *bank*-ல் வேலை செய்கிறாயா, *Railway*-ல் வேலை செய்கிறாயா - அதற்கு வா, 6 மாதம் *training*. தங்கும் இடம் இலவசம் என்ற அளவில் பயிற்சி வகுப்புகள். எல்லாம் படித்து முடித்தவுடன் வேலைக்கு செல்ல வேண்டுமே என்ற சூழ்நிலை.

மேலே இருப்பவர்கள் 10 வருடங்களுக்கு முன்னால் ஒரே கூச்சல், விளம்பரம். என்ன விளம்பரம் என்று பார்த்தால், வருடத்திற்கு 1 கோடி பேருக்கு வேலை, 2 கோடி பேருக்கு வேலை என்று சொன்னார்கள். ஐயா, வேலை தருகிறேன் என்று சொன்னீர்களே, எப்போது தருவீர்கள், எங்கே தருவீர்கள் என்று கேட்டவுடன், பக்கோடா விற்று பிழைத்துக்கொள் என்கிற பதில். நேற்று வந்த *Times of India* பத்திரிக்கையில்கூட உத்தரப் பிரதேசத்தில் போலீஸ் வேலைக்கு 65,000 காலியிடங்களுக்கு *apply* செய்திருப்பதாகச் சொன்னார்கள். எத்தனை பேர் வேலைக்கு *apply* செய்தார்கள் என்று தெரியுமா? 50 இலட்சம் பேர் விண்ணப்பித்திருக்கிறார்கள். அப்படி உத்தரப் பிரதேசத்தில் வேலையில்லாத சூழ்நிலை.

ஆனால், தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டரை வருடங்களுக்குள் 60,567 பேருக்கு அரசு வேலை. மீதமுள்ள இரண்டரை வருடங்களில் 50,000 பேருக்கு அரசுப் பணி தரப்படும் என்ற நம்பிக்கை. இது மட்டுமல்ல, தமிழ்நாட்டில் 2021-22 ஆம் நிதியாண்டில் *private sector*-ல். அதாவது அமைப்பு சார்ந்த துறைகளிலே 12,84,981 பேர் வேலை பெற்றுள்ளதாகவும், அதுவே 9.4 சதவிகிதம் அதிகரித்து 2022-23 ஆம் நிதியாண்டில் 14,05,171 பேர் வேலை பெற்றிருப்பதாகவும் ஒன்றிய அரசினுடைய *Employment Provident Fund Organisation (EPFO)* பதிவுகளில் *data* காண்பிக்கின்றது.

சரி, படித்து முடித்தவுடன் வேலை கிடைத்து விட்டது. வேறு மாவட்டத்தில் வேலை கிடைத்து விட்டது. எங்கே தங்குவது? ஆண் பிள்ளையென்றால், எங்கேயாவது *friends* உடன் தங்கிக்கொள்வான். ஆனால், பெண் பிள்ளை என்ற சூழ்நிலையில் 'தோழி' என்கிற திட்டத்தின் வாயிலாக மகளிருக்கான தங்கும் (மணியடிக்கப்பெற்றது) விடுதிகளை உருவாக்கி, ரூ.26 கோடி நிதி ஒதுக்கீடு தந்து.

### நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிய முதல்வர்!

சிறுபான்மையினரான எங்களுக்கு என்ன திட்டமென்று பார்த்தால், எங்களுடைய நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்தார்.

கிறிஸ்தவர்களுக்கான கல்லறை தோட்டங்கள், இஸ்லாமியர்களுக்கு கபர்ஸ்தான் இல்லாத மாவட்ட தலைநகரங்களிலே அரசு புறம்போக்கு நிலங்களை கண்டறிந்து, கல்லறை தோட்டங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கவும், அரசு புறம்போக்கு நிலங்கள் இல்லையென்றால் தனியாரிடமிருந்து நிலங்களை கையகப்படுத்தி கல்லறை தோட்டங்கள் அமைக்க ரூ.10 கோடி ஒதுக்கீடு தந்து, அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்' ஊரகப் பகுதிகளிலே இயங்கி வருகின்ற அரசு உதவிப் பெறும் பள்ளிகளுக்கும் விரிவுப்படுத்தப்படும் என்கின்ற அறிவிப்பின் வழியாக 2,50,000 மாணவர்கள் பயனடைகின்ற வகையிலும், 'புதுமைப் பெண் திட்டம்' வரும் கல்வியாண்டு முதல் அரசு உதவிப் பெறும் பள்ளிகளுக்கு விரிவுப்படுத்தப்படும் என்ற அறிவிப்பு,

என்னுடைய மூதாதையர் வாழ்ந்து ஊரான 150 வருடங்கள் பழமை வாய்ந்த, பிரெஞ்சுகாரர்களால் கட்டப்பட்ட சிவகங்கை மாவட்டம் இடைக்காட்டூர் தேவாலயத்தினை புனரமைப்பதற்காக நிதியுதவி மூன்று வருடத்திற்கு ஒரு முறை *Minority Status Certificate* பெற வேண்டுமென்ற உத்தரவினை ரத்து செய்து, *Permanent Minority Status Certificate web portal* மூலமாகவே பெற்றுக்கொள்ளலாம் என்ற அறிவிப்பின் வழியாக தமிழகத்திலுள்ள அனைத்து *minority educational institutions* பயன்பெறும் நிலையை உருவாக்கி தந்து, உபதேசியார் நல வாரியத்திலுள்ள வழிமுறைகளை திருத்தம் செய்து, பள்ளிக் கல்வித் துறையிலே ஆசிரியர்கள் நேரடி நியமனத்திற்கான உச்ச வரம்பை பொதுப் பிரிவினருக்கு 53 வயதாகவும், இதரப் பிரிவினருக்கு 58 வயதாகவும் மாற்றியமைத்து அரசாணை, சிறுபான்மையினர் கல்லூரி ஆசிரியர் பணியிடங்களை UGC அரசு விதிகளுக்குட்பட்டு, தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு மூன்று மாதத்திற்கு நியமன அங்கீகாரம் வழங்குவதற்கான சிறப்பு உத்தரவினையும் வழங்கி, சிறுபான்மை மக்களை காக்கின்ற தலைவராக, சிறுபான்மை மக்களுடைய ஒரே பாதுகாவலராக, எங்களுடைய கோரிக்கைகளுக்கு வடிவம் அமைத்துக் கொடுத்த தமிழகத்தின் முதல்வர் அவர்களுக்கு நெஞ்சத்தின் ஆழத்திலிருந்து வருகின்ற நன்றிகளை உரித்தாக்கி (மணியடிக்கப்பெற்றது) சிறுபான்மை மக்கள்மீது திடீர் பாசம் காட்டும் உள்நோக்கம் கொண்ட இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல.

தேர்தலுக்காக சிறுபான்மை மக்களை நாடும் இயக்கம் அல்ல; திராவிட முன்னேற்றக் கழகம். ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் சிறுபான்மையினர் உறவைப் போற்றுகின்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 9-1-2024 ஆம் ஆண்டு வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு தலைமைச் செயலகத்திலே எங்களுடைய கத்தோலிக்க, C.S.I., பெந்தகோஸ்தே மற்றும் பல்வேறு திருச்சபை தலைவர்களையும், பிஷப்மார்களையும், கன்னியாஸ்திரிகளையும் அழைத்து உங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டுமென்று கனிவோடு கேட்டு, எங்களோடு உணவருந்தி கேட்ட ஒரு மாதத்திற்குள்ளேயே எங்களுடைய கோரிக்கைகளை தாயுள்ளத்தோடு நிறைவேற்றித் தந்திருப்பவர் எங்களுடைய முதல்வர்; (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்கான முதல்வர்; மக்கள் முதல்வர்; அண்ணன் தளபதி அவர்களுக்கு நன்றி சொல்லி, மணிப்பூரைப் பாருங்கள், இன்றைக்கு கலவரம் (மணியடிக்கப்பெற்றது) கட்டுப்படுத்த முடியாத ஒன்றிய அரசு.

இவ்வாறு அவர் பேசினார்.



நாகை மாவட்டம் அக்கரைப்பேட்டை மீனவ கிராம பஞ்சாயத்தார்கள், பொதுமக்கள் சார்பில் பிளாஸ்டிக் இல்லாத கடலை காப்போம்! தூய்மையான கடற்கரை உருவாக்குவோம்! என வலியுறுத்தி விழிப்புணர்வு மாரத்தான் போட்டி நாகை மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகத்திலிருந்து தொடங்கியது. மாரத்தான் போட்டியை நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் கொடி அசைத்து வைத்து தொடங்கி வைத்தார். உடன் கீழ்வேளூர் சட்ட மன்ற உறுப்பினர் நாகை மாலி, மாவட்ட வருவாய் அலுவலர் பேபி, கூடுதல் ஆட்சியர் ரஞ்சித்சிங், நகரக் கழகச் செயலாளர்கள் நாகை இரா.மாரிமுத்து, நாகூர் எம்.ஆர். செந்தில் குமார், நாகை டி.எஸ்.பி. பாலகிருஷ்ணன், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் நாகரெத்தினம், நிகழ்ச்சி ஏற்பாட்டாளரும், மாவட்ட தி.மு.க. தொழிலாளர் அணி தலைவருமான எஸ். என் மோகன்தாஸ் உள்ளனர்.

### விழுப்புரம் மாவட்டத்தில்

# பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகள்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் பயனாளிகளிடம் ஒப்படைத்தார்!

மரக்காணம், பிப். 24-

விழுப்புரம் மாவட்டத்தில்பிரதம மந்திரிவீடுகள் கட்டும் திட்டத்தில்30 கோடியே 87 லட்சம் மதிப்பீட்டில் 1250 வீடுகள் கட்டப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. அதன் ஒரு பகுதியாக மரக்காணம் ஒன்றியம்பிரம்மதேசம் ஊராட்சியில்பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட புதிய வீடுகள் பயனாளிகளிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. விழுப்புரம் மாவட்ட கூடுதல் ஆட்சியர்ஸ்ருதன்ஜெய் நாராயணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு ரூ.13 கோடியே 80லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 500 வீடுகளை பயனாளிகளிடம் ஒப்படைத்தார்.

இதைத்தொடர்ந்து இரண்டாம் கட்டமாக சிறுவாடி ஊராட்சியில் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட புதிய வீடுகள் பயனாளிகளிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன்மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு விழுப்புரம் மாவட்டத்தில் 20 கோடியே 55லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட 750வீடுகள் ஒப்படைக்கும் நிகழ்ச்சியின்தொடக்கமாக மரக்காணம் ஒன்றியம் சிறுவாடியில் கட்டப்பட்ட வீடுகளை பயனாளிகளிடம் ஒப்படைத்தார்.

விழுப்புரம் மாவட்டத்தில் பிரதம மந்திரி வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் 30 கோடியே 87 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 1250வீடுகள்தற்போதுபயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் தூய்மை பாரத இயக்கத் திட்டத்தின் கீழ் 60 லட்சம் மதிப்பீட்டில் 500 தனிநபர் கழிவறை கட்டிடம் கட்டப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து வேப்பேரி அரசு மேல்நிலைக்குச் சென்ற அமைச்சர் செஞ்சி மஸ்தான் இடம் பள்ளிக்கு அடிப்படை தேவைகள், உள்ளிட்ட பணிகளுக்கு தலைமை ஆசிரியர் கோரிக்கை மனுக்களை வழங்கினார்.

கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்ட அமைச்சர் செஞ்சி மஸ்தான் உடனடியாக துறை சார்ந்த அதிகாரிகளிடம் தெரிவித்து கோரிக்கை நிறைவேற்றப்படும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் ரவிக்குமார், ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி, மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், மாவட்டச் செயற்பொறியாளர் ராஜா, வட்டாட்சியர் பாலா முருகன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருவேங்கடம், ஸ்ரீதர், பொறியாளர்கள் நவாஸ், செல்வம்,மாவட்ட கவுன்சிலர் புஷ்வல்லி குப்புராஜ், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் செந்தில்குமார், ஒன்றிய கவுன்சிலர் தேசம்பாலா, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### திருப்பத்தூர் மாவட்டம்

# ஜோலார்பேட்டை கிழக்கு, ஜோலார்பேட்டை மேற்கு, ஜோலார்பேட்டை மத்திய ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் திருத்தம்

## தலைமைக் கழகம் அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் திருப்பத்தூர் மாவட்டத்தில் 06.09.2021 அன்று பிரித்து "முரசொலி"யில் வெளியிடப்பட்ட ஜோலார்பேட்டை கிழக்கு, ஜோலார்பேட்டை மேற்கு, ஜோலார்பேட்டை மத்திய ஆகிய 3 ஒன்றியங்களில், பின்வரும் திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது.

அவ்வாறு பிரிக்கப்பட்ட ஜோலார்பேட்டை கிழக்கு, ஜோலார்பேட்டை மேற்கு, ஜோலார்பேட்டை மத்திய ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாக அமையும்.

**ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியம்** : 1.செட்டியப்பனூர், 2.நெக்குத்தி, 3.பெத்தகல்லுப்பள்ளி, 4.சின்னவேப்பம்பட்டு, 5.சின்னகல்லுப்பள்ளி, 6.சின்னமோட்டூர், 7.கலந்திரா, 8.பெரியமோட்டூர், 9.மண்டலவாடி, 10.கேத்தாண்டப்பட்டி,11.கூத்தாண்டு குப்பம், 12.காவேரிப்பட்டு, 13.சின்னகம்மியம்பட்டு, 14.பெரியகம்மியம்பட்டு, 15.பொன்னேரி, 16.ரெட்டியூர் ஆகிய 16 ஊராட்சிகள்.

**ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியம்**: 1.வேட்டப்பட்டு, 2.சோமநாயக்கன்பட்டி, 3.புள்ளானேரி, 4.திரியாலம், 5.அம்மணாங்கோயில், 6.அக்ராகரம், 7.கல்நார்சாம்பட்டி, 8.சந்திரபுரம், 9.மல்லப்பள்ளி, 10.பணியாண்டபள்ளி, 11.வெலக்கல்நத்தம் ஆகிய 11 ஊராட்சிகள்.

**ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியம்**: 1.ஏலகிரிமலை, 2.ஏலகிரி கிராமம், 3.அம்மையப்ப நகர், 4.கட்டேரி, 5.தாமலேரிமுத்தூர், 6.சின்னமூக்கனூர், 7.மூக்கனூர், 8.ஒட்டப்பட்டி, 9.புத்தகரம், 10.கோணாப்பட்டு, 11.பாச்சல் ஆகிய 11 ஊராட்சிகள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 22.2.2024

துரைமுருகன்
பொதுச்செயலாளர்
தி.மு.க.

# கழக இலக்கிய அணி மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு!

தி.மு.க. இலக்கிய அணி மாநில நிர்வாகிகள் கலந்தாய்வுக் கூட்டம் 27.2.2024 - திங்கள்கிழமை மாலை 4.30 மணியளவில் புலவர் இந்திரகுமாரி தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெறுகிறது.


இக்கூட்டத்தில் கழக இலக்கிய அணி புரவலர்கள், துணைத் தலைவர்கள், இணைச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், பொருளாளர் ஆகியோர் தவறாது கலந்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

**வி.பி.கலைராஜன்**
தி.மு.க. இலக்கிய அணிச் செயலாளர்

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கே.பி. கணேசன்

### பிப்ரவரி 24 (2017)



கழகம் தொடங்கிய காலம் முதல் 1997ஆம் ஆண்டு வரை தொடர்ந்து வீரபாண்டி ஒன்றியக் கழகச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் – தலைமை செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்து அப்பகுதியில் கழக வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

எஸ்.பாப்பாரப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர், வீரபாண்டி ஒன்றிய துணைப் பெருந்தலைவர், சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர், சேலம் மாவட்ட நிலவள வங்கி துணை தலைவர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

நெருக்கடிகால மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



பெரம்பலூர் நகராட்சிக்கும், எறையூர் மற்றும் பாடலூரில் அமைந்துள்ள சிப்காட்களுக்கும் சேர்த்து ரூ.366 கோடியில் கொள்ளிடம் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் அறிவித்த நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் ,கே.என்.நேரு அவர்களை, சென்னையில் உள்ள முகாம் அலுவலகத்தில், மேனாள் மத்திய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி., சந்தித்து நன்றி தெரிவித்தார். உடன் பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர் உள்ளனர்.

### விவசாயிகளின் நலன் காக்கும் வகையில்

# எண்ணற்ற திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!



புதுக்கோட்டை, பிப்.24 -

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், கடியாபட்டி ஊராட்சி, சந்தைபேட்டை பகுதியில், அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 18.02.2024 அன்று திறந்து வைத்து, ரூ.43,000 மதிப்புடைய நெல் பிரிக்கும் இயந்திரத்தினை துவக்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் நலன் காக்கும் வகையில் எண்ணற்றத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் விவசாயிகள் நலன் கருதி உருவாக்கப்பட்ட அமைப்புதான் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் ஆகும். அதனடிப்படையில் தமிழகம் முழுவதும் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, விவசாயிகளிடமிருந்து அதிக அளவில் நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. அதன்படி கடியாபட்டி ஊராட்சியில், அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறந்து வைக்கப் பட்டது.

இதன்மூலம் இப்பகுதி விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ளது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் விவசாயிகளினால் உற்பத்தி செய்யப்படும் நெல்லுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையிலும், உழைப்பிற்கு ஏற்ற லாபம் கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கிலும் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் கடந்த காலத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. அதன்படி தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை சிறப்போடு வழிநடத்தி வருகின்றார்கள்.

மேலும் பனங்குடி வருவாய் கிராமத்தில் 630 ஏக்கர் தகுதியான விவசாய நிலத்தில் 400 ஏக்கர் மட்டுமே நெல் பயிர் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் விவசாயத்திற்கு தகுதியான அனைத்து இடங்களிலும் விவசாயிகள் நெல் பயிரிட வேண்டும். இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் சன்ன ரகம் ரூ.23.10 காசுக்கும், பொது ரகம் ரூ.22.65 காசுக்கும் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. இதன்மூலம் தனியாரைவிட 33 சதவீதம் கூடுதலாக விலை கொடுத்து அரசால் பெறப்படுகின்றது. மேலும் நெல் கொள்முதல் நிலையத்தில் விவசாயிகள் நெல்மணிகளை கொடுத்தவுடன் உடனடியாக பணம் வழங்கப்படுகிறது.

இந்த அரசானது விவசாயிகள் நலன் காக்கும் அரசாக தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. எனவே விவசாயிகளுக்கு விதை, உரம், டிராக்டர் மற்றும் விவசாயத்துக்கு தேவையான இயந்திரங்கள் மானிய விலையிலும் வழங்கப்படுகிறது. இவை அனைத்தையும் விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு விவசாயத்தில் சிறந்து விளங்க வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் மேகலாமுத்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர் எம்.சீதாராமன், முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் பொன்.இராமலிங்கம், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் கலைவாணி சுப்பிரமணியன், ஒன்றிய குழு உறுப்பினர் பெரியசாமி, நகர்ப்புற வீட்டு வசதி வளர்ச்சி குழு உறுப்பினர் வி.ஆர்.இளையராஜா, வட்டார வளர்ச்சி அலுவலர் சரவணராஜா, கடியாப்பட்டி ஊராட்சிமன்றத் தலைவர் உமாமகேஸ்வரி சோமசுந்தரம், ஊராட்சிமன்ற துணைத் தலைவர் போஸ், ஊராட்சி செயலாளர் போ.குமரேசன், மூர்த்தி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### குளித்தலை தொகுதியில் - அய்யர் மலையில் 1200 அடி உயரத்தில் அமைந்துள்ள

# இரத்தினகிரீஸ்வரர் திருக்கோவிலுக்கு ரோப் கார் வசதி செய்து தரப்படுமா?

## சட்டப்பேரவையில் குளித்தலை இரா.மாணிக்கம் கேள்வி!



சென்னை, பிப்.24 -

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது குளித்தலை தொகுதியில் 1200 அடி கொண்ட அய்யர் மலையில் அமைந்துள்ள இரத்தினகிரீசுவரர் திருக்கோவிலுக்கு ரோப்கார் வசதி செய்துதரப்படுமா என்று கேள்வி எழுப்பினார்.

பேரவையில் இது தொடர்பாக நடைபெற்ற விவாதம் வருமாறு:

**இரா. மாணிக்கம்:** குளித்தலை தொகுதியில் உள்ள அய்யர்மலை இரத்தினகிரீசுவரர் திருக்கோயில் சுமார் 1,200 அடி உயரம் கொண்ட சிவன் கோயிலாகும். அந்த திருக்கோயிலுக்கு rope car வசதி வேண்டுமென்பது பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் கோரிக்கையாகும். நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் அதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, 2010 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது.

அதன் பிறகு வந்த ஆட்சியாளர்களால் அந்த திட்டம் கிடப்பில் போடப்பட்டு, அதன்பிறகு திராவிடர்கள் ஆட்சியின் முதல்வர் தளபதி அவர்களின் அமைச்சரவையில் இந்து சமய அறநிலையத் துறையின் அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, அமைச்சர் அவர்கள் அய்யர் மலையில் உச்சி மலைக்கு வந்து ஆய்வு செய்து, அதிகாரிகளை அறிவுறுத்தி விரைவில் அந்தப் பணியை முடிக்கச் சொல்லியிருந்தார்கள்.

அந்தப் பணிகள் எப்போது முடியும். அந்த rope car எப்போது வரும் என்று மக்கள் எல்லோரும் மிகுந்த ஆவலோடு இருக்கின்றார்கள் என்பதையும் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து எப்போது அது பயன்பாட்டுக்கு வரும்?

**பி.கே.சேகர்பாபு:** குற்றச்சாட்டாக அல்ல அவையின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் தேதி காலையிலே அந்த rope car மக்கள் பயன்பாட்டிற்கு அன்றைய அரசு அர்ப்பணித்ததாகக் கல்வெட்டு இருக்கின்றது. ஆனால், அந்தப் பணி என்பது 50 சதவிகிதப் பணிகள் கூட முடிவுறாத நிலையில் தவறான தகவலின் அடிப்படையில் அந்த rope carஐ செயல்பாட்டிற்குக் கொண்டுவருவதாக அறிவித்துவிட்டார்கள். அதன்பிறகு நம்முடைய உறுப்பினர் வைத்த கோரிக்கையை ஏற்று 1,201 படிகள் கொண்ட அந்த மலைக்கு நானும் நேரடியாக சென்று, அதிகாரிகளை அழைத்துச் சென்று ஆய்வு செய்தோம். கிட்டத்தட்ட கழிவறைகள் இல்லை. கழிப்பிட வசதி இல்லை. பயணிகள் வருகின்றபோது தங்குவதற்கு பக்தர்கள் தங்குகின்ற கூடம் இல்லை. அதேபோல், தண்ணீர் வசதி இல்லை. வருகின்ற வாகனங்களை நிறுத்துவதற்குண்டான வாகன நிறுத்துமிடம் இல்லை. இவையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவைப் பெற்று தற்போது 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, பணிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. வெகு விரைவாக அடுத்தமாத இறுதிக்குள் அந்த rope car மக்கள் பயன்பாட்டிற்கு வருவதற்குண்டான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுகின்ற பணிகளை மேற்கொண்டு இருக்கின்றோம். அதேபோல், சோளிங்கர் மலையினுடைய rope carம் அதே நாளில் மக்கள் பயன்பாட்டிற்கு அற்பணிக்கப்பட்டது. எந்தப் பணிகளும் நிறைவேறாமல் நம்முடைய மாவட்ட மாண்புமிகு அமைச்சர் காந்தி அவர்களுடைய தனிப்பட்ட முறையில் 12 கோடி ரூபாய் உபயதாரர் நிதி பெற்று தற்போது அனைத்துப் பணிகளையும் நிறைவு செய்து, இந்த மாத இறுதிக்குள் அதை மக்கள் பயன்பாட்டிற்கு தமிழக முதல்வர் அவர்கள் பொற்கரங்களால் ஒப்படைக்க இருக்கின்றார் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### செஞ்சி ஒன்றியத்தில்

# உயர்மட்டப் பாலம் - தார்ச் சாலை அமைக்கும் பணி!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் பணியை தொடங்கி வைத்தார்!

செஞ்சி, பிப்.24-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் பொன்பத்தி சக்கராபுரம் செல்லும் சாலையைதார் சாலையாக அமைத்து தர வேண்டியும், கோணைஅனந்தபுரம்கணக்கன் குப்பம் சாலையில் பழுதடைந்த கண்மாய்களை அகற்றி புதிய உயர்மட்ட பாலம் கட்டித் தர வேண்டும் எனஅப்பகுதி பொதுமக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று நெடுஞ்சாலைத்துறை கடலூர் கோட்டம் விழுப்புரம் உட்கோட்டம் சார்பில் நபார்டு மற்றும் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் 1 கோடியே 7 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பொன்பத்தி சங்கராபுரம் செல்லும் சாலையை தரம் உயர்த்தி தார் சாலையாக அமைப்பதற்கு, கோனை ஊராட்சியில் உயர்மட்ட பாலம் அமைக்கம் பணி தொடக்கம் பொன்பத்தி, கோணை ஊராட்சியில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் முன்னிலை வகித்தார்.ஊராட்சி மன்ற தலைவர்கள் அனுசுயா, பிருந்தா ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு பணியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் ஜெயபாலன். அரங்க ஏழுமலை, கணேசன், மணிவண்ணன், கார்த்திக், கண்ணன், அக்பர் அலி, ஏழுமலை, ஒன்றிய துரை, காமராஜ், செல்வமணி, பழனி, ஆறுமுகம், வாசு, பொன்பத்தி ரங்கநாதன், சந்திரசேகரன், மணி, ராஜ்குமார், அன்பு, கோணைகணேசன், லூர்துசாமி,தினகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# உடன்பிறப்பே... 46

**தி.மு.க. என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார் - அண்ணா - கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த சேலம் அ. சித்தையன் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

## சேலம் அ. சித்தையன்

## “புலிபோல நின்ற போர்வாள்!”




1951-ஆம் ஆண்டு மே 5 -ஆம் தேதி, சேலம் மாவட்ட மாநாடு தொடங்கி, முற்பகல் நிகழ்ச்சிகள் முடிவடைந்த நேரம். மாநாட்டில் திரண்டிருந்த கழகத்தினர் பேசப்பட்ட கருத்துகளை விவாதித்துக்கொண்டே, உணவு அரங்கிலும், நூல் விற்பனை அரங்கிலும், மாநாட்டுப் பந்தலிலும் கூட்டம் கூட்டமாக இருக்கிறார்கள்.

அந்த நேரத்தில் ஒரு அகோரப் புயல். பந்தல் இருந்த இடமே தெரியவில்லை. அலங்கோலம். அதைத் தொடர்ந்த மழையில் மாநாட்டுத் திடலே குளமானது. எல்லாம் சற்று நேரத்தில் முடிந்து விட்டது. ஆனாலும், கலங்கவில்லை கழகத்தினர். சற்று நேரத்தில் மாநாட்டுத் திடலுக்கு வெளியே, வெட்ட வெளியில் நிகழ்ச்சிகள் தொடங்கி விட்டன. இதனை இரண்டாம் நாள் சிறப்புரையாற்றிய பேரறிஞர் அண்ணா குறிப்பிடுகிறார் .

“அடித்தது ஆரியப் புயல் - திராவிடம் இன்று அலங்கோலப்படுத்தப்பட்ட பந்தல். ஆனால், கடமையே கருத்தில் கொண்ட காளைகள், பொறுப்புணர்ந்து பணியாற்றும் தீரர்கள், உணர்ச்சிமிக்க வாலிபர்கள், விழுந்த பந்தலை நிமிர்த்தி விட்டார்கள். ஆம், நாம் முயன்றால், சிதைந்த திராவிடத்தைச் சீராக்க முடியும் என்பதே, பந்தல் விபத்து தரும் பாடம்” என்றதுடன், ‘சேலம், செயலாற்றும் வீரர்கள் கூடாரம்’ என்றும் பெருமைப்பட்டார். ஆம், அதற்கு உரித்தானவர்களில் ஒருவர், அந்த மாநாட்டின் செயலாளர் சேலம். அ.சித்தையன்.

‘‘முதல்நாள் சூறாவளி ஏற்படுத்திய சேதத்தின்போது, விலாவிலே அம்புபட்ட புலிபோல, துடித்துவிட்டார் சித்தையன். இங்குமங்கும் ஓடி, வேலைகளை விரைவுபடுத்துகிறார். புது மூங்கில்கள் வரட்டும், மின்சார பல்புகளை மாற்றுங்கள், ஒலிவாங்கிகளுக்கு ஏற்பாடு செய்யுங்கள்” என மாநாடு தொய்வில்லாமல் நடக்கச் சித்தையன் செய்த முயற்சிகளை ‘திராவிட நாடு’ இதழ் பதிவு செய்தது.

அந்த சித்தையன், அண்ணாவின் தம்பிகளில் ஒருவர். கலைஞரைக் கண்போலப் பாவித்த அண்ணன்களில் ஒருவர். கழகம் தோன்றும் காலத்தே முக்கிய அங்கம் வகித்த உடன்பிறப்பு சேலம் அ.சித்தையன் . போர் வாளென முழங்கும் பேச்சாளர். அதிலும் முக்கியமாக, மாநாடு, பொதுக்கூட்டம் எனில், சித்தையன் ஒழுங்கு செய்தால் அதில் துளியும் குழப்பம் இருக்காது என்கிற பேச்சு, அவரின் செயலுக்குச் சான்று.

அவர் பொறுப்பெடுத்துக் கொண்டால், எந்த மாநாடும் வெற்றிதான் என்பதற்குப் பல மாநாடுகள் கட்டியம் கூறும். கழகத்தின் மாநாடுகள் மட்டுமல்ல, திராவிடர் கழகத்தில் நமது முன்னோடிகள் தீவிரமாக இயங்கிய காலத்திலும் மாநாடுகள் எனில், சித்தையன் பெயர் கூறுவார்கள்.

### பெயர் மாற்ற மாநாடு

1944 - ஆம் ஆண்டு சேலத்தில் அண்ணா தலைமை வகித்த மாநாட்டில்தான் நீதிக்கட்சியின் பெயர் ‘திராவிடர் கழகம் ’ என மாற்றப்பட்டது. அந்த மாநாட்டினை சேலத்தில் நடத்தவேண்டும் என முடிவு செய்த பின்னர், அதை முன்னின்று நடத்தி, அண்ணாவின் பக்கபலமாக நின்றவர் சித்தையன். அந்த வகையில் பேரறிஞர் அண்ணாவின் நம்பிக்கைக்குரிய கழகத் தோழர், தந்தை பெரியாரின் மானமிகு சீடர், திராவிடர் கழகத்தின் கொள்கை மறவர் எனப் பெயர் பெற்றவர்.

1948 ஆம் ஆண்டு, காஞ்சிபுரத்தில் ‘இரணியன் அல்லது இணையற்ற வீரன்’ நாடகத்தை நடத்தியதற்காக கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் சிறையில் இருந்து திரும்பியதும், சேலத்தில் வரவேற்பு விழாவை நடத்தினார் சித்தையன். தலைமை உரை சித்தையன். சிறப்புரை அண்ணா. இதுபோலத் தொடர்ச்சியாகப் பல பொதுக்கூட்டங்கள், நிகழ்ச்சிகளை நடத்தியவர் சித்தையன்.

சேலத்தில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் கழகத்தின் பொதுக்கூட்டங்கள், மாநாடுகள் எனில் சித்தையன் குரல் ஒலிக்காமல் இருக்காது. 1950 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், செங்கல்பட்டு மாவட்ட முதல் மாநாடு காஞ்சிபுரம் நகரில் நடைபெற்றது. அந்த மாநாட்டில், தமிழ்நாட்டு நெசவாளிகளை வடநாட்டு அரசு வஞ்சிப்பதாக அவர் எழுப்பிய கண்டனக் குரலை ‘திராவிட நாடு’ வெளியிட்டது.

“வடநாடு சதி செய்கிறது எனத் துணிந்து கூறலாம். தென்னாட்டிற்குத் துணி தராது, இங்குள்ள நெசவாளி மக்களை மாள வைப்பதன் நோக்கம், வடநாட்டு மில் துணிக்கு தமிழ்நாட்டில் அதிக மதிப்பையும் மார்க்கெட்டையும் உருவாக்க முயற்சி எடுக்கப்படுகிறது. இது தொழிலாளி சமூகத்திற்கு இழைக்கப்படும் துரோகம்” என அவர் குரலைப் பதிவு செய்திருக்கிறது.

**சென்னை ராபின்சன் பூங்காவில் கொட்டும் மழையில், கழகத்தின் கொள்கைப் பிரகடனத்தை உலகுக்கு அறிவித்தவர்களில் ஒருவர் சேலம் சித்தையன்.**

### ஒரே நாளில் இரண்டு கூட்டம்

1957- ஆம் ஆண்டு, சேலம் அரிசிப்பாளையத்தில் அண்ணா சிறப்புரையாற்றிய பொதுக்கூட்டத்தினை நடத்தினார் சித்தையன். அதே நாளில் சேலம் கோட்டையில் மற்றொரு கூட்டத்திலும் அண்ணா உரையாற்ற வேண்டும். முதல் கூட்டத்தில் அண்ணா பேசுகிறார், “ஒரு நாளில், ஒரு ஊரில், ஒரு கூட்டம் போதும் எனக் கருதுகிறேன். கழகம் வளர்ந்து விட்டதால், இரண்டு கூட்டம் போடுகிறோம்” என்றார். அந்த இரண்டு கூட்டங்களும் சித்தையன் ஏற்பாடுதான். ஏனெனில், கழகக் கிளைகளைத் தொடங்குவதில் அவர் காட்டிய முனைப்பு. அந்த முனைப்பு கழகம் தொடங்கிய காலம் தொட்டே அவரிடம் இருந்த வேகம்.

அதை சித்தையன் சொற்களிலேயே காணலாம். 1950-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் சென்னை மாவட்டக் கழகத்தின் முதல் மாநாட்டிற்கு அவர்தான் தலைமை தாங்கினார். அவரது உரையின் முக்கிய அம்சம்; “சங்கிலித் தொடர்புபோல, கிளைகளை நிறுவி சலியாது உழைப்போம்” என்பது.

ஜனவரி 28-ஆம் தேதி கழகத்தின் சென்னை மாநாட்டு செய்தியைத் தாங்கி வந்த ’மாலைமணி’ அவரது உரையை வெளியிட்டது. “கழகம் தொடங்கப்பட்ட நான்கு மாதங்களில் 414 கிளைக் கழகங்கள் தொடங்கப் பட்டுள்ளதுடன், 350-க்கும் மேற்பட்ட பொதுக்கூட்டங்களை நடத்தி இருக்கிறோம். நமக்குக் கிடைத்த வசதிகளை வைத்துப் பார்த்தால் இது அரிய சாதனை” எனக் கூறியிருந்தார். இப்படிப் பல அரிய சாதனைகளைப் பத்தாண்டுகளுக்குப் பிறகும் அதே வேகத்தில் ஒரே நாளில், ஒரே ஊரில் இரண்டு பொதுக்கூட்டங்கள் நடத்தியவர் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

சென்னை ராபின்சன் பூங்காவில் கொட்டும் மழையில், கழகத்தின் கொள்கைப் பிரகடனத்தை உலகுக்கு அறிவித்தவர்களில் ஒருவர் சேலம் சித்தையன். பேரறிஞர் அண்ணாவுக்குப் பின்னர் கலைஞரின் தலைமையினை ஏற்றுச் செயல்பட்ட முன்னோடிகளில் களங்கமற்றவராகவும் இருந்தவர் சித்தையன் அவர்கள்.

“கொள்கையில் நமக்கு இருக்கும் ஆழ்ந்த பற்றும், உறுதியும், இயக்கத் தோழர்களின் தளராத ஊக்கமும், உற்சாகமும், தளபதியின் தளராத உழைப்பும், சக்கரமெனச் சுற்றும் கழகப் பேச்சாளர்களின் சுறுசுறுப்பும் நம்மை நல்லதொரு நிலைக்குக் கொண்டு வந்துவிட்டது” என 1950-ஆம் ஆண்டு சித்தையன் முழங்கியது, காலத்தால் நிலைத்துவிட்ட, கல்வெட்டாகப் பொறிக்கப்பட்ட உண்மையாக, நம்மை உணர வைக்கும். அந்த முழக்கத்தை அடுத்த நூற்றாண்டுக்கும் கொண்டு செல்ல உறுதி ஏற்பதே, உண்மைத் தொண்டனாக நாம் செய்ய வேண்டிய கடமையாகிறது.

...துடிக்கும்

## இளைஞர்களைக் காவு வாங்கும் பா.ஜ.க அரசு?

உத்தரப்பிரதேச இளைஞர்களைச் சில விதிகளைத் தளர்த்தி இஸ்ரேலுக்கு வேலைக்கு அனுப்பியிருப்பதாகக் கடந்த மாதம் செய்திகள் வெளியாகின. பாலஸ்தீனப் படைகளுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே சண்டை நடக்கும் சூழலில், இது தேவைதானா என அப்போதே விமர்சனங்கள் எழுந்தன. இப்போது, நூற்றுக்கணக்கான இந்தியர்கள் கடந்த ஓராண்டில் ரஷ்ய ராணுவத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. கடந்த 2 ஆண்டுகளாக உக்ரைன் மீது ரஷ்யப் படை தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கிறது. இருதரப்பிலும் இழப்புகளும் தாக்குதல்களும் தொடரும் வேளையில் இந்தியா, பாகிஸ்தான், வங்க தேசம், உஸ்பெஸ்கிஸ்தான், கிர்கிஸ்தான் உள்ளிட்ட நாட்டவரையும் தங்கள் நாட்டு ராணுவத்தில் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொண்டிருக்கிறது ரஷ்யா.

விடுமுறை இல்லை, வெளியேற வேண்டுமானால், 6 மாதங்களுக்கு முன்பே தெரிவிக்க வேண்டுமென்ற கெடுபிடிகளும் விதிக்கப்பட்டிருக்கின்றன. சிலரது கடவுச் சீட்டுக்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. இப்படிச் சேர்க்கப்படும் வெளிநாட்டு இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்து, அவர்களை உக்ரைனுக்கு அனுப்ப, ரஷ்யா திட்டமிட்டிருக்கிறது எனக் குற்றச்சாட்டுக்கள் எழுந்திருக்கின்றன.

ஆனால், இக்குற்றச்சாட்டுக்களை ரஷ்யா மறுத்திருக்கிறது. எனினும் உக்ரைன் - ரஷ்யா எல்லையில் பணியாற்ற, 3 இந்தியர்கள் அனுப்பப்பட்டதாக சமீபத்தில் செய்திகள் வெளியாகின. ஜம்மு காஷ்மீரில் இருந்து சென்ற ஒருவர், “பயிற்சியின்போது நான் அடிபட்டு ஓய்வில் இருக்கிறேன். எங்களைப் போர் நடக்கும் பகுதிக்கு அனுப்பத் திட்டமிட்டிருக்கிறார்கள். எவ்வளவு முயன்றும் இந்தியத் தூதரகத்தைத் தொடர்புகொள்ள முடியவில்லை” என வீடியோ வெளியிட்டுள்ளார்.

## :ப்ளாஷ்பேக்





நாதன்

### மேஜை நினைவு!

என்னுடைய பிள்ளைகளுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் கேட்ட பிறகுதான் வெண்ணிலா, உதயசூரியன், தென்றல் என்று பெயர் சூட்டினேன். தலைவர் இல்லத்தில் இருக்கும் உணவருந்தும் மேஜை நான் செய்து கொடுத்தது என்பதால், ‘உணவருந்தும் போதெல்லாம் உன் ஞாபகம் வரும் யா’ என்பார் கலைஞர். 1985-ஆம் ஆண்டு எங்கள் குடும்ப விழா ஒன்றில் பங்கேற்பதற்காக அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய கழகத் தலைவருமான மாண்புமிகு தளபதி அவர்களையும், தயாளு அம்மாள் அவர்களையும், துர்கா ஸ்டாலின் அம்மையார் அவர்களையும் தலைவர் கலைஞர் அனுப்பி வைத்தார். அப்போது அவர்களுடன் நானும் என் துணைவியாரும் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**-இரா.நாதன்,**
**தலைமைச் செயற்குழு உறுப்பினர்,**
**உத்திரமேரூர், காஞ்சிபுரம் மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ‘விடுதலை’யின் வரலாறு!

**1935-ஆம் ஆண்டு ஜூன் 27 அன்று நீதிக்கட்சியின் சார்பாக, ‘விடுதலை’ ஏடு தொடங்கப்பட்டது. அப்போது வாரம் இருமுறை ஏடாக வந்தது. இந்தப் பெயரைப் பரிந்துரைத்த ஜஸ்டிஸ் ஆசிரியர் டி.ஏ.வி. நாதனே, இதன் முதல் ஆசிரியர். விடுதலை தொடங்கப்பட்டதை வரவேற்று ‘குடிஅரசு’ இதழில் எழுதினார் பெரியார். நீதிக்கட்சித் தலைவர்கள் பலர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, 1937-இல் ‘விடுதலை’ ஏட்டின் பொறுப்பையும் பெரியாரே ஏற்றுக்கொண்டார். இப்போதும் திராவிடர் கழகத்தின் அதிகாரப்பூர்வ நாளேடாகத் தொடர்கிறது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 398




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131